# விக்கினேசன்

85 ஆவது

## ஆண்டு விழாவும் பரிசளிப்பு நிகழ்வும்

## 1932 – 2017





## யா / விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!

சூழ்கலி நீங்கத் தமிழ் மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லையகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் மறிந்து
வளர்மொழி வாழியவே!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

85ஆவது ஆண்டு விழா

# யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்

## 85 ஆவது ஆண்டு விழா மலர்

1932 - 2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மகுட வாசகம் (Motto)

"கற்று உணர்ந்து ஒழுகு"

## நோக்கு ( vision )

பாடசாலைக்கு உள்வாங்கப்படும் மாணவர்கள் அனைவரும் பாடசாலையை விட்டு வெளியேறும் போது அத்தரங்களுக்குரிய சகல விருத்திகளையும் பெறச் செய்தல்.

## பணிக் கூற்று ( Mission )

நேரவிரயம், வளவிரயம் இன்றி பாடசாலையில் பணிபுரியும் கல்விசார், கல்விசாரா அலுவலர்களின் செயற்பாட்டுடன் எமது பாடசாலை சமூகத்தவருடைய உதவிகளையும் பெற்று முழுமையான இணைபாட விதானச்செயற்பாட்டின் மூலம் பண்புசார் விருத்தியை உருவாக்கல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்கீதம்

நாடுயரும் கல்வி நலம் பெறுவோம் - வாழ்வில்
நீடு புகழ்சேர வீடு பெற

அனுபல்லவி

பாடத்திலே வீட்டுப்பழக்கத்திலே பூவில்
தேடற்கரிய அறிவாரம் புனைந்திடுவோம்

சரணம்

வாடையிலே மலர் ஓடையிலே தமிழ்
மேடையிலே காணும் இன்பமெல்லாம்
நாடிவரும் கலை தேடி நாம் கற்றிடும்
ஞானமணம் பரப்பும் நான்மலர்க்காவில்

ஆடல் பாடலொடு அதிமதுரத் தமிழ்
தேடற்கறிவு தரும் தகவல் தொழில்நுட்பம்
கூடை முறங்களில் வேலைகள் யாவையும்
கொடுக்கும் விக்னேஸ்வர மகாவித்தியாலயம் தனில்

அறிவொளிர் வாழ்க்கையும் அரிய சன்மார்க்கமும்
பிறர்க்கென வாழ்தலும் பெருகிடச் செய்திடும்
மறுவிலா சிரியரும் மாண்புசேர் அதிபரும்
மாநிலம் போற்ற நீடூழி வாழ்க நீடூழி வாழ்க.... நீடூழி வாழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விக்கினேசனின் உள்ளே..


- ஆசிச் செய்திகள்
- வாழ்த்துப்பா
- வாழ்த்துச் செய்திகள்
- வரலாற்றுத் தொகுப்பு
- ஆசிரியர் விபரம்
- ஆசிரியர்களின் ஆக்கங்கள்
- மாணவர்களின் ஆக்கங்கள்
- பாடசாலை அதிபரின் அறிக்கை
- பரிசில் பெறுவோர் விபரம்
- நன்றியுரை


முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


தலைப்பு :- "விக்கினேசன்"

இதழாசிரியர் :- திரு.க. சுதேஸ்கரன்

வெளியீடு :- யா/மீசாலைவிக்கினேஸ்வர மகா வித்தியாலயம்

பதிப்பு :- 2017.11.12

அச்சுப்பதிப்பு :- கிங்ஸ் பதிப்பகம், கண்டி வீதி,

புத்தூர்ச் சந்தி, மீசாலை.

021-2050495

ஒளிப்படம் :- விஜேந்திரா ஸ்ரூடியோ

பிரதிகள் :- 400

பக்கங்கள் :- 135

அளவு :- B5




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Principal




MR. S.SIVANANTHAN [ B.B.A(Hons), Dip.in.Edu, Med, SLPS ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு

- ❖ தலைவர் - திரு. சு.சிவானந்தன்
- ❖ உபதலைவர் - திரு. சு.கோடீஸ்வரன்
- ❖ இதழாசிரியர் - திரு. க.சுதேஸ்கரன்

**உறுப்பினர்கள்**

- ❖ திருமதி சு.சசிகுமார்
- ❖ திருமதி ந. இரவிக்குமார்
- ❖ திருமதி ஜெ. கலையரசன்
- ❖ திருமதி அ. கருணாகரன்
- ❖ திரு. க. ரஜனிகாந்தன்
- ❖ செல்வி வி. சுமதி
- ❖ திரு மா. மகேந்திரன்
- ❖ திரு சு. சிவசுதன்
- ❖ திரு க. சோமசுந்தரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை தொடர்பான அடிப்படை விபரம்

1. பாடசாலையின் பெயர் : யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்
2. பாடசாலை முகவரி : டச்சு வீதி, மீசாலை மேற்கு, மீசாலை
3. கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும் : மீசாலை மேற்கு, J/319
4. பிரதேச செயலர் பிரிவு : தென்மராட்சி
5. கோட்டம் : சாவகச்சேரி
6. பாடசாலை இலக்கம் : 1003009
7. பாடசாலை தொகை மதிப்பு இலக்கம்: 09360
8. பாடசாலை வகை : 1C
9. வகுப்புகளின் பரம்பல் : 1-13
10. மொழி மூலம் : தமிழ்
11. ஆசிரியர்கள் எண்ணிக்கை : 24
12. மாணவர்கள் எண்ணிக்கை :106
13. தொலைபேசி இலக்கம்: 0213734226
14. ஈமெயில் முகவரி : www.mvmv.sch.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கடமையாற்றிய அதிபர்களின் விபரங்கள்

| இல | பெயர் | இருந்து | வரைக்கும் |
|---|---|---|---|
| 1 | திரு சி.சிதம்பரப்பிள்ளை | 1932 | 1948 |
| 2 | திரு மு.கந்தையா | | |
| 3 | திரு சி.சின்னத்துரை | | |
| 4 | திரு சு.முருகேசு | | |
| 5 | பண்டிதர் சி.க.தம்பையா | 01.10.1945 | 31.12.1970 |
| 6 | திரு ஆ.நாகராசா | 1971 | 1973 |
| 7 | திரு நாகலிங்கம் இராசநாயகம் | 1974 | 1986 |
| 8 | திரு கு.கேசவன் | 1987 | 1988 |
| 9 | திரு க.செல்லத்துரை | 04.03.1988 | 12.04.1989 |
| 10 | திரு இ.கணேசன் | 19.04.1989 | 31.12.1990 |
| 11 | திரு செ.சுப்பிரமணியம் | 01.01.1991 | 30.04.1992 |
| 12 | திரு மா.சாம்பசிவம் | 01.05.1991 | 09.01.1994 |
| 13 | திரு சி.கந்தசாமி | 10.01.1994 | 31.12.2003 |
| 14 | திரு ந.ஜெயகுமாரன் | 01.01.2004 | 19.09.2004 |
| 15 | திரு கு.கதிர்காமசேகரர் | 20.09.2004 | 20.06.2009 |
| 16 | திரு த.அம்பலவாணர் | 09.07.2009 | 02.07.2013 |
| 17 | திரு வி.கணபதிப்பிள்ளை | 12.03.2014 | 31.08.2016 |
| 18 | திரு சு.சிவானந்தன் | 13.09.2016 | இன்று வரை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1970 இல் கடமையாற்றிய ஆசிரிய ஆளணியினர்
(ஆவணப்படம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி

## வித்தக விருட்சம் விக்கினேசன்

இவ்வுலக வாழ்வை வெற்றி கொள்வதற்கு நாம் ஆலயத்திற்கும் வித்தியாலயங்களிற்கும் செல்வது மிக அவசியமாகின்றது. ஆலயங்களில் ஆன்மா லயப்பட்டு நன்னெறிகளின் பிரகாரம் மனிதன் வாழ்கின்றான். வித்தியாலயங்களில் வித்தியா (கல்வி, அறிவு) பண்புள்ளவனாகவும் துறை சார்ந்த நிபுணத்துவம் உடையவனாகவும் மிளிர்கின்றான்.

அந்த வகையில் யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம் தனது பணியைச் சிறப்பாக செய்து நற்பிரஜைகளை உருவாக்கியுள்ளது என்பதில் எதுவிதமான ஐயப்பாடுமில்லை. தனது சாதனைகளை மீள் நினைவுபடுத்தல் காலத்தின் கட்டாய தேவையாகும். இதனடிப்படையில் நல்ல தலைமைத்துவங் களைக் கொண்டு மறுமலர்ச்சியுடன் 85ஆவது அகவையில் தடம் பதிக்கின்றது. இதன் அங்கமாகவே "**விக்கினேசன்**" என்னும் நூலையும் வெளியிடுகின்றது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

மறுமலர்ச்சியின் தலைமைத்துவங்கள் இன்று எல்லா வளங்களையும் நெறிப்படுத்தி வித்தியாலயத்தின் வளர்ச்சியிலும் மாணவர்களது முன்னேற்றத்திலும் அக்கறை செலுத்துவது இறைவனுடைய கிருபா கடாட்சமே ஆகும்.

துள்ளித் திரிகின்ற எண்ணத்தையுடைய மாணவர்கள் தம்மைத் தாமே நெறிப்படுத்துவார்கள். இதனுடைய எதிர்கால பலா பலன்களை பொருட்படுத்த மாட்டார்கள். இவற்றை அன்பாக உபதேசித்து நற் பிரஜைகளாக்கின்ற பொறுப்பு வித்தியா குருமார்கள், மதகுருமார்கள் ஆகியோரையே சாரும். இன்றைய கால கட்டத்தில் மாணவர்களுக்கும் பெற்றோருக்கும், வித்தியா குருமார்க்கும் இடையேயான தொடர்பும் தொடர்பாடலும் சுமூகமாக அமைந்தால் தான் மாணவர்களுக்கு புரிந்துணர்வை ஊட்டமுடியும். இவ்வாறு மூவரையும் ஒன்றிணைத்து நெறிப்படுத்துகின்ற தலைமைத்துவம் காணப்படுவது மிகவும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அன்பு, அறிவு, ஒழுக்கம், உயர்வு, என்பன மேன் மேலும் வளர இறைவனைப் பிரார்த்தித்து விக்கினேசன் என்னும் மலருக்கு ஆசி கூறுவதும் இறைவன் திருவருளே என்று கூறி எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சிவஸ்ரீ. வி. பாலகுமாரக் குருக்கள்,**

*கிராம்புவில், சாவகச்சேரி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிச் செய்தி
## தென்மராட்சியின் தேசத்து நிழல்

தென்மராட்சி தேசத்து நிழலாய், தேடி வந்த மாணவச் செல்வங்களின் திசையறி கருவியாய், வானைமுட்டும் வளர்ந்திடச் செயல் வடிவ ஊக்கம் பிறப்பிக்கும் கல்விப்பட்டறையாகி, கடந்து போகும் எவரும் சற்றுப் பொறுத்துப் போகும் சுமை தாங்கியாகி, காலச் சக்கரத்தில் எத்தனை பரம்பரை கண்டு மீண்ட கல்வியறிவுடைய பட்டறிவாளர்களின் கல்விக் கூடமாகி, துளைத்தெடுத்த போரின் காயங்களில் அரணாகி, அகதிவடிவம் பெற்றபோது அன்னைமடியாகி, அன்று தொட்டு இன்றுவரை ஏழையையும், செல்வந்தனையும் ஒன்றாகக் கருதி கல்வியறிவைக் கல்விக்காகப் புகட்டி சீராளரையும் பேராளரையும் உருவாக்கி தமிழ் மண்ணின் பெருமை சேர்த்து 85 ஆண்டுகள் என்னும் நீண்ட கால அனுபவத்துடன் சிறந்து நின்று என்றும் வீர நடையுடன் அதிபர்களால், ஆசிரியர்களால், மாணவர்களால், அனைத்துப் பங்காளிகளால் கட்டிக் காத்த பெருமையுடன் நிமிர்ந்து நிற்கும் விக்கினேஸ்வர மகா வித்தியாலயத்தின் சிறப்புற்ற இந்த 85 ஆவது ஆண்டு நினைவு நாள்களில் ஒன்றான மெய்த்தேவனின் ஆசீர்வாதம் ஆண்டாண்டு காலமாய் சிறந்து விளங்கி செய்யும் பணி வரலாறுக்கு ஒரு வரலாறாய் அமைய எங்கள் வாழ்த்துக்கள் என்றும் இருப்பதாக.

**அ. அனிஸ்வரன்,**
*போதகர்,*
*சீயோன்தேவாலயம்,*
*மீசாலை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிக விக்கினேசன்...

நற்குஞ் சரக்கன்று நண்ணின் கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காணென்ற உமாபதியின்
சொற்கொண்டு கல்வியில் சோதியென நின்றுழைக்கும்
வெற்பாக விக்கினேஸ் வரவை நிறுவியுள்ளார்.

ஆயிரத்துத் தொளாயிரத்து முப்பத்து இரண்டினிலே
பாயிரமாய்க் கல்வித் தொடக்கமிட்டு மீசாலை
வாயுரம் பெறவே வாழ்கல்விக் கோலமிடும்
தாயவளே உனைவாழ்த்தும் தனையன் மலரிதுவே

உன்னை வளம்படுத்தும் உயரதிபர் பலர்வந்தார்
அன்னை உனைவாழ்த்தி ஆசிரியர் பலருழைத்தார்
கன்னித்தமிழ் சமயம் கணிதமொடு விஞ்ஞானம்
நன்னெறி காட்டும் நற்கல்வி பலகொடுத்தாய்

காண நூறாயிரமாய்க் கல்விபயில் மாணவர்கள்
பேணும் ஒழுங்கிற்கு வித்தானாள், மறவாத
வேணவா வோடு "விக்கினேசன்" மலர்புனைந்தோம்
தேனுகர் வண்டுகளாய் உளங்கொண்டு: பிழைபொறுப்பீர்

கல்வித் தொடர்புடைய கவின்தமிழ் இதிலுண்டு
நல்ல மனம் வளர்க்கும் நல்லுரைகள் பலவுண்டு
சொல்விற்பனம் கொண்ட சோபைகளும் இங்குண்டு
எல்லாம் உங்கள் கைகளிலே! இதழ் விரியும்.

மலர்க்குழுவினர் சார்பாக

**திரு. ச. மார்க்கண்டு**
விரிவுரையாளர்,
தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக தொலைக்கல்விப் பிரிவு
தமிழ் இணையக் கல்விக்கழகம்,
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

இயற்கை எழில்மிகு சைவத் தமிழ்ப் பண்பாட்டுச் சூழலில் அறிவு, திறன்சார் வாழ்வியல் நெறிமுறைகளை காலவோட்டத்தில் அவ்வப் பொழுது ஏற்பட்ட நல்ல மாற்றங்களை உள்வாங்கி தனக்கே உரித்தான தனித்துவ சிறப்பியல்புகளுடன் என்றும் பொய்யாது சுடர் விட்டுப் பிரகாசிக்கும் பகலோன் போன்று மீசாலை எனும் பகுதியின் இருதயமாகக் கடந்த 85 வருடகாலமாக கல்விசார் பல பரிமாணம் மிக்க கழக மாந்தரைச் செம்மையுறச் செய்யும் அரிய நற் பணியினை யா/மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயம் செவ்வனே ஆற்றி மக்களின் மனங்களில் பசு மரத்து ஆணி போன்று என்றும். அழியாத நிலையான என நினைவுத் தடத்தினை ஆழமாகப் பதித்து வந்துள்ளதென்றால் என்றும் மிகையாகாது எனலாம்.

மாறுபட்ட குடும்ப, சமூக, பண்பாட்டுத் தளங்களில் இருந்து வெவ்வேறு பட்ட உணர்வுக் கோலங்களைப் பிரதிபலிக்கின்ற தனித்துவமான இயல்புகள் மற்றும் நடத்தைக் கோலங்களை உடைய மாணவர்களை உள்வாங்கித் தேசிய சமூகப் பொது வாழ்விற்குச் செம்மைப்படுத்துகின்ற அகல் விரிவான சாவால் மிக்க கனதியான செயற்பாடுகளின் குவிமையமாகப் பாடசாலைகள் திகழ்கின்றன. இந்த வகையில் சமூகப் பொறுப்பு வாய்ந்த அரிய மனித வளத் தொகுதியினரை உரிய வகையில் நெறிப்படுத்தவதன் ஊடாக செயலூக்கம் மிக்க சிந்தனைக் கோலங்களை உருவாக்குகின்ற ஆளுமைத் திறன்கள் கொண்டவர்களாக மிளிரச் செய்கின்ற சிறப்புறு பணியை பாடசாலைகள் மேற்கொள்கின்றன.

ஆலயங்களும், பாடசாலைகளும், ஒரு கிராமத்தின் இரு கண்களுக்கு ஒப்பானவை! உள விருத்தியின் ஊடாக ஆன்மீக ஈடேற்றத்திற்கு வழிகாட்டுபவைகள் ஆலயங்கள் ஆகும். ஆனால் உடல், உள ஆளுமை விருத்திக்கு உதவுவதன் ஊடாக சமூக நிலைபேற்றுக்கும் சமூக நிறுவனத்தின் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்கும் கீர்த்தி மிகு சேவையைப் பாடசாலைகள் மேற்கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த 30 வருட யுத்தத்தினால் யாழ்ப்பாணச் சமூகப் பொது வாழ்விலும் பண்பாட்டுக் கூறுகளிலும் ஏற்பட்ட தாக்கங்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் யா/ மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயத்தின் வரலாற்றுப் பதிவுகள் மாற்றம் கண்டு வந்திருக்கின்றன. ஏனைய பிரதேச மக்கள் இடம் பெயர்ந்து வந்த பொழுது அவர்களை அரவணைத்து தனது இயலாமைக்கப்பால் சேவையாற்றிய அனுபவத்தைப் பெற்றதைப் போன்று பிறிதொரு தருணத்தில் இக் கிராம மக்கள் இடம் பெயர முற்பட்ட பொழுது இப் பாடசாலையின் வளர்ச்சி சவாலுக்குரியதாக மாறியது. மீள் குடியமர்வின் பின் இப் பாடசாலை தனது சொந்த இடத்தில் குறைந்தளவு மாணவர் எண்ணிக்கையுடன் இயங்கி வரினும் இப் பாடசாலையின் நினைவலைகளுடன் உலகெங்கும் பரந்து வாழும் பழைய மாணவர்கள், மற்றும் சமூக நல விரும்பிகளின் நல்லெண்ணச் செயற்பாடுகளினால் இப் பாடசாலை தனது முன்னைய வளர்ச்சிப் படி நிலைகளை மேவிச் செயற்படும் என்பதில் ஐயமில்லை.

தற்போதைய அதிபரின் சீரிய தலைமைத்துவம் ஆசிரியர் குழாமின் அர்ப்பணிப்பான சேவை மற்றும் சமூக மாற்றங்களின் ஆதரவு என்பவற்றுடன் 85ஆவது பூர்த்தி விழா கொண்டாடப்படுவதையொட்டி வெளிவருகின்ற **விக்கினேசன்** என்னும் மலருக்கு எனது நல்லாசிகளை நல்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**திரு. சுப்பிரமணியம் சுந்தரசிவம்,**
வலயக்கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

## விழா சிறக்க நல் வாழ்த்துக்கள்

தென்மராட்சி மண்ணில் அமைந்துள்ள மீசாலை பிரதேசத்தில் வாழும் மாணவர்களின் கல்வித் தேவையை பூர்த்தி செய்யும் சிறந்த பாடசாலையாகத் திகழும் யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம் தனது 85ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தும் பரிசளிப்பு மற்றும் ஆண்டு விழா நிகழ்வில் வெளிவரும் இம்மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1932ம் ஆண்டு 27 மாணவர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை குறித்த வருடத்தில் செப்டம்பர் மாதத்திலேயே அரசாங்கத்தின் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக அங்கீகாரம் பெற்றமை இப் பாடசாலையின் வளர்ச்சிக்குப் படிக்கல்லாக அமைந்தது. காலத்திற்குக் காலம் கடமைகளைப் பொறுப்பேற்ற அதிபர்களின் விடாமுயற்சியினாலும் தற்றுணிவினாலும் இப்பாடசாலையானது மாணவர் களின் தொகை அதிகரிப்பிலும் கல்வி முன்னேற்றத்திலும் மேலோங்கிச் சென்றது. கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட நன்கொடைப் பண உதவியுடன் இங்கு கல்வி கற்ற பழைய மாணவர்கள் பெற்றோர்களின் பங்களிப்புடன் பாலர் வகுப்பறைகளை உள்ளடக்கிய கட்டடம் அமைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. நாளடைவில் பல்கிப் பெருகிய மாணவர் எண்ணிக்கைக்கேற்ப விஞ்ஞான ஆய்வு கூடம், மனையியற் கூடம், விவசாய கூடம் ஏனைய பாடங்களுக்குரிய வகுப்பறைகள் மண்டபங்கள் என்பன நிறுவப்பட்டு இவ்வித்தியாலயமானது கல்வியில் முன்னேறிச் சென்றது. இங்கு 1975-ம் ஆண்டு தொடக்கம் பகுதி நேரத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம் மற்றும் வளர்ந்தோர் கல்வி நிலையம் ஆகியனவும் இயங்கி வருகின்றமை பாராட்டத்தக்கதாகும். சாரணர் இயக்கம், முதலுதவிப் படை மற்றும் பல சங்கங்கள் உருவாக்கப்பட்டு பல்வேறு வகையில் பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்ட இவ்வித்தியாலயமானது 1980ம் ஆண்டு மகாவித்தியாலயமாகத் தர முயர்த்தப்பட்டமை யானது பிரதேச மக்களிற்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பிரதேச மாணவர்களுக்கு நிறைந்த கல்வியை வழங்கும் சிறந்த பாடசாலையாகத் திகழும் இவ் வித்தியாலயத்தின் வெற்றிக்கு காலத்துக் காலம் பணியாற்றிய அதிபர்கள், நல்லாசிரியர்கள், மாணவர்கள் இக் கிராம மக்கள் ஆகியோரின் ஒன்றுபட்ட முயற்சியே காரணமென்றால் அது மிகையாகாது. இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் பாடசாலை முதல்வர், ஆசிரியர்கள், கல்வித் திணைக்கள சமூகத்தினர், தொண்டு நிறுவனங்கள், அபிவிருத்திச் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், பெற்றோர்கள், இக் கிராம மக்கள் யாபேரும் என் பாராட்டுக்குரியவர்கள்.

"கற்று உணர்ந்து ஒழுகு" எனும் மகுட வாசகத்தைக் கொண்ட இவ் வித்தியாலயத்தின் கொடியானது ஞானத்தையும், வீரத்தையும் புகழையும் சுட்டிக்காட்டி நிற்கின்றது. சைவ பாரம்பரியங்களையும் தமிழையும் வளர்க்கும் நோக்கில் உருவாக்கப்பட்ட இவ்வித்தியாலயம் இணைபாடவிதானச் செயற்பாடு மற்றும் கல்வி வளர்ச்சியில் மேலோங்கி மாணவர்களுக்கு நல்லறிவு புகட்டும் வித்தியாலயமாகத் திகழ எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு இம்மலர் அழகுமிளிர மலர்ந்திட எல்லாம் வல்ல இறைவனின் நல்லாசிகளை வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி. தேவந்தினி பாபு,**
பிரதேச செயலர்,
தென்மராட்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புது மிடுக்குடன் நேர்வழி ஒழுங்கில் தடம்பதிக்கும் யா/விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்

1932 ஆம் ஆண்டில் மீசாலையூர் அபிமானிகளினதும் இந்துபோர்ட் இராசரட்ணத்தினம் அவர்களினது வழி காட்டலிலும் உருவாக்கம் பெற்ற இப்பாடசாலை எண்பத்தி ஐந்து ஆண்டுகளைக் கடந்து வெள்ளி,பொன், வைர, பவள, அமுத விழாக்களைக் கண்டு நூற்றாண்டு விழாவை நோக்கி வீறுநடை போடுவதற்குக் காரண கர்த்தாக்களான இப்பாடசாலைச் சமூகத்தினர் முதற்கண் பாராட்டப்பட வேண்டியவர்கள். இன்றைய தனது வரையில் பதினைந்துக்கும் மேற்பட்ட மதியுரை அதிபர்கள் பலரது பன்முக ஆளுமைகளுடனான முகாமைத்துவ மாண்புகள் இப்பாடசாலையின் வளர்ச்சிப் போக்குக்கு தடம் பதித்தன என்பது வரலாற்றின் வெளிப்படுத்தல்.

காலத்துக்குக் காலம் அமுலாகி வரும் புதிய புதிய கல்விச் சீர்திருத்தங்களின் வாயிலாக பாடசாலை வகைப்படுத்தல்கள் மாறிவரும் அரசியல் நலன் சார்ந்த போக்குகள் என்பவை பாடசாலைகளின் முக்கியத்துவத்தின் ஏற்ற இறக்கங்களை தீர்மானிக்கும் மூலங்களாக அமைந்து வந்துள்ளது. இதனைச் சான்றுப்படுத்தும் உதாரணங்கள் பல உண்டு. இப்பின்னணியில் இப்பாடசாலையை 12.09.2016 முதல் பொறுப்பேற்றிருக்கும் மதிப்புக்குரிய திரு. சுந்தரமூர்த்தி சிவானந்தன் அவர்களது அயராத முயற்சி அர்ப்பணிப்பான ஆசிரிய குழாத்தினது வழிகாட்டல்கள் மற்றும் சமூகத்தினது அதீத கரிசனைகள் போன்றவை இப்பாடசாலை எதிர்காலத்தில் ஒரு உயர்வான நிலைக்கு வருமென்பதைக் கட்டியம் கூறி நிற்கின்றது.

இவ்வகையில் இப்பாடசாலையின் தற்போதை நிர்வாக நடைமுறைகள் போற்றத்தக்க முகாமைத்துவ பாங்குகள் மட்டுமல்லாது வினைத்திறன் மிக்க நோத்தியான வழித்தடத்தை பேணுவதற்கான அடித்தளத்தை செப்பனிடுவதில் மேற்கொள்ளப்படும் பகீரத பிரதயத்தனங்கள் பாராட்டுக்குரியவை.

மாணவர் பாராளுமன்ற செயற்பாடுகளை வினைத்திறன் மிக்க வகையில் அமுலாக்கி எதிர்காலத்தில் விழிப்புணர்வு மிக்க இளையோர் சமூகம் ஒன்று உருவாகுவதற்கு வழிசமைத்ததையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றேன். அதற்கு அடித்தளமிட்ட பாடசாலை சமூகத்தினரின் தீர்க்கமான ஒரு வரலாற்றுப் பதிவு மலருக்கு உழைத்த அனைவருக்கும் எனது நன்றிகள்.

**திரு. சு. கிருஸ்ணகுமார்,**
முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர்,
தென்மராட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

யா/மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயம் தனது 85 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதையிட்டு தனது "விக்கினேசன்" என்ற மலரை வெளியிடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். கொலைக்கலாசாரம் S. செல்லத்துரை கொலை செய்யப்பட்டதனை அடுத்து நான் இப்பாடசாலைக்கு கல்வித்திணைக்களத்தினால் அதிபராக அனுப்பப்பட்டேன். ஏறக்குறைய இரண்டு ஆண்டு காலம் இப்பாடசாலையில் அதிபராகக் கடமையாற்றி பாடசாலையில் ஒழுக்கம், கல்வி ஆகியன தொடர்பாக என்னால் ஆனவற்றைச் செய்து இயல்பு நிலைக்குக் கொண்டு வந்தேன். இந்த இரண்டு வருட காலமும் இங்கு கற்ற மாணவர்கள் கற்பித்த ஆசிரியர்கள், பெற்றோர்கள் ஆகியோர்களது அன்பையும் ஆதரவையும் பெற்று பாடசாலையை வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச் சென்றேன். பின்னர் பதவி உயர்வு பெற்று கோட்டக்கல்விப்பணிப்பாளராகவும் பிரதிக்கல்விப்பணிப்பாளராகவும், தென்மராட்சிக்கல்வி வலயத்தில் கடமையாற்றிய போது பாடசாலையின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் என்னாலான சகல உதவிகளையும் செய்தேன்.

இன்று தனது வரலாற்றில் 85 ஆவது ஆண்டினை நிறைவு செய்யும் யா/மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயம் மேலும் வளர்ச்சி பெற எனது நல்லாசிகள். யா/மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலய பாடசாலைச் சமூகத்தினரால் 85 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் "விக்கினேசன்" மலர் வெளியீட்டுக்கும் பரிசளிப்பு விழாவுக்கும் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**இ. கணேசன்,**
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சிக் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

## விழா சிறக்க நல் வாழ்த்துக்கள்

யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம் எண்பத்தைந்து ஆண்டுகளாக கல்விச் செல்வத்தை அள்ளி வழங்கி இன்று விழாக்காண்பதையிட்டும் அதனைக் குறித்து வெளிவரும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கச் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டும் மகிழ்ச்சி அடைகிறேன்.

“அன்னசத்திரம் ஆயிரம் அமைத்தல் ஆலயம் கட்டல் என்பவற்றிலும் ஏழைகளுக்கு எழுத்தறிவித்தல் புண்ணியம் கோடி” என்ற பாரதியின் வார்த்தைக்கு இணங்க மீசாலை வாழ் புத்தி ஜீவிகளினது முயற்சியால் 05.10.1932 இல் உத்தியோக பூர்வமான கல்வி நிலையமாக ஆரம்பிக்கப்பட்ட இவ் வித்தியாலயம் கால ஓட்டத்தில் ஆளுமை மிக்க அதிபர்களின் தலைமைத்துவத்தினால் பல்வேறு படிகளில் வளர்ச்சியுற்றமையைக் காணலாம். மீசாலை வாழ் மக்களினதும் அயற்கிராம மக்களினதும் கல்வி வளர்ச்சியில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பங்களிப்பினை வழங்கிவரும் இவ் வித்தியாலயம் தற்காலத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்கள், அயற் பாடசாலைகளின் வளர்ச்சி பொருளாதார மேம்பாட்டுடன் கூடிய வாழ்வாதார உயர்வுகள் மனித ஆளுமை வேறுபாடுகள் போன்ற இன்னோரன்ன சிறிது தளர்வுகள் ஏற்பட்ட போதும் மீண்டும் மேல்நோக்கிய அசைவை வெளிப்படுத்தி நிற்பது மகிழ்வைத் தருகிறது.

தற்போதைய அதிபர் திரு.சு.கிவானந்தன் அவர்களின் முகாமைத்துவத்தில் வித்தியாலய விழாவினை கொண்டாடுவதையிட்டு வித்தியாலய சமூகத்தை பாராட்டுவதுடன் வித்தியாலயம் மேலும் வளர்ச்சிகண்டு தென்மராட்சி பிரதேசத்தில் முன்னிலைப் பாடசாலைகளில் ஒன்றாக திகழ எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. வ. நடராசா,**
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
சாவகச்சேரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

## மலர் சிறக்க
## நல் வாழ்த்துக்கள்

தென்மராட்சிப் பிரதேசத்தில் கிராமிய சூழலில் தனித்துவமான பண்புகளைக் கொண்ட மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயத்தின் 85 ஆம் ஆண்டு மலர் வெளியீட்டிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கின்றேன்.

1932 ஆம் ஆண்டு உதவி நன்கொடை பெறும் பாடசாலையாகத் தோற்றம் பெற்ற இப் பாடசாலையானது கல்விப் பெறுபேற்றிலும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் பல சாதனைகளை நிலைநாட்டி பல ஆளுமை மிக்கவர்களை உருவாக்கியுள்ளது என்பது வரலாறு! இதற்கு பக்கபலமாக இருந்த அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், பழையமாணவர்கள் என்றும் நினைவு கூரத்தக்க வர்களே!

வளர்ச்சி என்பது இடையூறின்றித் தொடர்ந்து இடம்பெறும். ஒரு செயலாகும் எனவே வளர்கின்ற இப்பாடசாலையானது கல்வி அடைவுகளிலும் இணைபாடவிதான செயற்பாடுகளிலும் மேன்மேலும் வளர்ச்சி கண்டு சரித்திரம் படைக்கும் சாதனை யாளர்களைச் சமூகத்திற்கு வழங்கி வரவேண்டும் என்று வாழ்த்துகின்றேன்.

**திரு. சு. உலகநாதன்,**
கிராம உத்தியோகத்தர்,
மீசாலை மேற்கு J/319.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**திரு. த. பரமானந்தம்**

போசகர், பழைய மாணவர்,

ஆசிரியர் சங்கம். (பிரான்சு)

தென்மராட்சிப் பகுதியில் மாமரங்களினால் செழிப்பூட்டும் மீசாலைப்பகுதியில் அமைந்துள்ள யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம் இன்று இவ் விழாவைக் கொண்டாடுவது எம் மாணவர்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளிக்கின்றது.

நாளைய நற்சமூகத்தை உருவாக்கும் கலைக் கோவில்களே பாடசாலைகள். இப்பாடசாலை வளர்ச்சி குன்றிப் போவதையோ அழிந்து போவதையோ எவராலும் ஏற்கமுடியாது. இன்றையவிழா இப்பாடசாலையின் வளர்ச்சிக்கும் , புத்துயிர்ப்பிற்கும் நல்லதொரு உத்வீகத்தை ஏற்படுத்த வேண்டும். இன்றைய நன் நாளில் இப் பாடசாலை நன்கு வளர்ச்சியடைவதற்கும், அதிகமான மாணவர்களை உள்வாங்கி அவர்களை நற்பிரஜைகளாகவும், சிறந்த ஆசிரியர்களை உள்வாங்கி அவர்களின் சிறந்த சேவைக்கு வழிவகுத்தும் உதவி செய்வோம் என பிரான்ஸ் பழைய மாணவர் ஆசிரியர் சங்கத்தின் சார்பாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பாடசாலைச் சின்னத்திலுள்ள சிறந்தவொரு வாசகம் "கற்று உணர்ந்து ஒழுகு" இதைப் பின்பற்றித்தான் பிரான்ஸ் வாழ் மீசாலை விக்கினேஸ்வர பழைய மாணவர்கள் பலர் ஒன்றிணைந்து புலம் பெயர் நாட்டில் முதலாவது பழையமாணவர் ஆசிரியர் சங்கத்தை உருவாக்கி பாடசாலைக்கு ஊக்கமும் ஆக்கமும் வழங்கி வருகிறார்கள். அவர்களின் முயற்சி தொடர்ந்தும் உலக நாடுகள் அனைத்திலும் கிளை விட்டுப் பரவ வேண்டும் என்பதே எமது அவாவும் கூட.

பாடசாலை வளர்ச்சிக்கும் மாணவர்களின் மேம்பாட்டிற்கும் தம்மை அர்ப்பணித்து வரும் அதிபர் திரு.சு.சிவானந்தன் அவர்களும் அவருக்கு உறுதுணையாக இருந்து வரும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை ஏனைய உத்தியோகத்தர்கள் இங்கு புலம்பெயர் நாடுகளிலும் பழையமாணவர் சங்கத்தினை நெறிப்படுத்தி வரும் நல்லுள்ளங்கள் அனைவருக்கும் நல்ல திடகாத்திரத்தையும், தேகாரோக்கியத்தையும் கொடுத்து கல்விப் பணி தொடர அருள் புரிய வேண்டும் என இறையாசி வேண்டி வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துகின்றோம்

"கல்வியே எங்கள் உயிர் மூச்சு
கல்வி பற்றியே என்றும் எங்கள் பேச்சு"

கல்வியென்பது மிகவும் சக்தி வாய்ந்த ஆயுதம். அதனை உலகை மாற்றுவதற்காகப் பயன்படுத்தலாமென்பது அரசியல் மேதை நெல்சன் மண்டேலா அவர்களது கருத்தாகும். பழைய மாணவர்கள், ஆசிரியர்களாகிய நாம் எமது தாயகத்தின் போர்ச்சூழலால் புலம்பெயர்ந்திருந்தாலும் நாம் கற்ற தமிழ், ஆங்கில மொழிக்கூடான அறிவுதான் இங்கு வாழ்வாதாரங்களைத் தேடிக்கொள்வதற்கு உதவியதெனலாம் தமிழ்ச்சமூகம் கல்வியை மதிக்கும் சமூகமாகி தொடர்ந்தும் நிலைபெறவேண்டும்.

நாம் தாயகத்தில் இழந்தவற்றை புலம்பெயர்ந்த நாடுகளில் மீட்க வேண்டுமென்பதில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டு வருகின்றோம். அதில் நாம் முன்னிறுத்துவது கல்வியாலேயாகும். எமது அடுத்த சந்ததியினரின் கல்வி முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றோம்.

எமது பழம் பெரும் பாடசாலையான விக்கினேஸ்வர மகா வித்தியாலயம் போர்ச்சூழலால் பாதிக்கப்பட்டு சிறிய பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது என்பதை அறிந்தவுடன் இங்குள்ள இளைஞர்கள் ஒன்று கூடி புத்தி ஜீவிகளையும் இணைத்து ஆரம்பிக்கப்பட்டதே பிரான்ஸ் பழைய மாணவர் ஆசிரியர் சங்கமாகும்.

நாம் இன்றைய எமது பாடசாலையின் அதிபர் மற்றும் யா/மீசாலை விக்கினேஸ்வர பழைய மாணவர் சங்கத்தினரோடு தொடர்ந்து உரையாடி குறைகளை கேட்டறிந்து எமக்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்கிச் செயற்படுத்தி வருகின்றோம்.

தென்மராட்சி வாழ் மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒரு முக்கோண நிலையில் ஒன்றிணைந்து எமது பாடசாலையை யாழ் மாவட்டத்திலும், தேசியளவிலும் கல்வி, விளையாட்டு, கலை யாவற்றிலும் உயர் நிலை அடைய வைக்க வேண்டுமென்பதே எமது உள்ளார்ந்த விருப்பமாகும்.

இவ்வகையில் 85 ஆவது ஆண்டு விழாவும், பரிசளிப்பு நிகழ்வு நடைபெறவிருப்பதையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகிறோம். இது மாணவர்,பெற்றோர், ஆசிரியரிடத்தில் உளவியல் சார் உத்வேகத்தை கொண்டுவரும் என நம்புகின்றோம். விழா சிறப்புடன் நடைபெற நாம் ஒன்று சேர்ந்து வாழ்த்தி மகிழ்கிறோம்.

**திரு. ஜெகதீசன்,** (தலைவர்)
யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்,
பழைய மாணவர், ஆசிரியர் சங்கம். (பிரான்ஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துகின்றேன்

என் வாழ்நாளில் மறக்கமுடியாத பாடசாலையாக இப்பாடசாலை இருப்பதையிட்டு மகிழ்ச்சி யடைகின்றேன். 01.02.1992 அன்று முதல் நியமனம் விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும் கற்பிக்கும் ஆசிரியராகக் கிடைத்தது. அன்றைய காலப்பகுதியில் போதிய ஆசிரியர் வளமும்,நிறைந்த மாணவர்களும் காணப்பட்டனர். முன்னணிப் பாடசாலைகளை முட்டி மோதி வெற்றி கண்ட பாடசாலையாக திகழ்ந்தது. கலைத்திறன் போட்டிகளில் கலக்கம் காணவைத்தது. உடற்பயிற்சி போட்டிகளில் யாழ் மாவட்டத்தையே உலுக்கியது. பல சாதனைகள் படைத்த காலமது அதே சாதனைகள் மீண்டுவரும் காலம் வெகுதூரமில்லை.

அரசியல் இடப்பெயர்வுகள் காரணமாக தற்போது மாணவர் எண்ணிக்கை வெகுவாக குறைந்திருப்பதை இவ்வாண்டு பங்குனிமாதம் நான் நேரில் சென்றபோது கண்டறிந்தேன். எண்பதாம் ஆண்டில் கால் பதிக்கும் போது தற்போதைய அதிபர் பல சவால்களுக்கு முகம் கொடுத்து ஐந்து ஆண்டுகாலத் திட்டம் ஒன்றை வகுத்துள்ளார். இத்திட்டதிற்கு OSTA-FRANCE (பிரான்சு பழைய மாணவர் ஆசிரியர் சங்கம்) உதவிக்கரம் நீட்டியவண்ணம் உள்ளது. அச்சங்கத்தின் அனுசரணையோடு நூற்றாண்டு விழா காண்பதற்கு முன் கல்வி,கலை,விளையாட்டு சார்ந்த சகல துறைகளிலும் முன்னேற்றம் காணும் என்பது திண்ணம். மாணவர் எண்ணிக்கையில் இட நெருக்கடி காணும் நிலை தோன்றும்.

தமிழ் மக்களின் அழியாச் சொத்தாக இருப்பது கல்வி மட்டுமே. இக் கல்வியை சிறந்த முறையில் வளர்த்தெடுப்போமானால் ஒளிமயமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப முடியும். அதன் தாக்கத்தால் உலகமெங்கும் பழைய மாணவர் ஆசிரியர் சங்கங்கள் உதயமாக உள்ளன. அச்சங்கங்களின் உதவியோடு விரைவில் எமது பாடசாலையும் முன்னணிப் பாடசாலையாக திகழும் என்பதில் ஐயமில்லை.

85 ஆம் ஆண்டு விழாவும்,பரிசளிப்பு விழாவும் சிறந்த முறையில் நடந்தேற எனது வாழ்த்துக்கள். நான் முதன் முதற் கற்பித்த பாடசாலை முன்னணியில் திகழவேண்டும் என்பது எனது அவா அதை நிறைவேற்ற OSTA-FRANCE உடன் இணைந்து என்னால் இயன்ற சேவைகளை நல்குவேன்.

**திரு. த. பரமேஸ்வரன்,** முன்னாள் ஆசிரியர்,
யா/மீசாலை விக்கினேஸ்வர ம.வி, உறுப்பினர்,
பழைய மாணவர் - ஆசிரியர் சங்கம், பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துப்பா

## 85ஆம் ஆண்டு விழா வாழ்த்து

சீர்மேவு தென்மராட்சித் திருப்பதியின் ஒருபால்
சிறந்தோங்கு மீசாலை தன்னில்
பார்மேவு மறிஞர்கள் பலரை யீந்தளித்த
பாங்குறும் விக்கினேஸ் வரவில்
ஊர்மேவி ஒன்றுகூடி உயர் விழாவெடுத்து
உவந்திடும் நன்னாள் இதனில்
பார்மேவப் பல்லாண்டு பணியாற்றி யுயர்ந்து
பாங்குடன் வாழ வாழ்த்துவோமே

எட்டுப் பத்தொடு ஐந்தாண்டு கண்டாய்
ஏற்றமொடு வாழிய பல்லாண்டு
பட்டொளி பரப்பிப் பாரகந் தன்னில்
பலபடி யுயர்ந்துமே வாழியவே
திட்டங்கள் தீட்டிச் சிதம்பரப் பிள்ளையும்
திருவுளோர் பலரும் இணைந்தே
கட்டிய கல்விச் சாலையிது இனிதே
காசினி போற்றிட வளர்கவே

சமூகத் தொண்டனாம் செல்லையா அதிபர்
தந்த நற் காணியில் தோன்றினாய்
சுமுகமாய் வளர்ந்துமே சூழ்புவி போற்றிடும்
சுந்தர நிலையினை அடைந்தாய்
அமுதின் மேலாம் தமிழது தன்னில்
ஆதிக்கம் செலுத்தியே வளர்வாய்
நமதினம் ஓங்கிட நற்பணி ஆற்றியே
நலமுடன் வாழிய பல்லாண்டு

ஆரம்ப அதிபராம் சிதம்பரப் பிள்ளையொப்
அறுமூன்று அதிபரைக் கண்டாய்
ஆரம்ப முதலிற்றை நாளாது வரையில்
அதீத வளர்ச்சி கண்டாய்
தாரணி புகழ்ந்திட தரத்தில் உயர்ந்து
தகுபல வெற்றியும் கண்டாய்
ஊரது புகழும் உயர்வு பல பெற்றே
உன்னதமாய் வாழிய வாழியவே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகவை எண்பத்தைந்து அவனியிற் கண்டாய்
அரியபல சாதனைகள் செய்தாய்
தகவுறு மாணாக்கர் தமையென்றும் வளர்த்தே
தரணியில் உயர்வும் கண்டாய்
சகமதில் உன்பெயர் சரித்திரமாய் மிளிரச்
சால்புடன் வாழிய பல்லாண்டு
அகமது மலர்ந்து ஆனந்தம் கொண்டே
அடியேன் வாழ்த்துவன் வாழியவே

திண்ணைப் பள்ளியாய் திறம்பட வெழுந்து
திகழ்ந்த எங்கள் விக்னேஸ்வர
வண்ணமாய் வளர்ந்து வளம் பல பெற்றுமே
வாகாய் மகாவித் தியாலயமாகி
எண்ணரும் வெற்றிகள் ஏற்றமாய் கண்டுமே
எண்பத் தைந்தாண்டு கண்டதுவே
மண்ணுளோர் போற்றிட மாண்பினில் உயர்ந்து
மதிப்படன் வாழிய பல்லாண்டு

தேன் சுவை கனிகளாம் மா பலா வாழை
திகழ்ந்திடும் எங்கள் மீசாலையில்
ஞானம் வளர்த்திட நன்குமே தோன்றி
தடாத்திடும் எங்கள் கல்லூரி
வானை நோக்கியே வளர்ச்சிகள் கண்டு
வாழிய வாழிய பல்லாண்டு
மேன்மை கொண்டே மேலும் பல்லாண்டு
மேதினியில் வாழிய வாழியவே

ஆரம்பம் முதலாய் உயர்தரம் வரையில்
அறிவை ஊட்டியே வந்தாய்
ஊரவர் உதவியாய் நூலகம் தன்னொடு
உத்தமப் பண்ணையும் கண்டாய்
பாரதில் கல்வி விளையாட்டொடு நல்ல
பாங்குறு கலைகளும் வளர்த்தாய்
பேரறிஞர் போற்றிடப் பெட்டியுடன் உயர்ந்து
பேர்புவிஅ தன்னில் உயர்கவே

வயலூரன் உள்ளத்தைத் தொட்டு
**மார்க்கண்டு மகேந்திரன் (ஜே.பி)**
பழைய மாணவர் சங்கம், உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

## விக்கினேஸ்வர கல்விக்கான

## மந்திரச் சொல்

மாமர நிழலையும்
மணல் மேலிருந்து கற்றதையும்
புலம்பெயர்ந்து பல்லாண்டானாலும்
நாமென்றுமே மறந்ததில்லை.

போர்க்கால அவலங்களிலும்
வேர்களைக் காத்தோம்
பொதுச்சிந்தனையில் மூழ்கியிருந்தோம்
ஏதுமறியா எண்ணமற்றிருந்தோம்

ஏழ்மையறிந்து இன்னல் நீங்க
எழுந்தனர் இளைஞர்.
இளையோர் முதியோர் கைகோர்க்க
பிறந்தது பிரான்சில் பழையமானவர் ஆசிரியர் சங்கம்

முன்னேற்றும் பணியில் முனைப்புக் காட்டினர் இளைஞர்
முதியவர்கள் பின்னின்று உழைக்க விருப்புக் காட்டினர்
நல்திட்டங்கள் தீட்டி நடைமுறைப்படுத்தினர்
வல்லவர்களாக விரைந்து செயற்பட்டனர்.

வழிபிறந்தது விக்கினேஸ்வரவின் வளர்ச்சிக்கு
விழிதிறந்தது மாணவர்களின் எதிர்காலத்திற்காக
கல்வித் துறையினரெல்லாம் கைகோர்த்தால்
நல் மாணாக்கர் நன்மை பெற்று சிறப்பர்.

**வி. பாஸ்கரன்**
பழைய மாணவன்
தமிழ்மொழி ஆசிரிய பயிற்றுனர்
கவிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் ஆரம்பத்தில் படித்த பாடசாலை விக்கினேஸ்வர ..

மீசாலை பல்வளங்களும் கொண்ட புகழ் பூத்த கிராமமாகும். இங்கு படித்த பண்பாடு மிக்க மக்கள் பழைமையையும், புதுமையையும் போற்றி வாழ்கின்றனர். சைவமும் தமிழும் போற்றிப் பேணப்படுகின்றது.நாமும் ஆரம்பக் கல்வியை இங்கேயே படித்துள்ளோம்.

பாடசாலை நல்ல முறையாக வளர்ச்சியடைந்து. நல்ல முயற்சியுள்ள ஆசிரியர்களின் பணியால் மாணவர்கள் வேறு பாடசாலைகளுக்குப் போகவில்லை. பெற்றோரும் இதை ஏற்றனர் அதனால் பாடசாலை முன்னேற்றம் கண்டது. இக்காலத்தில் அமரர் பண்டிதர் சி.கா.தம்பையா அவர்கள் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினர். இவரிடம் 8ம், 9ம் வகுப்புக்களில் படிப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரிடம் கேட்ட வார்த்தைகள் "**பசுமரத்து ஆணி போல**" என்நினைவில் பதிந்திருக்கின்றது. இவர் நேரத்திற்குச் சாப்பிடும் ஆசை அற்றவர். பாடசாலையில் அந்த நேரம் மதியம் பணிஸ் அல்லது பாண் கொடுப்பது வழக்கம். அந்தநேரம் பண்டிதர் அவர்களும் ஒரு பணிசைக் கையில் எடுத்துக் கொள்ளுவார். அதைப் பித்து வாய்க்குள் போட்டுக் கொண்டே வகுப்பிற்கு வருவார். ஏன் எனில் அவர் காலை உணவை எடுக்க விருப்பமோ நேரமோ இல்லாதவர் யாராவது சாப்பிடவில்லையா என்று கேட்டால் மறுமொழி:

**செவிக்கு உணவு இல்லாத போழ்து சிறிது**
**வயிற்றுக்கும் ஈயப்படும். (412)குறள்**

என்றே கூறுவார். செவிக்கு உணவு இல்லாத பொழுது தான் சிறிது வயிற்றுக்குத் தரலாம் என்றே கூறுவார். இது எனது நினைவில் இன்றுவரை நிலைத்திருக்கின்றது. இன்னும் பல பொன் மொழிகள் நினைவுள்ளது.

பண்டிதர் அவர்களது பாடசாலைக் கந்தோர் வேலைகளை நான் எனது 15ம் வயது தொடக்கம் செய்துள்ளேன். அயல்வீடு என்பதனால், அவரது பாடசாலை எழுத்து வேலைகளை அக்கறையோடு ஒழுங்காகச் செய்து உதவியுள்ளேன்.

பண்டிதரும் என்னைப் பண்டித வகுப்புக்களில் சேர வைத்து, பாடங்களையும் சொல்லித்தந்துள்ளார். என்னையும் ஒரு பண்டிதராக்கினார். இது அவரது விருப்பப்படி நடந்து முடிந்தது. நீ ஒரு பண்டிதராய்ப் படித்து வா என்றே சொன்னார். அதேபோல அவர் கூறிய வார்த்தை நிறைவேறியது. அவரது ஆசியால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வரை புலம் பெயர்ந்த நாட்டில் நான் தமிழ்க் கல்லூரியில் மாணவர்களுக்குத் தமிழைப் படிப்பித்துக் கொண்டிருக்கின்றேன்.

பண்டித பரீட்சையில் விசேட சித்தி பெற்றதால் பண்டிதரின் பெயரால் எனக்குச் சில புத்தகங்கள் பரிசாக வழங்கப்படுமென பத்திரிகைகளில் அறிவிக்கப்பட்டது.

பாடசாலையிலே தங்கியிருந்த பண்டிதர் அயலவர்கள் அனைவரையும் விளங்கி அவர்களுக்குத் தக்கபடி நடந்தார்.பெருமையில்லாதவர். அறிவுப் பெட்டகம் பணமில்லாது எந்த நேரத்திலும் படிப்பித்தார். பாடசாலை மேன்மேலும் உயர்ச்சி கண்டது. இவரது வேலைகளிலும் உள் விடயங்களிலும் பங்கு கொண்டவர் மந்துவில் அமரர் மயில்வாகனம் மாஸ்ரர் (திருமதி வல்லிபுரம் கனகம்மா ஆசிரியரும் பெரும் பணிகளைப் பாடசாலைக்குச் செய்துள்ளனர். அமரர் இராசமணி(பேபி)ஆசிரியர் அவர்களும் போற்றப்பட வேண்டியவர். இன்னும் பல ஆசிரியர்கள் நல்ல பணிகளைச் செய்துள்ளனர்.

**"தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார்**
**தோன்றலிற் தோன்றாமை நன்று" (236 குறள்)**

பண்டிதர் தம்பையா அவர்கள் பாடசாலையை வளர்த்தார். புகழ்பட இருந்தார். இன்று பாடசாலை சிறிது மாணவர் தொகை குறைந்து விட்டதால் வெளிநாடுகளில் உள்ளமீசாலை மக்கள் கவலை கொண்டுள்ளார்கள். பாடசாலை வளர்ச்சிக்காக அவர்கள் தோள்நின்றுழைப்பார்.

பாடசாலையை ஸ்தாபித்த அமரர்களையும் நினைவு கொள்வோம். அவரது பணிகளைப் போற்றுவோம்.

**வாழிய! வாழியவே!**
**மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்**
**வாழிய! வாழியவே!**
**பாசம் கொண்ட தமிழ் மக்கள்**
**வாழ்ந்த! வழியவே!**
**செந்தமிழ் சிறப்புற வித்தியாலயம்**
**வாழ்க! வாழியவே!**
**பந்தமிதே நல் வித்தியாலயமாய் வளர**
**வாழிய! வாழியவே!**
**பதிபோல் இலங்கிடும் இனிய மகாவித்தியாலயமாய்**
**வாழிய! வாழியவே!!**
**ஆதி காலம் போல் எழில் கொண்டே**
**வாழிய! வாழியவே!!**

**பண்டிதர் செல்லமுத்து கோகுலநாதன்**
தங்கமணி
கனடா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை அபிவிருத்திக் குழு செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி



தென்மராட்சிப் பிரதேசத்தில் மீசாலையூர் அபிமானிகளின் அயராத முயற்சியினாலும் இடைவிடாத ஊக்கத்தினாலும் கிடைக்கப் பெற்ற யா/மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயத் தாயின் 85 ஆவது ஆண்டு விழா மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். இப்பாடசாலையில் கடமையாற்றிய அதிபர்கள், ஆசிரியர்களின் நற்சேவையாலும் அர்ப்பணிப்பாலும் இன்று கல்விச் சேவையில் வளர்ந்து வருகின்றது. எதிர்காலத்தில் மென்மேலும் பல்துறைகளில் வளர்ச்சி பெற்று மீசாலையூர் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கலங்கரை விளக்காக மிளிர இறைவனின் கடாட்சம் கிடைக்க வேண்டி மனதார இறைஞ்சி வணங்குகின்றேன்.

**திருமதி. அமுதா முரளிதரன்**
அபிவிருத்திக் குழு செயலாளர்
யா/விக்கினேஸ்வர மகா வித்தியாலயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செயலாளரின் உள்ளத்திலிருந்து...

"கல்விக்கான ஊர் அறிஞர்களின் பேச்சு கலாசாலையை உருவாக்கித் தந்து ஆச்சு"

எமது பாடசாலையின் 85 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்த பரிசளிப்பு விழாவும் சிறக்க எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடை கின்றேன்.

மீசாலைக் கிராம வாழ்மக்களின் பிள்ளைகள் வீதி பல கடந்து, மைல்கள் சில நடந்து, நகரப்புறப் பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டியிருந்த அக்கால கட்டத்தில் காலத்தின் தேவையை நன்கறிந்த எமது பிரதேச அறிஞர்கள் எடுத்த முயற்சியே விக்கினேஸ்வர மகாவித்தியாலயம் என்ற இன்றைய பெரு விருட்சம்.

ஆரம்ப காலத்தில் மரங்களின் கீழ் வேதனமின்றி ஆரம்பித்த கற்பித்தல் செயற்பாடுகள் காலப்போக்கில் நிறுவன மயப்பட்ட கல்வி நிறுவனமாக எழுச்சி கண்டது. 83 ஆம் ஆண்டளவில் மகா வித்தியாலயமாக தர முயர்த்தப்பட்டபோது, ஆயிரத்துநூறு மாணவர்களைத் தன்னகத்தே கொண்டு தென்மராட்சியின் புகழ்பூத்த பாடசாலையாக மிளிர்ந்தது. அதற்கு வெளி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களின் பங்களிப்பும் உறுதுணையாக இருந்திருக்கிறது.

எமது பாடசாலையில் ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை பெற்றவர்கள் பலர் உயர் பதவிகளில் இருந்திருக்கிறார்கள். அவர்களில் சிலர் எம் கண்முன் இன்றும் வாழிகாட்டியாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

காலப் பெரு இடைவெளியில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாகக் குறிப்பாக இரண்டாயிரமாம் ஆண்டளவில் ஏற்பட்ட இடப்பெயர்வு எமது கனவை மாற்றியமைத்தது. அந்த சடுதியான மாற்றம் ஊர் அறிஞர்களை மட்டுமல்ல என்னையும் ஆட்டங்காண வைத்தது. அந்த ஆட்டத்தின் எதிர் விளைவே இன்றைய சடுதியான மாற்றங்கள். அன்று அறிஞர்கள் கூடி பாடசாலையை அமைத்ததைப் போல், இன்று பலர் கூடி பல வியூகங்களை வகுத்திருக்கின்றோம். மறுமலர்ச்சி எனும் பாதையை எட்டுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடிவருகின்றோம். அந்தப் போராட்டத்தின் விளைவுகளில் ஒன்றே இன்றைய 85ஆம் ஆண்டு விழாவும் பரிசளிப்பு விழாவும்.

இந்த மறுமலர்ச்சிக் குழந்தையை வளர்த்து ஆளாக்குகின்ற முழுப்பொறுப்பையும் பாடசாலைச் சமூகத்திடம் ஒப்படைக்கின்றோம். அவர்கள் மனமுவந்து ஊர்ப் பிள்ளையாகிய விக்கினேஸ்வரவை வளர்த்தால், மறு மலர்ச்சியின் உச்சத்தை மிக விரைவில் எட்டுவோம் என்பதில் ஐயமில்லை. அந்த நம்பிக்கையை எதிர்பார்த்தவனாக எதிர்வரும் ஆண்டுகளை எண்ணியவாறு காத்திருக்கிறேன். விக்கினங்களை தீர்ப்பவனது ஆலயம் சீரும் சிறப்பும் பெற எமது மனமார்ந்த வாழ்த்தக்கள்.

— நன்றி —

**திரு. க. ரஜனிகாந்தன்,**
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்,
விக்கினேஸ்வர ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி
## வித்தியாலய முதல்வர்

யாழ் மாவட்டத்தின் தென்மராட்சிக் கல்வி வலயத்திலுள்ள மீசாலை மேற்கில் அமைந்துள்ள உயர்தரப் பாடசாலையான யா/மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் எண்பத்தைந்தாவது ஆண்டு நிறைவை ஒட்டிய "விக்கினேசன்" மலர் வெளியீடும் ஒரே சமயத்தில் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மீசாலையூர் அபிமானிகளின் அயரா முயற்சியால் 1932 ஆம் ஆண்டு இவ் வித்தியாலயம் நிரந்தரப் பாடசாலையாக புதிய கட்டிடத் தொகுதியில் தொடக்கி வைக்கப்பட்டமை ஒரு புதிய அத்தியாயமாக அமைந்தது. பல்வேறு துறைகளிலும் முன்னேற்றம் கண்ட இப் பாடசாலை 1980 ல் மகா வித்தியாலமாகத் தரம் உயர்த்தப்பட்டமை பாடசாலை வரலாற்றுப் பாதையில் ஒரு மைல் கல்லாகவும் அமைந்தது.

இப் பிரதேசத்தின் கல்வி, பண்பாட்டு, விழுமியங்களைப் பேணிக் காக்கும் நிறுவனமான இம் மகாவித்தியாலயம் யுத்த நடவடிக்கைகள், இடப் பெயர்வுகள் போன்ற சவால்களை எதிர் கொண்டாலும் இன்று பாடசாலைச் சமூகத்தினரின் அர்ப்பணிப்பு நிறைந்த செயற்பாட்டினால் மீண்டும் தென்மராட்சிப் பாடசாலைகளில் சிறப்பு மிக்கதொன்றாக உருவாகி வருவது மகிழ்ச்சிக்குரியதாகும். இதற்கு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்த அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஆகிய யாவரையும் இந் நாளில் நினைவு கூருகின்றேன்.

இன்று இம் மகாவித்தியாலயம் மேலும் பல வழிகளில் ஏற்றம் பெற என்னுடன் செயலாற்றும் உபஅதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை சமூகத்தினர் யாவரையும் மனதாரப் பாராட்டுவதுடன் இவ் 85 ஆவது ஆண்டு விழா மலர் சிறப்புற வெளிவர எனது வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு. சு. சிவானந்தன்**

அதிபர்

யா/ விக்கினேஸ்வர ம.வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதழாசிரியர் உள்ளத்திலிருந்து...

எழில் கொஞ்சும் நீர்வளமும், நிலவளமும் சூழ்ந்த வரலாற்றுப் பெருமை வாய்ந்த மீசாலைக் கிராமத்தில் விந்தை ஆலயமாகத் தமிழர் எம் கல்விப் பாரம்பரியத் தைப் பாதுகாக்க உதயமான புகழ்பூத்த பாடசாலை யா/மீசாலை விக்கினேஸ்வர மகாவித்தியாலய அன்னை தனது பயணத்தில் 85 ஆண்டுகளாக சாதனைத் தடம் பதித்து பலரது கவனத்தை தன்பால் திரும்பிப் பார்க்கும் வண்ணம் எமது பாடசாலை திகழ்கின்றது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் நமக்கு முற்பட்ட பல சந்ததியினர் கல்வி பயின்றுள்ளனர். அவர்கள் இன்று எம் மத்தியில் இல்லை. பாடசாலையில் இருந்து கற்று வெளியேறியோர் பலர் இன்று எம்மத்தியில் உயர்பதவிகளை அலங்கரித்துக் கொண்டு இருக்கின்றார்கள். இதனால் பாடசாலை பெருமை அடைகின்றது.

எமது பாடசாலை வரலாற்றில் முதன்முதலாக வெளியிடப்படும் கன்னி முயற்சியான **"விக்கினேசன்"** உங்கள் கரங்களில் தவழ இறையருள் கிட்டியதை எண்ணிப் பெருமகிழ்ச்சியடைகின்றேன். இவ்வேளையில் மிகவும் குறுகிய காலத்தில் ஆக்கங்களை கோரிய போது மிகவும் உவகையுடன் ஆதரவளித்து ஆசியுரை களையும், வாழ்த்துக்களையும், ஆக்கங்களையும் அளித்த அறிவு சார் பெரியோர்களுக்கும், ஆக்கங்களை வழங்கிய மாணவச் செல்வங்களுக்கும் மனம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மலர் சிறப்பாக முழுமை பெற உழைத்த எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்க உறுப்பினர்களின் முயற்சி போற்றுதற்குரியது.

இம்மலர் குறுகிய காலத்தில் உத்வேகத்துடனும் புத்தெழிற்சியுடனும் உயிர்பெற ஒருமித்த இலக்கோடு தோளோடு தோள் நின்று உழைத்த மலர்க்குழுவினருக்கும், மலர் முழுமை பெற ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர் குழாத்தினருக்கும் , பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர் குறிப்பாக வெளிநாடுகளிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதியுதவியளித்தோருக்கும் **"விக்கினேசன்"** வெளிவர உந்து சக்தியாக விளங்கிய பாடசாலைச் சமூகத்தினருக்கும் எனது நன்றிகள் உரித்தாகுக.

மலருக்கு தேவையான புகைப்படங்களை உரிய காலத்தில் எடுத்து வழங்கி உதவிய **"விஜேந்திரா ஸ்ரூடியோ"** நிறுவனத்தினருக்கும், காலம் தாழ்த்தாது "விக்கினேசன்" மலர் சிறப்பாக வெளிவர உழைத்த "கிங்ஸ்" பதிப்பகத்தினருக்கும் மேலாக இந்நூல் எம் கரங்களில் தவழ நிதியுதவி வழங்கிய உயர்ந்த உள்ளங்களுக்கும், பாடசாலை சமூகத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மற்றும் பலவழிகளிலும் உதவிய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

-நன்றி-

**திரு. க. சுதேஸ்கரன்**
ஆசிரியர்
யா/ விக்கினேஸ்வர ம.வி.

**வெற்றிபெற மூன்று வழிகள்**

♦ மற்றவர்களை விட அதிகமாக தெரிந்து கொள்ளுங்கள்

♦ மற்றவர்களை விட அதிகமாக பணியாற்றுங்கள்

♦ மற்றவர்களை விட குறைவாக எதிர்பாருங்கள்

- வில்லியம் சேக்ஸ்பியர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாறும் வளர்ச்சியும்.

# 1932 - 2017

மீசாலை வாழ்மக்களுக்கென ஓர் உதவி நன்கொடை பெறும் பாடசாலை அமைக்கப்பட வேண்டுமென்ற அபிலாசை காரணமாக ஊரிலுள்ள பிரமுகர்கள், கல்விமான்கள் அபிமானிகள் யாவரும் ஒன்று கூடி ஆலோசனை புரிந்ததன் விளைவே இவ்வித்தியாலயத் தோற்றமாகும். ஆலோசனைக் குழுவின் முக்கியஸ்தர்களாக திருவாளர்கள் சி.சிதம்பரப்பிள்ளை, சி.செல்லையா, ச.கார்த்திகேசு, க.நாகலிங்கம், பொ.அருளம்பலம் ஆகியோர் செயலாற்றினர்.

ஆலோசனைக் குழுவினர் பாடசாலை நிறுவுவதற்கான காணியொன்றைத் தேடும் முயற்சியில் ஈடுபடலாயினர். அல்லாரையூர் வாசியும், யா/ சாவகச்சேரி இந்துகல்லூரி முன்னாள் உப அதிபரும், சமூகத் தொண்டனுமாகிய திரு.S.K செல்லையா அவர்கள் மீசாலையில் ஒரு பாடசாலை அமைக்க வேண்டியதன் அவசியத்தை உள்ளூர உணர்ந்து தனக்குச் சொந்தமான இக்காணியை நன்கொடையாக உபகரித்துதவினார். இவ்வுபகரிப்பு வாய்ப்பினை ஆதாரமாகக் கொண்டு காணியில் தற்காலிகக் கொட்டில்கள் அமைத்துப் பாடசாலை நிறுவப்பட்டது.

ஆரம்பத்தில் இருபத்தேழு மாணவர்கள் அடங்கிய இப் பாடசாலையின் அதிபராக திரு.சி.சிதம்பரப்பிள்ளை அவர்களும் உதவி ஆசிரியர்களாக திரு.சி. செல்லையா, ச.கார்த்திகேசு, க.நாகலிங்கம், பொ.அருளம்பலம், ஆகியோருடன் இணைந்து வைத்தியர் திரு.நடராசா, திரு.தம்பிப்பிள்ளை, திரு.குமாரவேலு ஆகியோரும், எவ்வித வேதனமுமின்றிப் பணியாற்வதற்கு முன் வந்தனர். அவர்கள் சேவை நினைவு கூரத்தக்கது.

பின்னர் மீசாலையூர் அபிமானிகளின் அயராத முயற்சியினால் தற்காலிகப் கட்டடங்கள் நிரந்தரக் கட்டடங்களாக, கற்றூண்கள் பொருத்தப்பட்டுப் பூர்த்தியாக் கப்பட்டன.

இலங்கைச் சட்டசபை உறுப்பினராக விளங்கிய உயர் திரு. சு.நடேசு அவர்களால், 1932ம் ஆண்டு மார்ச் மாதம் 31ந் திகதியன்று புதிய கட்டடம் திறந்து வைக்கப்பட்டமை இப் பாடசாலையின் வரலாற்றின் ஓர் புதிய அத்தியாயம் என்பது குறிப்பிடத்தக்கது.

1932ம் ஆண்டு புரட்டாதி மாதம் 5ஆந் திகதி அதேவருடம் உதவி நன்கொடை பெறும் பாடசாலையாக அரசினரின் அங்கீகாரம் பெற்றமை பாடசாலை வளர்ச்சியின் அடுத்த காலகட்டமாகும்.

அதிபர் திரு.சி. சிதம்பரப்பிள்ளை அவர்களின் நிர்வாகத்தில் பாடசாலை துரித வளர்ச்சி கண்டதுடன் மாணவர்களின் தொகையும் அதிகரித்துக்கல்வி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகாமைத்துவக் குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலும் மேலோங்கிச் சிறப்புற்றது. துரதிஷ்ட வசமாக திரு. சி.சிதம்பரப்பிள்ளை அவர்கள் வேறொரு பாடசாலைக்கு அதிபராக மாற்றலாகிச் சென்றார். அவருடைய இடத்திற்கு திரு.மு.கந்தையா அவர்கள் அதிபராக நியமிக்கப்பட்டார். அவரைத் தொடர்ந்து திரு.சி.சின்னத்துரை அவர்களும் திரு.க.முருகேசு அவர்களும் முறையே அதிபர்களாக நியமனம் பெற்றுத்திறம்படச் சேவையாற்றினர்.

1945.10.01ந் திகதி பண்டிதர் சி. கா.தம்பையா அவர்கள் அதிபராக நியமனம் பெற்றார். அவருடைய சேவைக்காலத்தில் அவரின் ஒன்றிணைந்த செயற்பாட்டினால் பாடசாலையின் கல்வித் தரம் ஒழுக்கம் என்பன உயர்ந்து மிகவும் உன்னத நிலையில் சிறப்புற்று ஓங்கியது. பல மாணவர்களை ஆசிரியர்களாக்கியும், பண்டிதர்களாக்கியும், ஆசிரிய கலாசாலைப் புதுமுகப் பரீட்சைக்கும் ஆசிரியர் தராதரப் பரீட்சைக்கும் ஒழுங்கு படுத்தி சிறந்த பெறுபேறுகளை ஆக்கித் தந்த பெருமை இவரையே சேரும். இவரது காலத்தில் பல தரப்பட்ட மாணவர்களும் உத்தியோகத்தர்களாக பல்வேறு அரச துறைகளிலும் மிளிர்ந்தனர்.

இவர் தமிழ் இலக்கண இலக்கியங்களில் பண்டிதராக இருந்தாலும் அதற்கு விதிவிலக்காக ஆங்கிலம், புவியியல், சரித்திரம் அதனுடனும் மேலாக கணித பாடத்தில் பலநுட்ப அறிவைக் கொண்டு கணித பாடவியற் புத்தகங்களையும் எழுதி அச்சிட்டு வழங்கினார். இது மாணவர்களுக்குப் பேருதவியாக அமைந்தது. இயற்கையாகவே அவர் தமது கடமையை மிகவும் சிறப்பாக செய்பவர். அதே போல் ஆசிரியர்களையும் தமது கடமைகளைச் சிறப்பாக செய்ய வைத்தார். ஏற்ற நாள் முதல் மீசாலையே அவரது சொந்த ஊராகவும் விக்கினேஸ்வர வித்தியாலயமே அவரது மாளிகையாகவும் ஆக்கி தனது வீட்டை குடும்பத்தை, பிள்ளைகளை, மறந்து இவ்வித்தியாலயத்திற்கும் மீசாலைக்கிராமத்திற்கும் தன்னை முழுமையாக 1970.02.31 ஓய்வுக் காலம் வரை பணியாற்றினார்.

1971.05.16 திரு.ச.அ.நாகராசா அவர்கள் அதிபர் பொறுப்பினைப் பெற்று பெற்றோர் பழைய மாணவர், கல்வித் திணைக்களம் நல்கிய நன்கொடைப் பணத்தின் உதவியுடன் பாலர் வகுப்பறைகளை உள்ளடக்கிய ஓர் கட்டடத்தை அமைத்தார். அவர் இலங்கைக் கல்விச் சேவை தரம் 5ல் தேர்வு பெற்று பதவி உயர்த்தப்பட்டு வட்டாரக்கல்வி அதிகாரியாகப் பணியாற்றினர்.

திரு.ச.அ.நாகராசா அவர்களைத் தொடர்ந்து யா/வரணி மகா வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றிய திரு.S.N.இராஜநாயகம் அவர்கள் 1975.06.11இல் இப் பாடசாலைக்கு அதிபராக நியமிக்கப்பட்டமை பாடசாலையின் வளர்ச்சிக்கு மேலும் அடி கோலியது. அவர் காலத்தில் பாடசாலை பல முன்னேற்றங்களைக் கண்டுள்ளதை யாவரும் ஏற்றுக் கொள்வர். திரு.இராசநாயகம் அவர்கள் 1975.06.11ல் அதிபராக நியமனம் பெறும்போது 410 மாணவர்களும் 18 ஆசிரியர்களும் இப்பாடசாலையில் இருந்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திய அதிபர்கள் காலத்தில், அயற் பாடசாலையாகிய யா/மீசாலை அமெரிக்கன் மிசன் த.க. பாடசாலையை இப்பாடசாலையுடன் ஒன்றிணைக்கும் முயற்சி கைகூடாத நிலையில் இருக்க திரு.S.N.இராஜநாயகம் அவர்கள் அதிபராக பதவியேற்றதும் இதே முயற்சியில் தொடர்ந்தும் பேருக்கம் காட்டியதன் காரணமாக 76.05.01ல் இரு பாடசாலைகளும் ஒன்றிணைக்கப்பட்டன. பல்கிப் பெருகிய மாணவர் தொகைக்கேற்ப கட்டட வசதிகள், தளபாடங்கள் உபகரணங்கள், ஆகியன உடனடியாகத் தேவைபட்டன. தேவைகளின் அடிப்படையில் விஞ்ஞான ஆய்வு கூடம், கலைவாணி மண்டபம், மனையியற் கூடம், ஒன்றிணைந்த பாடத்திற்குரிய வகுப்பறைகள், விவசாயகூடம், ஏனைய தொழிற்பாடங்களுக்குரிய வகுப்பறைகள் ஆகியனவும் பிறவும் நிறுவப்பட்டன.

வளர்ந்தோர் கல்வி நிலையம், பகுதி நேரத் தொழில் நுட்பப் பயிற்சி நிலையம் ஆகியன 1975ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும். அத்துடன் சாரணர் இயக்கம், துணிவினைச்சங்கம், முதலுதவிப் படை, உயர்தர மாணவர் ஒன்றியம், ஆசிரியர் சேமநலச் சங்கம், பதியப்பட்ட சிக்கன சேமிப்புச்சங்கம், ஆகியனவும் ஏற்படுத்தப்பட்டன.

இப்படியான வளர்ச்சி பெற்றுவரும் போது அயற்பாடசாலையும் ஒன்றிணைக் கப்பட்ட பின்னரான காலப்பகுதியில் 1100 மாணவர்களையும் 36ஆசிரியர்களையும் 3 தொண்டர் ஆசிரியர்களையும் கொண்டதாகப் பாடசாலை காணப்பட்டது.

பல்வேறுதுறைகளிலும் முன்னேற்றங்கண்ட இப்பாடசாலை 1980.05.26இல் மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டு, க.பொ.த.(உ/த) கலை வகுப்புக்களை வைப்பதற்கான கல்வி அமைச்சின் அங்கிகாரத்தையும் பெற்றது. க.பொ.த (உ/த) வகுப்பின் தோற்றம் பாடசாலை வளர்ச்சியின் மற்றொரு காலகட்டமாகும். 1982ஆம் ஆண்டு ஆவணி மாதம் நடைபெற்ற க.பொ.த. (உ/த)பரீட்சையில் 17 மாணவர்கள் கலைப்பிரிவில் தோற்றி உள்ளனர். இவர்களில் 15 மாணவர்கள் பூரண சித்தியடைந்துள்ளனர். திறமைச்சித்தி அடைந்துள்ள 6 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு உரிய வாய்ப்பினைப் பெற்றார்கள். பாடசாலையின் பெறுபேறு எமது வட்டாரத்திலே முதலிடத்தை வகித்ததென்பது குறிப்பிடத்தக்கதோர் அம்சமாகும்.

இப்படியாகப் பாடசாலையானது பல்வழிகளிலும் துரித வளர்ச்சியேற்பட்டு மாணவர்களது கல்வித்தேவைகளைப் பூர்த்தி செய்யும் கேந்திர ஸ்தானமாக மிளிர்ந்து திகழ்ந்து வரும்போது 1987.04.01ஆல் அதிபராக திரு. கு. கேசவன் அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். இவரது காலத்தில் பாடசாலையின் கல்வித்தரம் மிகவும் உன்னத நிலையை அடைந்தது. க.பொ.த. (சாதாரண) பரீட்சையில் சித்தியடைந்து வேலை வாய்ப்பின்றி இருந்த மாணவர்களை பயிற்றுவித்து ஆசிரிய கலாசாலைக்கு சேர்ப்பித்தார். இப்படியாக பலவழிகளிலும் கல்வி வளர்ச்சிக்கும் மாணவர்களது முன்னேற்றத்திற்கும் பாடுபட்டு உழைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்போது 1988.03.04-ம் திகதி திரு. க. செல்லத்துரை அவர்கள் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். அவர் பாடசாலையின் வளர்ச்சியிலும், மாணவர்களது கல்வி மேம்பாட்டிலும் மிகவும் அக்கறையாகச் செயற்பட்டு சிறப்பான சேவையாற்றிக் கொண்டிருக்கும்போது துரதிஷ்டவசமாக 1989-ம் ஆண்டு சித்திரை மாதம் ஆயுத தாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். இது எமக்கும் பாடசாலைச் சமூகத்திற்கு பேரிழப்பாகும். இப்படியான சூழ் நிலையிற் இந்தக் காலகட்டத்தில் 1989.04.27-ஆம் திகதி திரு. இ. கணேசன் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். திரு. இ. கணேசன் அவர்கள் பொறுப்பேற்று கடமையை செய்து வரும்போது அவர் கோட்டக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றுச் சென்றார். காலத்தின் விதிப்பலனாக எமது பிரதேசத்தின் நடவடிக்கைகள் சீர்குலைந்து போய்க் கொண்டிருக்கும் போது 1991.01.01-ல் திரு.செ.சுப்பிரமணியம் அவர்கள் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவர்கள் சேவையாற்றிக் கொண்டிருக்கும் போது 1992.05.04-ம் திகதி திரு. மா. சாம்பசிவம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார். பாடசாலைக்கு ஒரு அரங்கு தேவை என்பதை உணர்ந்த அதிபர் திரு.சாம்பசிவம் அவர்கள் அதனை அமைப்பித்தார். அதற்குப் பின் நாளில் வைரவவிழா அரங்கு எனப் பெயர்சூட்டப்பட்டது. இவர் சேவையாற்றி வரும்போது 1994.01.10-ம் திகதி திரு. சி. கந்தசாமி அவர்கள் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். இவருடைய காலத்தில் கா.பொ.த.(சா.த) பரீட்சையில் சிறந்த பெறுபேறுகள் பெற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அன்றைய காலப்பகுதியானது பலவழிகளிலும் சீர்குலைந்து பல அனர்த்தங்களுக்கு முகம் கொடுத்து போர்ச்சூழ் நிலையில் நகர்ந்து கொண்டிருந்தது. போர்ச்சூழல் உக்கிரமடைந்தபோது எமது மக்கள் இடம் பெயர்ந்து வடமராட்சிப் பகுதி, வலிகாமப்பகுதி சென்று தஞ்சம் புகுந்து வசித்து வந்தனர். அப்போது எமது பாடசாலையானது மானிப்பாய் பகுதியில் இயங்கி வந்தது. அதேவேளை எமது அயற்பாடசாலைகள் வடமராட்சி பகுதியிலும், இணுவில் பகுதியிலும் இயங்கி வரும்போது எமது பகுதியைச் சார்ந்த மக்கள் இடம்பெயர்ந்து குடியேறிய பகுதிகளில் இயங்கி வந்த பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகளை கல்வி கற்க இணைத்துக் கொண்டார்கள்.

பின் நாம் பகுதி பகுதியாக மீழ் குடியமர்த்தப்பட்டு மீண்டும் எமது பகுதிக்கு வந்தடைந்தபோது எமது பாடசாலையில் கல்விகற்ற மாணவர்கள் எமது பாடசாலைக்கு மீளத் திரும்பாது இடம்பெயர்ந்து இருந்தபோது கல்வி கற்ற பாடசாலைக்கே சென்றார்கள். இப்படியாக பலவழிகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டதால் எமது பாடசாலை மாணவர் தொகையில் வீழ்ச்சி ஏற்பட்டது. இந்நிலையில் திரு. கந்தசாமி அதிபர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் 2003.12.31-ல் இடமாற்றலாகிச் சென்றார். அப்போது உதவி அதிபராக இருந்த திரு.ந.ஜெயக்குமார் அவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்றார்.

இப்படி இருக்கும்போது 2004.0920-ம் திகதி திரு. கு. கதிர்காமசேகரா் அவா்கள் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். அவரது காலத்தில் அவரும் இப்பாடசாலையை திறம்பட முன்னெடுக்க வேண்டும் என்று பலவழிகளிலும் முயற்சி செய்தார். அப்போது 2009.07.09-ல் திரு. த. அம்பலவாணா் அவா்கள் அதிபராக பொறுப்பேற்றுக் கொண்டார். 2014.03.12.-ம் திகதி திரு. வி. கணபதிப்பிள்ளை அவா்கள் அதிபராக பொறுப்பேற்றார். பாடசாலையின் வளர்ச்சியை முன்னெடுக்க வேண்டும் என்ற பாடசாலைச் சமூகத்தினரின் விருப்பத்தை நிறைவேற்ற செயற்றிறனான பழைய மாணவர் சங்கம் அமைக்கப்பட்டது. இந்தக் கட்டடத்தில் 2016.09.13-ம் திகதி திரு. சு. சிவானந்தன் அவா்கள் அதிபராக நியமனம் பெற்றார்.

அதிபா் அவா்களுடன் பழைய மாணவா் சங்கம் இணைந்து பாடசாலையின் முன்னேற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்கிக் கொண்டிருக்கின்றது. வெளிநாடுகளால் இருக்கும் எமது பழைய மாணவா்கள் எமது பாடசாலை பலவழிகளிலும் மேலோங்கக் கூடியவகையில் முன்னெடுக்க வேண்டும் என்று பிரான்ஸ் நாட்டில் வசிக்கும் எமது ஆசிரியகளும் பழைய மாணவா்களும் பாடசாலை அதிபருடனும் பழைய மாணவா் தாய்ச்சங்கத்தினருடனும் ஆலோசித்து பிரான்ஸ் நாட்டில் ஓர் பழைய மாணவா் சங்கத்தை உருவாக்கினார்கள்.

இப்பாடசாலையில் கல்வி கற்றபித்த ஆசிரியர்களும் நலன்விரும்பிகளும் ஒத்துழைப்பு வழங்கி செயற்றிறனான ஓர் கிளைச்சங்கமாக அது திகழ்ந்து வருகின்றது அவா்கள் எமது பாடசாலையின் தாய்ச்சங்கமான பழைய மாணவா் சங்கத்துடன் இணைந்து பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உதவிவருகின்றார். மாணவா் வரவையும் கற்றல் செயற்பாடுகளையும், அபிவிருத்தியையும் உயா்த்தக் கூடிய வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த வகையில் மேற்படி பாடசாலையின் இரு கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு செப்பணிடப்பட்டு வா்ணம் பூசப்பட்டுள்ளது. அத்துடன் பாடசாலை மதிலுக்கு வா்ணம் பூசப்பட்டு சீர் செய்யப்பட்டடுள்ளது.

பௌதீகவள, கல்விவள அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவற்றை எல்லாம் முன்னெடுப்பதற்கு தற்போதைய அதிபரும், ஆசிரியா்களும் பழைய மாணவா் சங்கத்திற்கு போதிய ஒத்துழைப்பை வழங்கிக் கொண்டிருக் கின்றார்கள். அந்தவகையில் 2017-ம் ஆண்டு தரம் ஐந்து புலமைப்பரிசிற் பரீட்சையில் ஒன்பது மாணவா்கள் 70க்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையைத் தந்துள்ளார்கள். இவ்வாண்டு க.பொ.த (உ.த) க.பொ.த (சா.த)ப் பெறுபேறுகளை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சிறந்த பெறுபேறுகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையுண்டு.

வளர்ச்சிப்பாதையின் ஒரு கட்டமாகவே இன்று பாடசாலையின் 85 ஆவது ஆண்டு நிறைவையும் பரிசில் நாளையும் சிறப்பாக நிகழ்த்தப்படுகிறதுக்கு எமது பிரான்ஸ் நாட்டுக் கிளைச்சங்கம் முழுமையான உதவிகளை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

அதனோடு இன்று எமது பாடசாலையின் அதிபரையும் கற்பிக்கும் ஆசிரியர்களையும் எமது பாடசாலையில் கல்வி கற்பித்து எமது பாடசாலையில் இருந்து இளைப்பாறிச் சென்ற ஆசிரியர்களையும் அதிபராக கடமையாற்றிச் சென்ற அதிபர்களையும் கௌரவிப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.

**பாடசாலைச் சமூகம்.**

**குறிப்பு :- இப் பாடசாலை பற்றிய மேலதிக வரலாற்றுத் தகவல்கள் இருப்பின் வழங்கி உதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/மீசாலை விக்கினேஸ்வர மகா வித்தியாலய

## வரலாற்றுத் தொகுப்பு

1. **பாடசாலையின் பெயர்:-** யா/மீசாலை விக்கினேஸ்வர ம.வி

2. **முகவரி:-** மீசாலை மேற்கு, மீசாலை

3. **கிராம உத்தியோகத்தர் பிரிவும் இலக்கமும்:-** மீசாலை மேற்கு J/319

4. **மகுடவாசகம்:-** "கற்று உணர்ந்து ஒழுகு"

5. **இலச்சினை:-**

**இலச்சினை விளக்கம்:-**


ஓ – பிரணவத்தையும்

ஏடு, நூல் - அறிவு வாயில்களையும்

சூரியன்- பிரகாசமான அறிவையும்

விளக்கு – அறிவூட்டலையும் குறித்து நிற்கின்றன.

7. **பாடசாலைக்கொடி:-**



**கொடிவிளக்கம்:-**

செம்மஞ்சள் - ஞானத்தையும்

கருஞ்சிவப்பு – வீரத்தையும்

நீலம் - புகழையும் சுட்டி நிற்கின்றன.

8. **கழுத்துப்பட்டி:-**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய மாணவர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸ் பழைய மாணவர் – ஆசிரியர் சங்க நிர்வாக உறுப்பினர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரான்ஸ் பழைய மாணவர் ~ ஆசிரியர் சங்க நிர்வாக உறுப்பினர்களோடு நலன்விரும்பிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் விபரம்

| No | Name | QUALIFICATION | Grade |
|---|---|---|---|
| 01 | MR. S.SIVANANTHAN | B.B.A(Hons), PGDE, M.Ed | SLPS |
| 02 | MR.S.KODESWARAN | B.A(Hons), PGDE, MA (De. Stu), M.Ed | SLTS 1 |
| 03 | MR.K.SUTHESKARAN | B.A, PGDE,M.Ed | SLTS 1 |
| 04 | MRS.K.JEYAKUMARAN | B.A, PGDE | SLTS 1 |
| 05 | MRS.T.JEYARAJAH | B.F.A, | SLTS 1 |
| 06 | MRS.K.SANTHIRANATHAN | Primary Trd | SLTS 1 |
| 07 | MRS.R.RAVIKKUMAR | B.A, PGDE | SLTS 1 |
| 08 | MRS.G.KALANITHY | Primary Trd. | SLTS 1 |
| 09 | MRS.P.SANMUGAM | B.A, PGDE, M.A (Tamil) | SLTS 2-1 |
| 10 | MRS.S.MAHENTHIRAKUMAR | Dip in teach (Maths), B.A,PGDE | SLTS 2-1 |
| 11 | MRS.S.SASIKUMAR | B.A(Hons), PGDE | SLTS 2-11 |
| 12 | MRS.A.KARUNAKARAN | B.A, PGDE | SLTS 2-1 |
| 13 | MRS.S.KONESWARAN | B.A, PGDE | SLTS 2-1 |
| 14 | MRS.P.NAGULESWARAN | Primary Trd. | SLTS 2-1 |
| 15 | MRS.NANTHAKUMARAN | B.A, PGDE | SLTS 1 |
| 16 | MRS.P.NAGASEELAN | Tamil Trd | SLTS 3-1 |
| 17 | MRS.S.SUTHARSAN | B.Com, PGDE | SLTS 2-1 |
| 18 | MRS.V.JEYAKANTHAN | B.A, Science Trd | SLTS 2-1 |
| 19 | MRS.J.SIVANATHAN | B.F.A, PGDE | SLTS 2-11 |
| 20 | MRS.K.JEYASRI | B.A, PGDE, | SLTS 2-11 |
| 21 | MRS.V.ARULEESAN | B.A, PGDE | SLTS 2-11 |
| 22 | MRS.R.KALAIYARASAN | B.F.A, , SLTS 2-11 | SLTS 3-1 |
| 23 | MISS.S.VINASITHTHAMBI | English Trd, SLTS 2-11 | SLTS 2-11 |
| 24 | MRS.S.ATPUTHARAJAH | Advance level Dip. Physical Edu. | |
| 25 | MRS.S.KISHORKKUMAR | National Dip in teach (ICT) | |
| 26 | MISS VAIRAMUTHTHU KOMATHY | OES | |
| 27 | MR KANTHAIJAH ARUMUGAM | OES | |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢**<u>2016 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள்</u>**

1. திரு. க.சுதேஸ்கரன்
2. திருமதி சி.மகேந்திரகுமார்
3. திருமதி க.ஜெயஸ்ரீ

**<u>2017 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்று வந்த ஆசிரியர்கள்</u>**

1. திரு சு.கோடீஸ்வரன்
2. திருமதி வி.அருளீசன்
3. திருமதி சு.கிசோர்க்குமார்
4. செல்வி வி.சுமதி
5. திரு பா.உமாமகேஸ்வரன்

➢**<u>2016 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்</u>**

1. திரு ந.கிருபாகரன்
2. திரு த.விக்னேஸ்வரன்
3. திருமதி க.சூரியகுமார்
4. திருமதி க.உதயசந்தர்

**<u>2017 ஆம் ஆண்டு இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்கள்</u>**

1. திருமதி சுதர்சினி வசந்தகுமார்
2. திருமதி தயாவதி தனுராஜ்
3. திரு சிதம்பரப்பிள்ளை இராஜகுலசிங்கம்
4. திரு ஸ். சுபேதர் பெர்னாண்டோ

➢ **<u>தற்காலிக இணைப்பில் கடமையாற்றியோர்</u>**

1. திருமதி சுதர்சன் சாருமதி
2. திருமதி சுகீத்தா ஜெஜீபன்
3. திருமதி சதீஜா கோகுலவாசன்

➢ திருமதி கனகாங்கி இராஜசுதாகர்

தென்னிந்திய திருச்சபையின் அனுசரனையுடன் கிறிஸ்தவ நாகரிகம் கற்பிக்கும் ஆசிரியரை நியமித்தமைக்கு திருச்சபைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய ஆளணி ~ 2017



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மோதுகள வைதேகியும் சூதுகளப் பாஞ்சாலியும் ஓர் ஒப்பீட்டு நோக்கு

உயர் நெறிகளை உட்பொதித்து, உலகினால் உள்ளப்படும் உத்தம பனுவல்களில் இராமாயணமும், மகாபாரதமும் உச்சியைத் தொட்டுநிற்பவை எனலாம். இராமாயணம் வடமொழியில் வான்மீகியால் வரையப்பட்டு, கம்பனால் கன்னித் தமிழில் கவின்பெறச் செய்யப்பட்ட காவியம் என்றால்; மகாபாரதம், வடமொழியில் வியாச முனிவரால் இயற்றப்பெற்று, வில்லிபுத்தூர் ஆழ்வாரால் தமிழ் மொழியில் நடைபயில்கின்றது எனலாம்.

இவ்விரு இதிகாசங்களும் கதை, கற்பனை, உணர்ச்சி, அணிநயம் போன்ற இன்னோரன்ன இலக்கியச் செழுமைகள் பெற்றுக் கற்போரை வியப்பில் ஆழ்த்தியவை என்றால் அதில் சந்தேகமில்லை. இக்கதைகளின் கதாநாயகிகளே ஜானகி என்ற வைதேகியும், திரௌபதி என்ற பாஞ்சாலியும் ஆவர்.

இவ்விதிகாசக் கதைகளில் எடுத்துக் கொண்ட ஒப்பீட்டு இடத்திற்கு இனி வருவோம். எமது தலைப்பு "மோதுகள வைதேகியும் சூதுகளப் பாஞ்சாலியும்" என்பதாகும். அதாவது மோதுகளமான போர்களத்திற்கு அழைத்துவரப்பட்ட சீதையின் நிலையும், சூதுகளமாகிய அத்தினாபுர அரண்மனை மண்டபத்திற்கு இழுத்துவரப்பட்ட பாஞ்சாலியின், நிலையுமே நாம் இங்கு ஒப்பிட முனைவதாகும். இக்களநிலை ஒப்பீட்டுக்கு முன், இப்பாத்திரங்களின் முன்னிலை ஒப்பீட்டினைச் சிறிது பார்ப்போம்.

01. இராமயணச் சீதை மிதிலை மாநகர வயலை ஜனகன் உழும்போது உழவுசாலில் தோன்றுகின்றாள், வில்லிபாரதத் திரௌபதி பாஞ்சாலத் துருபதன் யாக குண்டத்தில் திட்டத்துய்மன் உடன் பிறப்பாகத் தோன்றுகிறாள். ஆக இருவரும் தோன்றல் களே தவிரப் பிறந்தவர்கள் அல்லர்.

02. வைதேகி வைகுண்டத்து விஷ்ணுவின் தேவியாகிய மகாலட்சுமியின் அவதாரமாகக் கொள்ளப்படுகின்றாள், பாஞ்சாலி கற்பரசி நளாயினி மறுபிறப்பாகக் கொள்ளப்படு கின்றாள். ஆகவே இருவரும் தெய்வாம்சங்கள்.

03. சீதைக்குச் சுயம்வரத்தின்போது இராமன் வில்லை; ஒடிக்க வேண்டியிருந்தது. பாங்சாலிக்குச் சுயம்வரத்தின்போது அர்ச்சுனன் மச்சயந்திரத்தை அம்பால் அடிக்க வேண்டியிருந்தது. எனவே இருவரும் பெரிய சாதனையாளர்களாலேயே மனைவி களாக்கப்பட்டவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. சீதைக்குக் கணவனுடன் காடேகிப் பதினான்காண்டுகள் கழிக்கும் நிலையும் (அதிலும் ஒருவருடம்வரை சிறையிருப்பு) பாஞ்சாலிக்கு கணவர்களுடன் காடேகி பன்னீராண்டு கழிக்கும் நிலையும் (மேலும் ஒரு வருடம் அஞ்ஞாத வாசம்) உண்டாகின்றன. ஆக இரு மாதரும் பதிகளுக்காகப் பட்டாப்பாடுபட்டவர்கள்.

05. சீதை காட்டிலிருக்கும் போது, காக உருவில் வந்த இந்திரன் மகன் ஜயந்தனால் முலை தீண்டப்பெற்று காகுந்தனாகிய இராமனால் காகத்திற்கு ஒற்றைக் கண் இலதாகக் காரணமாகின்றாள். பாஞ்சாலி காட்டில் வதியும்போது துச்சளையை (துரியோதனன் தங்கையை) மணந்த ஜயத்திரதனால் பலாத்காரப்படுத்தப்பட்டு, அந்நேரம் அங்குவந்த வீமனால் ஜயத்திரதன் உதைக்கப்படுவதற்குக் காரணமாகிறாள். ஆக இருவரும் அழகின் நிமித்தமான சீண்டல்களுக்கு ஆளாகின்றார்கள்.

06. சீதை பொன்மானுக்கு ஆசைப்பட்டு, அதைப்பிடித்துத்தர இராமனை வேண்ட அவன் பிரிந்த வேளையில், (மாய மானாக வந்த மாரிசன் மடியும் போது) இராமன் குரலில் ஓலம் கேட்டதால், அதனை ஆபத்து என உணர்ந்து இலக்குவனை அனுப்ப முனைகிறாள். அண்ணனின் ஆற்றல் உணர்ந்த இலக்குவன், அது அரக்கர் சூழ்ச்சி என எடுத்துரைத்தபோதும், உணர்ச்சி மேலோங்கி நின்ற சீதை, அறிவுக்கு இடம் தராது நின்ற நின் நிலை நெறியிற்று அன்று (கம்.ஆரணிய காண்டம், 814 ஆம் பாடல்) என்று அவன் ஒழுக்கத்தில் சந்தேகப்பட்டது மாத்திரமன்றி, மேலும் நிற்பையேல் வனத்தீயுள் வீழ்வேன் என்று ஏசியதால் இலக்குவனும் பிரிய, ஆபத்திற்கு அடிக் காரணமாகின்றாள். இதேபோல் பாஞ்சாலியும், இந்திரப்பிரஸ்த இராசசூய யாகத்திற்கு வந்த துரியோதனன், மாயனால் செதுக்கப்பட்ட மாளிகையின் நீர் நிலை அறியாது தடுக்கி வீழ்ந்தபோது, மாடியில் நின்று மைத்துனனாகிய அவனைப் பார்த்துச்சிரித்து, ஆபத்திற்கு அடிக்காரணமாகின்றாள். ஏனெனில் இந்திரப்பிரஸ்தத்திலிருந்து மீண்ட துரியோதனன் அதனை எண்ணிக் குமுறிநிருக்க வேண்டும். இதனால்தான் மறைவான அந்தச் செய்தியை, துச்சாதனன் கன்னலின் மொழியாள் மூரல் விளைத்ததும் (வில்லி பாரதம் சூதுபோர்ச் சருக்கம் : 13 ஆம் பாடல்) என்று மற்றவர்க்கும் கூறி உசுப்பேற்றுகின்றான். இதையே பாரதி தன் பாஞ்சாலி சபதத்தில், துரியோதனன் கூற்றாகவே 'அந்த ஏந்திழையாளும் நகைத்தாள் இதை எண்ணுவாய் என்று மாமனுக்குரைப்பான். ஆக இருவரும் துயர் வரவுக்குக் காரணமான உணர்ச்சியை வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

இவ்வாறு நாம் எடுத்துக்கொண்ட மோதுகளம், சூதுகளம் ஆகிய கள ஒப்பீட்டிற்கு முன்னரும் பின்னரும் இன்னும் பலவற்றை ஒப்பிடலாமேனும் விரிவஞ்சிவிடுத்து, இனி கள ஒப்பீட்டுக்குள் நுழைவாம்.

இராம இராவண மோதுகளத்தில், காகுந்தன் கணையால் காலனை எய்திவிட்டான் இலங்கேசன்; யுத்தம் முடிவுக்கு வந்துவிட்டது. சீதைக்குச் செய்தி அனுப்ப வேண்டும். விரும்பியபடி வீடணனுக்கும் முடிபுனைந்தாயிற்று ஆக வீடண உதவியோடு இராமனே நேரில் சென்று சீதையைச் சந்திக்கவும் முடியும்; ஆனால் செல்லவில்லை. காரணம், பதினான்கு வருடம் காட்டிலுறைவதாகக் கூறிவந்தவன் அதாவது நாட்டின் சுகமிழந்து வந்தவன், அவ்வெல்லை நிறைவதற்குள் சுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறச் செல்ல விரும்பவில்லையென அறிஞர் உரைப்பர். வீடணனை அனுப்பிச்சொல்லி இருக்கலாம். ஏனெனில் நாட்டின் தலைவனாக்கப்பட்டிருந்தாலும் இராமன் கட்டளைக்குக் காத்துக் கிடப்பவன் அவன். அவனையும் அணுகவில்லை. ஆஞ்சனேயனிடமே செய்தியைச் சொல்லிவிடுகிறான் இராமன். இதற்கும் அறிஞர் காரணமுரைப்பர். முன்னாளில் சீதையைக் கண்டு வரும்போது ஈண்டொரு திங்கள் இவ்விடரின் வைகுதல் வேண்டுவதன்று கம்.சுந்தரகாண்டம், சூடதமணிப்படலம்: 66ஆம் பாடல்) என உரைத்து வந்து இராமற்குச் சொல்லியவன் அனுமன். ஆக அவனைக் கொண்டு நற்செய்தியுரைத்தலே நல்லதென்று எண்ணுகின்றான்.

ஆக இராவணன் வீழ்ச்சிச் செய்தியை அனுமன் சீதைக்கு உரைத்து ஆனந்தப் படுகிறான். இதற்கு எதிராக சூது போர்க்களத்தில் சோகச் செய்தியொன்று பாஞ்சாலிக்கு அறிவிக்கப்படுகிறது. அதாவது சகுனியின் பகடை உருட்டலில் இறுதியாகத் தருமன் தன் தாரத்தையும் வைத்து இழந்து விடுகிறான். துரியோதனனின் மகிழ்ச்சி எல்லைமீறுகிறது. பக்கத்தில் நின்ற பிரதிகாமியாகிய தேர்ச்சாரதியை அழைத்து "நீ நனி விரைவில் ஓடிச் சென்று அவன் இருந்த கோலத் தெரிவையைக் கொணர்தி" (வில்லிபார. சூதுபோர்ச் சருக்கம். 209ஆம் பாடல்) என்கிறான். இதனையே பாஞ்சாலியிடம் "நின்னை அழைத்துவ நேமித்தான் எம்மரசன்" என்று பாரதியின் பாஞ்சாலிசபதத் தேர்ப்பாகன் சொல்லுவான்.

ஆக இராமாயணத்தில் மோது களத்தின் அறிவிப்பு அனுமனால் நிகழ்கிறது. இங்கு சூதுகள அறிவிப்பு பிரதிகாமியால் நிகழ்கிறது.

அடுத்து பிரதிகாமியின் அழைப்பைத் திரௌபதி என்னைத் தோற்றபின் தன்னைத் தோற்றாரா? அல்லது தன்னைத் தோற்றத்தின் என்னைத் தோற்றாரா? என்ற தர்க்கத்தால் மறுத்து அனுப்ப கோபங்கொண்ட துரியோதனன் தம்பி துச்சாதனனை அனுப்புகிறான். இதனை வில்லியார் துச்சாதனனை முகநோக்கி, அல்லல் பான்மை பெற்று அழிந்த ஐவர்க்கொருத்தி ஆகிய அம் மல்லர் பானல் (வளமுள்ள கருங்குவளை மலர்) விழியாளை மண்பேரவையின் அழை (சூது, போர் சுருக்கம் 212 ஆம் பாடல்) என்றான் என்கிறார். அதன்படி சென்ற துச்சாதனன் அவளை அழைக்க, அவள் நியாயம் கேட்டும், மாத விலக்காதலால் ஓராடையில் இருக்கிறேன். (பாஞ்சாலிசபதம்) என்பதுணர்ர்ச்த்தியும் மறுக்க, அதைக் கேட்காத துச்சாதனன் தலைமுடி பற்றி சூதுகளத்திற்குத் தெருத் தெருவாக இழுத்துச் செல்கிறான். ஆனால் இராமாயணத்தில் இலக்கண நிலைச் செய்தியறிவித்து அனுமன் மீண்டபின் விபீடணனிடம் சீதையை அழைக்கும் பொறுப்பைக் கொடுக்கிறான் இராமன். அப்படிக் கொடுக்கும்போது இராமன் செல்கின்ற சொற்களை வீடணன் விளங்கிய முறையில் ஏற்பட்ட மாற்றத்தால் இன்பியல் களம் துன்பியலாகிறது.

அதாவது, 'விடண! சென்று தா நம தேவியைச் சீரொடும் (கம்.யுத்தகாண்டம், மீட்சிப்படலம்: பாடல்.37) என்கின்றான் இராமன். சீர் என்ற சொல்லுக்கு செல்வம், அழகு, நன்மை, பெருமை, தலைமை, மதிப்பு, புகழ், இயல்பு, நேர்மை, செம்மை பொருள் என்ற பல்பொருளை அகராதி தருகின்றது. இதனை அழகாக விபரிப்பர். புலவர், அ. அருணகிரி. அவர் கூற்றாக சிறையிருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வியின் நன்னடையினை உலகுக்கு உணர்த்த, சிறையிலிருந்த இயல்பு குன்றாமல், அவளுடைய புகழுக்குரிய பெருமையோடு சிறப்பாக அழைத்துவா என்பதே சீராடும் என்றதன் பொருள். 'வீடணனோ ஆடை அணிகலன்களால் அழகுபடுத்தி அழைத்துவா என்று சொன்னதாகப் பொருள் கொண்டுவிட்டான். என்று அழகாகத் தொடுத்துக் காட்டுகிறார். (கம்பக்கதம்பம் - பக்:179) இதனை கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் அவர்களும் தமது உலகம்யாவையும் என்ற நூலிலுள்ள ஒருகட்டுரையில் மிக அழகாகவும் நுணுக்கமாகவும் எடுத்துரைப்பார் ஆகமோது களத்திற்கு அழைத்துவரப்பட இருக்கும் சீதையை, வீடணன் அழகாக அணிமணி அணியும் படி கூறுகின்றான். ஆனாலும் சீதை.

**"யான் இவண் இருந்த தன்மை இமையவர் குழுவும் எங்கள்**
**கோனும் அம் முனிவர் தங்கள் கூட்டமும் குலத்துக்கு ஏற்ற**
**வான் உயர் கற்பின் மாதர் ஈட்டமும் காண்டல் மாட்சி**
**மேன் நிலைக் கோலம் கோடல் விழுமியது அன்று-ர"**

(கம்;யுத் மீட்.40)

என்று தன் நிலை உணர்த்துகின்றாள். ஆனால் அதற்கு வீடணன் "நீலக் குன்று அன தோளினான் தன் பணியின் குறிப்பு ஈது"(பாடல் 41) என்று தான் விளங்கிய வகையில் பதிலிறுக்கிறான். கணவன் குறிப்பறிந்து நடந்தலே கற்புடை மகளிர் ஒழுக்கமாதலின் "குறிப்பு" என்ற வீடணனின் கூற்றுக்கேற்றவாறு அலங்காரத்துக்கு உடன்படுகிறாள் வைதேகி, பின் வீடணன் பல்லக்கு அளிக்க அதிலிருந்து அமர்க்களம் வருகிறாள். அவளின் மேன்மையுணர்ந்த தேவ, அரக்க, கின்ன, கந்தருவ வானர மாந்தர் கூட்டமாக வர, நெருக்குதலை விலக்குவதற்கு அரக்கர் பிரம்பால் அடிக்க, வானரம் அலறிச் செல்வதை இராமன் கண்டு கொதியுறுகிறான்; வீடணனை அழைத்து ஏசுகிறான்; சிதையை நோக்குகிறான். நோக்குதல் என்ற சொல் பார்த்தல் என்பதிலும் மேன்மையானது என்றுரைப்பார் கம்பவாரிதி இ. ஜெயராஜ் அவர்கள் அதாவது கருத்தொடு பார்த்தலே நோக்கலாம். என்பது அவர் கூற்றின் சாரம் உதாரணமாய் "அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" என்ற இராம சிதைக் காந்தருவம் இங்கு விளங்கத்தக்கதே இப்போ போர்புரி நிலத்திற்கு அழைத்துவரப்பட்ட சீதையை 'அற்பின்(அன்பின்) அத்தலைவனும் அமைய நோக்கினான் (வீட்:60) என்பதை வைத்து, இருவரும் ஓர் ஓரங்க நாடகத்திற்கு தயாராகிவிட்டனர் என்பதுபோல் தமது இராமாயணச் சொற்பொழிவில் கூறுவார் புலவர் கீரன் அவர்கள்; ஆயினும் நேரடியாக இங்கு சீதையை அவதிக்குமாறு போலவே இராமன் கூற்றுத் தொடங்குகிறது. அதாவது,

**"ஊண்திறம் உவந்தனை ஒழுக்கம் பாழ்பட**
**மாண்டிலை: முறைதிறம்பு அரக்கன் மாநகந்**
**ஆண்டுறைந்து அடங்கினை, அச்சம் தீர்த்து இவண்**
**மீண்டது என் நினைவு? எனை விரும்பும் என்பதோ!"**(வீட்:62)

எனப்பேசக் கூடாத பேச்சால் பேசுகிறான் இராமன். இது அவள் அலங்காரம் பெருக்கிய கோபத்தின் வெளிப்பாடாகலாம். ஏனெனின் பொது வாழ்வின் தலைவனாக இருக்கும் இவன், தன் தலைவி ஒழுக்கம் குறைந்தவளாக இருப்பின், உலகத்திற்கு அது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலுக்காகும் எனக்கருதியிருத்தல் கூடும். ஆக, மகிழ்வாக ஆடையணியில் வரும் அவளை இராவணன் நாட்டில் மகிழ்வாய் இருந்தாள் எனப் பார்ப்போர் கருதுவார் என்ற நினைவு, அவனை அலைக்கழித்திருக்கலாம். இந்நிலையில் இராமாயணச் சீதை தன்நிலையை எண்ணி வருந்தி அழுகின்றாள்.

"பங்கையத்து ஒருவனும் விடையின் பாகனும்
சங்கு கைத் தாங்கிய தரும மூர்த்தியும்
அங்கையின் நெல்லிபோல் அனைத்து நோக்கினும்
மங்கையர் மனநிலை உணரவல்லரோ" (மீட்:17)

என இராமன் மட்டுமல்ல பிரம்மா, சிவன், விஷ்ணு போன்ற கடவுளரே கூடப் பெண்களை உண்மையாகப் புரிவதில்லை என்பதுபோல் கூறுகிறாள். வேண்டுதலும் அதனூடு தொனிப்பதை நாம் உணரமுடியும். சூதுகளப் பாஞ்சாலியை நோக்குவோம். துச்சாதனனால் இழுத்து வரப்பட்ட அவள், அரசசபையின் மூத்தோர் அறிஞர் இருப்பதால் தனக்கு முறைகிடைக்கலாம் என இறைஞ்சுவதைக் காணலாம். மல்லார் திண்டோள் மாமாவோ, மந்தாகினியாள் மதலாயோ, எல்லா நெறியும் உணர்ந்தவருக்கு இதுவோ மண்ணில் இயல்பு (சூது. போர்ச்சுருக்கம் 233) என்றாள் அதாவது மாமன் திருதராட்டினனிடமும் பிதாமகர் பீஷ்மரிடமும் நியாயம் கேட்கிறாள், இறைஞ்சுகிறாள்.

சீதை, திரௌபதி இருவருக்கும் இச்சூழலில் நியாயம் நேரிடையாகக் கிடைக்க வில்லை. இராமாயணத்தில் கணவனே துன்புறுத்தும் நிலை பாரதத்தில் கணவர்கள் துன்பங்கண்டும் கைகட்டி நிற்கும் நிலை.

அடுத்து, இராமாயணத்தில் இலக்குவனிடம், தன் கற்புடைமையை நிலைநிறுத்த அக்கினி மூட்டும்படி சீதை கோருகின்றாள். இதற்கு பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன் அவர்கள் ஒரு சுவாரஸ்மான உரைவகுப்பார். அதாவது (கானகத்தில் ஏசிய) குற்ற உணர்வினால் வருந்துகின்ற பிராட்டியும். இளையபெருமாளும் விரைவில் சந்தித்து அயோத்தி சென்று ஒரே இடத்தில் வாழ வேண்டிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிக்கிறது. குற்ற உணர்வுடைய ஒருத்தி எவ்வளவு தான் மறக்க முயன்றாலும் இலக்குவனைப் பார்க்கும் போதெல்லாம்அந்தக் குற்ற உணர்வு அவளுடைய மனதில் நெருடிக்கொண்டே இருக்கும். எனவே இக்குற்றம் போக வேண்டுமானால், இலக்குவனால் தான் ஒரு தண்டனை அடைய வேண்டும் அதுவே தான் செய்த குற்றத்திற்குக் கழுவாய் என்று நினைக்கிறாள் பிராட்டி (கம்பன் எடுத்த முத்துக்கள். பக். 322) என்று கூறுகிறார் அவர்.

ஆக, மோதுகளச் சீதை அக்கினி மூட்டுவதும் சொல்ல சூதுகளப்பாங்சாலி அக்கினிச் சொற்களை மூட்டுகிறாள்

அடுத்து, சீதை அக்கினி குண்டத்தில் தானே மூழ்கித் தன்துன்பத்திற்குத் தீர்வு தேட, பாங்சாலிக்கு துச்சாதனன் துகிலுரியும்போது கண்ணன் துகில் உதவித் தீர்வுதேடிக் கொடுப்பதும் ஆக அக்கினிக்கடவுள் எரிக்காது சீதையை அனுமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கி வெளியே வருவதும், கண்ணபெருமான் பாஞ்சாலிக்கும், துச்சாதனனுக்கும் தெரியும்படியாய் நின்று அருளுவதும் ஒப்புமையாகப் பார்க்கக் கூடியன. மோதுகள முடிவிலும், இந்நிகழ்வின் முடிவிலும். இப்புன்மைசால் ஒருத்தியைச் சுடாது போற்றினாய் (மீட்:90) என அக்கினியை இராமன் கோபிப்பதையும். பாஞ்சாலியின் துகில் வளர்ந்த பின்னும் சூதுகளத்தில் பைந்தொடியைக் கொணர்ந்தினி என் மடியின் மிசை இருத்து (சூதுபோர்.253) எனத் துரியோதனன் நவில்வதையும் கூட இங்கு ஒப்புநோக்கலாம்.

நிறைவாக, மோதுகளச் சீதை இராமனோடு இணைந்து கொள்வதை அவதானிக்க முடிகிறது. சூதுகளப் பாஞ்சாலி துகிலுரிவு நிகழ்ந்து தொடையிருக்க அழைத்த பின் புன்றொழிலோன் யானிருக்கக் காட்டியதன் தொடைவழியே புள்வாய்குத்தச் சென்றிடுக. ஆருயிர் (சூது:254) என்று சபித்தது மல்லாமல்,

**"அரசவையில் எனையேற்றி அஞ்சாமல் துகில் தீண்டி அளகம் திண்டி**
**விரைசெய் அளியினம் படித்தீர் வேந்தர் எதிர்தகாதனவே விளம்புவோரை**
**பொருசமரின் முடி துணித்துப் புலனாறு வெங்குருதி பொழிய வெற்றி**
**முரசறையும் பொழுதுதல்லால் விரித்தகுழல் இனியெத்து முடியேன்"**

என்று (சூது போர்.255) சபதமிட்டுக் கணவர்களுடன் இணைந்து காடுசெல்லும் நிலையையும் காணமுடிகிறது.

ஆக, சோதனைகளால் பெற்றார்களேனும் இருகளத்து மாதரும், கற்புத் தெய்வங்களாய் ஆராதிக்கப்பட்டு வருவதை இன்றளவும் நாம் உணரமுடிகிறதல்லவா? நாமும் கதையை முடித்தோம் இந்த நானிலம் முற்றும் நல்இன்பத்தில் வாழ்க என பாரதி பாஞ்சாலி சபத்தில் கூறியதைக் கூறி அமைவோம்
.

## உசாத்துணைகள்


1. கம்பராமாயணம் - வை.மு.கோ.உரை
2. வில்லி பாரதம் - வை.மு.கோ.உரை
3. பாஞ்சாலி சபதம் - பாரதியார்.
4. கம்பன் எடுத்த முத்துக்கள்- பேரா.அ.ச.ஞானசம்பந்தன்
5. கம்பக்கதம்பம் - புலவர் அ. அருணகிரி
6. ஒப்பியல் இலக்கியம் - பேரா.க.கைலாசபதி
7. மகாபாரதம் பேசுகிறது - துக்ளக். சோ
8. வான்மிகி இராமாயணம் - துக்கச்.கோ
9. மஹாபாரதம் - பி.ஆர்.கோப்ரா.(தமிழாக்கம் வெங்கட்
10. இராமாயணம் - சொற்பொழிவு - புலவர் கீரன்



**திரு. ச. மார்க்கண்டு,**
விரிவுரையாளர்,
தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக தொலைக்கல்விப் பிரிவு
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொழில் வாண்மையும் ஆசிரியர்களும்.

தொழில் வாண்மை என்பது ஏனைய தொழில்களில் செல்வாக்குச் செலுத்திய அளவுக்கு கல்வியில் செல்வாக்குச் செலுத்தவில்லை என்ற குறைபாடு கல்வியலாளர்களால் சுட்டிக்காட்டப்படுகிறது. செய்யும் தொழிலின் வாண்மையை நன்கறிந்து செயற்படும் மருத்துவத் துறை, சட்டத்துறை, பொறியியற்துறை போன்று ஆசிரிய வாண்மைத்துறை வளர்ச்சியடைந்ததாக இல்லை என்றே கருதப்படுகிறது. ஆசிரிய வாண்மை என்பது மிக முக்கியமானது ஆசிரியப் பண்புகள் என்று நாம் கருதும் பொழுது, சில முக்கிய அம்சங்கள் நமது மனதில் தோன்றும். முன்பு கிராமப் புறங்களில் ஆசிரியர் ஒருவரை பிறிதொருவர் "இவர் ஓர் ஆசிரியர்" என்று அறிமுகம் செய்யாமலேயே நாம் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது. அவர்களின் பேச்சிலும், நடத்தையிலும் பண்பிலும்,இவற்றை நாம் காணலாம். இன்றும் சில இடங்களில் இதைக் காணலாம். இவ்விதமான ஆசிரியர்கள் பெரியதொரு பொறுப்பு தம்மிடம் விடப்பட்டுள்ளது என்றும் தம்மிடம் பயிலும் மாணவர்கள் தமது சொந்தப் பிள்ளைகளே என்றும் நித்தம் சிந்திப்பவர்களாகவே காணப்படுவர். இதனாலேயே ஆசிரியத் தொழில் "ஒரு நாட்டைக் கட்டியெழுப்பும் தொழில்" எனக் கருதப்பட்டது. "**கேத்திர கணிதம் தெரியாதவர் பல்கலைக்கழகத்துக்குள் நுழையக்கூடாது.**" என்று பிளேட்டோ குறிப்பிட்டது. போன்று. தொழில் வாண்மையை விளங்கிக் கொள்ளாதவர்கள் ஆசிரியர் பணியில் ஈடுபடக் கூடாது எனலாம்.

ஆசிரியத் தொழிலின் வாண்மை தொடர்பாக நன்னூலாரே நமக்கு சிறப்பாக எடுத்தியம்பியுள்ளார்.நல்லாசிரியரின் பண்புகள் பற்றி அவரால் குறிப்பிடப்படுகிறது. "**உலகத்தோடு ஒத்து ஒழுகல்**" தான் இன்றைய எமது தேவை. உலகம் துரித வேகத்தில் பல்வேறு மாற்றங்களைக் கண்டு வருகின்றது. புதிய சிந்தனைகளும், உபகரணங்களும், உத்திகளும் தினமும் மாறிய வண்ணம் உள்ளன. தொழில் நுட்பவிருத்தி, தகவல் தொடர்புச் சாதனங்கள் என்பவற்றால் கருத்துக்கள் கடத்தப்பட்ட வண்ணம் இருக்கின்றது. இந்நிலையில் காலத்தின் தேவைக்கு ஏற்ப நவீன கருத்துக்களுடனும், உடனடித் தகவல்களைத் தரக்கூடிய திறனும் நம்பகமும், தகுதியும் கொண்டவர்களாக ஆசிரியர்கள் விளங்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆசிரியர் ஒருவர் அடிப்படையான தொழில்சார் திறன்களையும், அறிவுசார் உள்ளடக்கத்தையும் பெற்று விட்டால் அவர் தொழிலில் வெற்றி பெற்றுள்ளார். என நாம் கருதமுடியாது. ஆசிரியத் தொழிலானது தொடர்ச்சியான சவால்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளது. சிலவற்றை நாம் முன் கூட்டியே உணரலாம். சில சவால்கள் எதிர்பாராத நிலையில் வருவனவாகும். பெரும்பாலான சவால்களை எதிர் கொண்டுவரும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்காத ஆசிரியரை தொழிலில் வெற்றி பெற்றவராகக் கருத முடியாது. எனவே வெற்றியடைந்த ஆசிரியர் ஒருவர் இச் சாவால்களை எதிர்கொள்ளக்கூடிய வகையில் வாண்மை ரீதியான ஆயத்த நிலையில் உள்ளவராக இருப்பர்.

இலங்கையில் இன்று நடைமுறைப்படுத்தப்படும் புதிய கல்வி மறுசீரமைப்பிலும் கூட ஆசிரியத் தொழில்சார் விருத்திக்கான பல்வேறு விதிப்புரைகள் முன்மொழியப்பட்டுள்ளன. ஆசிரியர்களின் தொழில் வாண்மை விருத்திக்காக ஆசிரியர்களுக்கு தொழிலில் ஈடுபடுவதற்கு முன்னர் வழங்கப்படும் முன்சேவைப் பயிற்சியும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் போது வழங்கப்படும் தொடருறு பயிற்சிகளும், சேவைக்காலப் பயிற்சிகளும் ஆசிரியவாண்மை விருத்தியை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றன.

ஆசிரியர் தமது தொழிலைச் செய்வதில் அத் தொழிலுக்குரிய சிறப்புத் தேர்ச்சியை பெற்றிருக்க வேண்டும். அதாவது தமது கற்பித்தல் செயன்முறையின் போது மாணவர்கள் அடைய வேண்டும் என எதிர்பார்க்கப்படும் திறன்களைப் பெறுவதற்கு வேண்டிய தகுதிகளையும் அதற்குரிய தேர்ச்சியையும் கொண்டிருத்தலாகும். "**நல்லதொரு ஆசிரியர் குழாம் இன்றி நல்லதொரு பாடசாலையை உருவாக்க முடியாது**". அதாவது நல்லாசிரியர்கள் இன்றி கல்வி விருத்தியடையாது என்பதாகும்.

காலத்தின் தேவைக்கேற்ப மாறிவரும் சமூகத் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு கல்வி மறுசீரமைப்புகள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. அவ்வாறான புதிய செயற்பாடுகளில் உயரிய பயனைப் பெறுவதற்கு புதிய அறிவு, புதிய திறன்கள், நவீன தொழில் வாண்மை உத்திகளை ஆசிரியர்கள் உள்வாங்க வேண்டியவர்களாக உள்ளனர்.

## ஆசிரியர் எதிர் நோக்கும் நடைமுறைப்பிரச்சினைகளாக

மாணவர்களின் வரவு ஒழுங்கினம் தொடர்பான பிரச்சினைகள், மாணவர்களுக்கிடையிலான சச்சரவுகள், முரண்பாடுகள் வளர்தல், மாணவர்களின் பயிற்சிக் கொப்பிகளைத் திருத்துவதில் நேரப்பிரச்சினையை எதிர்நோக்குகின்றனர். சில பாடசாலைகளில் நிர்வாகரீதியாக போதியளவு உதவியின்மை, பலவீனமான நிர்வாகமும் வழிகாட்டலும், ஆசிரியர்களின் திருப்தியற்ற வேலைநிலைமைகள், உபகரணங்கள், நிதிப்பற்றாக்குறை, குறைந்து செல்லும் மாணவர் சேர்வு, பெற்றோர் பழைய மாணவர்ஆதரவின்மை ஆசிரியரிடம் போதிய உளவியல் அறிவின்மை, பொருத்தமற்ற வகுப்பறைகளின் நிலை என்பவற்றை காணக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நல்லாசிரியரின் பண்புகளாக:-**

- மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முழுப் பொறுப்பையும் ஏற்பவர் ஆசிரியராவார். அவர்கள் தம்கடமையைச் சரிவர நிறைவு செய்வதற்கு பல வகைப்பட்ட நன்மனப்பாங்குகளை உடையவராக இருக்க வேண்டும்

- தாம் கற்பிக்கும் மாணவர்மீது கொண்டுள்ள அக்கறையும், கருணையும் அவர்கள் தம் தொழிலில் கொண்டுள்ள பற்றுறுதியை வெளிப்படுத்துவதாக அமைதல் வேண்டும்.

- கற்பித்தல் செயற்பாடுகளை சிறந்த முறையில் ஒழுங்குபடுத்திக் கொள்வதன் மூலம் நல்லதொரு வகுப்பறை சூழ்நிலையை உருவாக்குதல் வேண்டும்.

- தமது பணிக்கான வகை கூறும் பொறுப்பை ஆசிரியர் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆசிரியர் மாணவர்கள் தொடர்பான விடயங்களில் அவதானமாக இருப்பதோடு அவர்களின் அடைவு தொடர்பான விடயங்களுக்கு விளக்கம் அளிக்கும் மனப்பாங்கை வளர்த்தல் அவசியமாகும்.

- சினேக பூர்வமானதும் நகைச்சுவையுணர்வுடன் கூடியதும் சுவாரசியமானதும், நியாயபூர்வமானதுமான சிறப்பான ஆசிரியர், மாணவர் இடைத் தொடர்புகளைப் பேணல்.

- கற்கும் விடயங்களை நன்கு தெளிவு படுத்திக் காட்டுவதற்கு முயலுதல்.
- மாணவர்கள் இலகுவாகக் கிரகித்துக் கொள்ளக் கூடிய விதத்தில் கற்பிக்க விருக்கும் பாட உள்ளடக்கத்தினை ஒழுங்குபடுத்தி இலகுவாக்கி வழங்குவதன் மூலம் கற்றலை தனதாக்கிக் கொள்ளுதல்.

- மாணவர்களை சுயகற்றலில் ஈடுபடுமாறு ஊக்குவித்தலுடன், தாமும் தொடர்ந்து கற்பதில் ஈடுபாடு கொள்ளுதல்.

- பாடசாலையிலும், சமூகத்திலும் ஒழுக்காற்றைப் பேணுபவராக இருத்தல்.
- பாடங்கள் தொடர்பான பிரச்சினைகள், மாணவர்களின் தனிப்பட்ட பிரச்சினைகள்
- என்பவற்றை விளங்கிக் கொண்டு அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவும் பண்புள்ளவராக இருத்தல்.

- ஆசிரியர் தாம் கற்பிக்கும் பாடம் தொடர்பாக சிறப்புத் தேர்ச்சி பெற்றிருந்தாலும் அவர் தம் பாடங்களைக் கற்பிக்க முன் திட்டமிடல் அவசியமாகும். பாட உள்ளடக்கம் பற்றியும், கற்பிக்கும் நுட்பமுறை பற்றியும், ஒழுங்கமைப்பு முறை பற்றியும், வகுப்பறையில் சமூக பௌதீக, சுற்றாடல் பற்றியும் ஆசிரியர் மாணவர்கள் கற்பித்தல் செயற்பாடுகள் பற்றியும் முன்னரே செய்ய வேண்டிய திட்டமிடல் அவசியமாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உளவியல் கற்ற ஒரு ஆசிரியரையும், கற்காத ஆசிரியரையும் அவர்கள் கற்பித்தலில் ஈடுபடும் போது இலகுவில் அடையாளம் காணமுடியும். பிள்ளைகளுடன் சேர்ந்து இயங்கும் முறை, நல்ல விடயங்களை முன்வைக்கும் முறை என்பவற்றில் இவ்வேறுபாடுகளை அவதானிக்க முடியும் சிறந்த ஆசிரியராக அமைவதற்கு உளவியல் அறிவு அவசியமாகின்றது.

ஆசிரியர்கள் பாடசாலைகளில் வழங்கப்படும் பல்வேறு பொறுப்புக்களையும் ஏற்று செயற்பட வேண்டும். இணைபாடவிதான செயற்பாடுகளின் வளர்ச்சியில் ஒவ்வொரு ஆசிரியரினதும் பங்களிப்பு அவசியமாகின்றது. அவர்கள் தமக்கு வழங்கப்படும் பொறுப்புக்களை ஏற்று அதனைச் சரிவரச் செய்யும் போது தொழில் வாண்மை சிறப்புப் பெறுகின்றது.

ஒவ்வொரு ஆசிரியரும் பணியாற்றும் போது பல்வேறு தனி நபர்களுடன் சிறந்த தொடர்பாடலை வைக்க வேண்டியதாக உள்ளது. மாணவர்கள், ஆசிரியர்கள், பகுதித் தலைவர்கள், சேவைக்கால ஆலோசகர்கள், கல்வி அதிகாரிகள், பெற்றோர் பழைய மாணவர் போன்றவர்களுடன் சிறந்த தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வது சிறந்த செயற்பாடு, வாண்மை விருத்தி என்பவற்றுக்கு வழிவகுக்கும். எனவே தமது பாடக்குறிப்பு, பாடப்பதிவுகள், கணிப்பீடுகள், அதிபரால் வழங்கப்படும் மேலதிக செயற்பாடுகள் என்பவற்றை திறம்படச் செய்து. நற் பெயரைப் பெறுவதன் மூலம் தன் தொழில் வாண்மையை விருத்தி செய்யலாம்.

மேலும் கற்பித்தல் செயற்பாட்டின் போது ஆசிரியர் சிறந்த வகுப்பறை முகாமைத்துவத்தை கடைப்பிடிப்பவராக இருத்தல் வேண்டும் வகுப்பறை ஒழுங்கு, அமைதி, கட்டுப்பாடு என்பவற்றை முறையாக நடைமுறைப்படுத்தி சிறப்பான கற்பித்தலுக்கு வழியமைத்தல் அவசியம்.

எனவே ஆசிரிய வாண்மை என்பது வகுப்பறையில் இடம் பெறுகின்ற செயற்பாடுகளையே பெரிதும் வலியுறுத்துகின்றது. வினைத்திறன் உள்ள ஆசிரியன் ஒருவன் வினைத்திறனுள்ள கற்பித்தலை மேற்கொள்வதிலேயே அவனது தொழில் வாண்மை மேலோங்கி நிற்கின்றது. ஆசிரியர் தமது நேரடி நுகர்வோனான மாணவனின் தேவைகளை அறிந்து அதற்கேற்ற வகையில் வகுப்பறையை நெறிப்படுத்துவதன் மூலமே வாண்மை விருத்தி தேர்ச்சியடைகின்றது.

**திரு. க. சுதேஸ்கரன்**
BA,PGDE, MEd
ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம் (முதற்படிவம் - First Form) நிரப்புதலும் கற்கை நெறிகளைத் தெரிவு செய்தலும்

**திரு. கணபதிப்பிள்ளை ஈஸ்வரன்,**
தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி,
வரணி ஆசிரியர் மத்திய நிலையம், தென்மராட்சிக் கல்வி வலயம்

மாணவ உலகின் உயர்வான குறிக்கோள் க.பொ.த.(உ.த) பரீட்சைகளில் சிறந்த சித்தியெய்திப் பல்கலைக்கழகம் சென்று பட்டப்படிப்பை மேற்கொண்டு தகுதியான தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளுதலாகும். ஒவ்வொரு மாணவரும் தெரிந்தோ அல்லது தெரியாமலோ இந்தக்குறிக்கோளை நோக்கியே பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அவரவரது திறமைக்கும் தகுதிக்கும் ஏற்பவே பல்கலைக்கழக அனுமதி கிடைக்கின்றது. சிலர் தகுதியுந் திறமையும் இருந்தும் பல்கலைக்கழகத்திற்கு அனுமதிக்கின்ற விண்ணப்பப் படிவமாகிய முதற்படிவத்தைச் (First Form) சரியாக நிரப்புவதில் தவறிவிடுவதால் அல்லது முதற்படிவத்தில் வினவப்பட்ட முறைமைகளை விளங்கிக் கொள்ளாமல் படிவத்தைப்பூர்த்தி செய்வதால் பலகலைக்கழக வாய்ப்பைப் பெறுந் தகுதியை இழந்து விடுகின்றனர். இது மிக மிகக் கவலைதரும் விடயமாகும். குறிப்பாக, வருடாவருடம் குறைந்தது ஐந்நூறு (500) மாணவரது விண்ணப்பப் படிவங்களாவது நிராகரிக்கப்படுகின்றமை பற்றிய பத்திரிகைச் செய்திகள் வெளிவந்தவண்ணமுள்ளன. இதில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யக்கூடிய கல்வித்தகைமை பெற்ற மணவர்களும் அடங்குகின்றனர்.



விண்ணப்பத்தில் ஒப்பமிடாததால் மாணவிக்கு பல்கலைக்கழக அனுமதி மறுப்பு

நாவிதன்வெளி தமிழ் மாணவியின் அவலநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த.(உ.த) பரீட்சையின் பின் முதற்படிவம் அனுப்புவதற்கான தகுதிப்பாடு இதுவாகும்

1. க.பொ.த .(உ/த) பரீட்சையில் மூன்று தடவைக்கு மேற்படாத ஒரு அமர்வில் பிரதான **3S** பாடங்களில் சித்திபெற்றிருத்தல்
2. பொதுச்சாதாரணப் பரீட்சையில் 30% இற்குமேல் புள்ளிகளைப் பெற்றிருத்தல்.

இவ்விரு தகுதிப்பாடுகளும் இருந்தால் முதற்படிவத்தை அனுப்பமுடியும். ஒரு தடவையில் பொதுச்சாதாரணப்பரீட்சையில் 30% புள்ளிகள் கிடைக்கவில்லையாயினும் முதற்படிவம் அனுப்பமுடியும். அவ் விண்ணப்பதாரி **Z** புள்ளி அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்படலாம். எனினும் க.பொ.த .(உ/த) பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்ட மூன்று தடவைக்குள் பொதுச்சாதாரணப்பரீட்சையில் 30% புள்ளிகள் பெற்றுக் கொண்டால் மட்டுமே அடுத்துவரும் ஆண்டில் பல்கலைக்கழக அனுமதிக்காக தெரிவு செய்யப்பட்ட கற்கை நெறிக்குப் பதிவை மேற்கொள்ள அனுமதிக்கப்படுவார்.

# சிறு தவறால் பல்கலைக்கழக வாய்ப்பை இழந்த மாணவி

சிறு தவறு காரணமாக தெஹியத்தகண்டிய கிரிபுர பிரதேசத்தைச் சேர்ந்த மாணவியொருவர் பல்கலைக்கழக வாய்ப்பை இழந்துள்ளார்.

ஹஸின் சந்தமாலி என்ற இந்த மாணவி கலை பிரிவில் உயர்தர பரீட்சையில் தோற்றி அழகியல் கலைப் பிரிவில் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றிருந்தார்.

எனினும் பல்கலைக்கழக நுழைவு தொடர்பான விண்ணப்பத்தில் இருந்த குறைபாடு காரணமாக அவர் பல்கலைக்கழக வாய்ப்பை இழந்துள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த மாணவி கூறும் போது: இணையத்தளம் ஊடாக எனது விண்ணப்பத்தை அனுப்பினேன். பின்னர் எனது விண்ணப்பத்தின் இரண்டாவது பக்கம் ஆணைக்குழுவிற்கு கிடைக்கவில்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் இருந்து கடிதம் வந்தது.

7 நாட்களுக்குள் அந்தக் குறைபாட்டை நீக்கி விண்ணப்பத்தை அனுப்புமாறு அந்தக் கடிதத்தில் கூறப்பட்டிருந்தது. எனினும், 6 ஆவது நாள்தான் எனக்கு அந்தக் கடிதம் கிடைத்தது.

நான் உடனடியாக அந்தக் குறைபாட்டை நீக்கி பதிவு அஞ்சல் ஊடாக அந்த விண்ணப்பத்தை அனுப்பினேன். எனினும், எனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாக சில நாட்களுக்கு பின்னர் மீண்டும் எனக்கு கடிதம் வந்தது. நான் அனுப்பிய விண்ணப்பம் ஆணைக்குழுவிற்கு கிடைக்கவில்லை என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் நான் கொழும்புக்குச் சென்று இது தொடர்பாக இருந்த அனைத்து ஆவணங்களையும் ஆணைக்குழுவில் ஒப்படைத்தேன்.

எனினும், எனது கோரிக்கையை ஏற்க முடியாது என்று பின்னர் எனக்கு கடிதம் ஒன்று வந்தது. இந்த தொழில்நுட்பம் மற்றும் செல்லாத அந்த பக்கத்தால் நான் என் வாழ்க்கை இன்று இருண்டுள்ளது. தனக்கு நியாயத்தை பெற்றுத் தர வேண்டுமென்று அந்த மாணவி கண்ணீருடன் கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதற்படிவத்தை நிரப்பும் போது மணவர்கள் அறிந்திருக்க வேண்டிய முக்கியமான விடயம், ஒருவர் தான் க.பொ.த. (உ.த) வில் கற்பதற்குத் தெரிவு செய்த பாடச்சேர் மானங்களுக்கு அமைவாக 125 **(Uni codes)** பட்டக்கற்கை நெறிகளுக்கும், அந்தந்த கற்கை நெறிகளை வழங்கும் பல்கலைக்கழகங்களுக்கும் விண்ணப்பிக்க முடியும்.

Order of Preference

| No. | Uni-Code | No. | Uni-Code | No. | Uni-Code | No. | Uni-Code | No. | Uni-Code |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 0 0 1 B | 26 | 0 0 7 L | 51 | | 76 | | 101 | |
| 2 | 0 0 1 F | 27 | 0 0 7 R | 52 | | 77 | | 102 | |
| 3 | 0 0 1 C | 28 | 0 0 4 H | 53 | | 78 | | 103 | |
| 4 | 0 0 2 B | 29 | 0 0 4 K | 54 | | 79 | | 104 | |
| 5 | 0 5 8 A | 30 | 0 0 4 M | 55 | | 80 | | 105 | |
| 6 | 0 0 1 D | 31 | 0 0 7 K | 56 | | 81 | | 106 | |
| 7 | 0 0 3 B | @ 32 | 0 2 5 E | 57 | | 82 | | 107 | |
| 8 | 0 0 1 H | 33 | 0 2 6 G | 58 | | 83 | | 108 | |
| 9 | 0 0 1 K | # 34 | 0 2 7 D | 59 | | 84 | | 109 | |
| 10 | 0 0 4 K | # 35 | 0 7 6 U | 60 | | 85 | | 110 | |
| 11 | 0 0 5 M | 36 | 0 7 9 J | 61 | | 86 | | 111 | |
| 12 | 0 0 6 B | 37 | 0 8 7 M | 62 | | 87 | | 112 | |
| 13 | 0 3 2 N | 38 | 0 0 6 E | 63 | | 88 | | 113 | |
| @ 14 | 0 3 7 B | 39 | 0 0 4 E | 64 | | 89 | | 114 | |
| @ 15 | 0 5 1 B | 40 | | 65 | | 90 | | 115 | |
| @ 16 | 0 5 2 C | 41 | | 66 | | 91 | | 116 | |
| @ 17 | 0 5 4 B | 42 | | 67 | | 92 | | 117 | |
| @ 18 | 0 5 4 A | 43 | | 68 | | 93 | | 118 | |
| 19 | 0 6 4 A | 44 | | 69 | | 94 | | 119 | |
| 20 | 0 0 6 C | 45 | | 70 | | 95 | | 120 | |
| # @ 21 | 0 3 4 G | 46 | | 71 | | 96 | | 121 | |
| 22 | 0 3 5 C | 47 | | 72 | | 97 | | 122 | |
| 23 | 0 6 2 F | 48 | | 73 | | 98 | | 123 | |
| 24 | 0 0 6 J | 49 | | 74 | | 99 | | 124 | |
| 25 | 0 0 6 H | 50 | | 75 | | 100 | | 125 | |

ஆனால் பல மாணவர்கள் அறியாமை காரணமாகவும், அறிந்திருந்தும் வெளியிடங்களுக்குச் செல்வதற்கு குடும்பப் பொருளாதாரநிலை மற்றும் கலாசாரப்பாதிப்பு ஏற்படும் என்ற குறுகிய மனப்பான்மை போன்ற காரணங்களால் வெளி மாவட்டங்களுக்கு விண்ணப்பிப்பதில்லை அல்லது விண்ணப்பிக்கத் தவறிவிடுவதால் பல்கலைக்கழக வாய்ப்பைப் பெற்று உயர்கல்வி கற்பதற்கான சந்தர்ப்பத்தைத் தவறவிடுகின்றமை மனவருத்தத்திற்குரிய விடயமாகும். இத்தகைய எண்ணங்களிலிருந்து மாணவர்கள் விடுபட்டு வளர்ந்து வரும் தொழில்நுட்ப உலகில் வெற்றி நடைபோட முன்வர வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலுள்ள 14 தேசிய பல்கலைக்கழகங்களிலும் 03 வளாகங்களிலும் 05 நிறுவகங்களிலுமாக 22 உயர்கல்வி நிறுவனங்களிலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு இளமாணிப் பட்டங்களை வழங்கிவருகின்றது.

## ➢ தேசிய பல்கலைக்கழகங்கள் -14

1. கொழும்பு பல்கலைக்கழகம்
2. பேராதனை பல்கலைக்கழகம்
3. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்
4. களனி பல்கலைக்கழகம்
5. மொறட்டுவை பல்கலைக்கழகம்
6. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
7. உறுகுணை பல்கலைக்கழகம்
8. கிழக்கு பல்கலைக்கழகம்
9. இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம்
10. இலங்கை ரஜெரட்ட பல்கலைக்கழகம்
11. இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம்
12. இலங்கை வயம்ப பல்கலைக்கழகம்
13. இலங்கை ஊவாவெல்லச பல்கலைக்கழகம்
14. கட்புல அரங்கேற்றக்கலைகள் பல்கலைக்கழகம்

## ➢ வளாகங்கள் - 03

1. ஸ்ரீபாளி வளாகம்
2. திருகோணமலை வளாகம்
3. வவுனியா வளாகம்

## ➢ நிறுவகங்கள் - 05

1. சுதேச மருத்துவ நிறுவகம்
2. கம்பா விக்கிரமாராய்ச்சி நிறுவகம்
3. கொழும்பு பல்கலைக்கழகக் கணினிக் கல்லூரி
4. சுவாமி விபுலானந்தர் அழகியற் கற்கைகள் நிறுவகம்
5. இராமநாதன் நுண்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுக்கும்மேலதிகமாக

➢ **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழி காட்டலோடு பின்வரும் நிறுவகங்களிற்கும் மாணவர்கள்அனுமதிக்கப்படுவர்.**

1. மனிதவள மேம்பாட்டு நிறுவகம் (கொழும்பு பல்கலைக் கழகம்)
2. தொழில்நுட்ப நிறுவகம் (மொறட்டுவைப் பல்கலைக்கழகம்)

➢ **பாராளுமன்ற சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள்**

1. இலங்கை பிக்கு பல்கலைக்கழகம்
2. பொத்த மற்றும் பாளி பல்கலைக்கழகம்
3. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் (Cadets)

இந்நிறுவனங்களில் எல்லாமாக 109 (210 Uni codes) கற்கைநெறிகள் வடிவமைக்கப் பட்டுள்ளன.

**முதற்படிவத்தை (First Form) நிரப்பும் மணவர்களின் கவனத்திற்கு...**

1. மேற்சொல்லப்பட்ட பல்கலைக்கழகத்தினால், வளாகத்தினால், நிறுவகத்தினால் வழங்கப்படும் கற்கைநெறி ஒவ்வொன்றிற்கும் தனியானதொரு குறியீடு வழங்கப்பட்டுள்ளது.
2. அக்குறியீடுகள் Uni Code எனப்படும்.
3. எல்லாமாக 210 Uni Codes உள்ளன.
4. ஒருவர் தான் க.பொ.த.(உ/த) வில் கற்பதற்குத் தெரிவு செய்தபாடச்சேர்மானங்களுக் அமைவாக 125 UniCodes இற்கு விண்ணப்பிக்க முடியும்.

ஒரு சில பல்கலைக்கழகப் பட்டக்கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கும் போது **க.பொ.த.(சா.த) பரீட்சையில் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் விசேட, சாதாரண சித்தி** மேலதிக தகைமையாக வேண்டப்படுவதோடு அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படப்பிரதியும் இணைக்கப்பட வேண்டும். இப்பாடங்களில் விசேடசித்தி பெற்றிருத்தல் பட்பயில்நெறியினை வினைத்திறனாக்கிக் கொள்வதற்கு உகந்ததாக அமையும் எனில் மிகையில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கற்கைநெறி | பல்கலை | Uni codes) |
|---|---|---|
| கலை(SP) வெகுசன ஊடகம் | ஸ்ரீபாளி | 020S |
| கட்டடக்கலை | மொறட்டுவ | 023G |
| வடிவமைப்பு (கட்டடக்கலை) | மொறட்டுவ | 024G |
| முகாமைத்துவமும் தகவல்தொழில்நுட்பம் | களனி | 027D |
| நவநாகரிக வடிவமைப்பும் உற்பத்திஅபிவிருத்தியும் | மொறட்டுவ | 034G |
| தகவலும் தொடரபாடல் தொழில்நுட்பமும் | ரஜரட்ட | 038K |
| தகவலும் தொடரபாடல் தொழில்நுட்பமும் | வவுனியா | 038R |
| கலை(SP)-அரங்கேற்றக்கலை | ஸ்ரீபாளி | 041S |
| கணினி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் | ஊவாவெல் | 065U |
| தொழில் முயற்சியும் முகாமைத்துவமும் | ஊவாவெல் | 066U |
| இசை | இராமநாதன் நுண் | 068X |
| இசை | சுவாமி விபுலானந் | 068Y |
| இசை | கட்புல,அரங்கேற்ற | 068Z |
| நடனம் | இராமநாதன் நுண் | 069X |
| நடனம் | சுவாமி விபுலானந் | 069Y |
| நடனம் | கட்புல,அரங்கேற்ற | 069Z |
| சித்திரமும் வடிவமைப்பும் | இராமநாதன் நுண் | 070X |
| நாடகமும் அரங்கமும் | சுவாமி விபுலானந் | 071Y |
| நாடகமும் அரங்கமும் | கட்புல,அரங்கேற்ற | 071Z |
| கட்புலமும் தொழில் நுட்பவியல் கலையும் | சுவாமி விபுலானந் | 072Y |
| கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம் | ஊவாவெல் | 075U |
| உடற்றொழில் கல்வி | இலங்கை சப்ரக | 081L |
| விளையாட்டு விஞ்ஞானமும்முகாமைத்துவமும் | ஸ்ரீஜயவர்த்தன | 082C |
| விளையாட்டு விஞ்ஞானமும்முகாமைத்துவமும | இலங்கை சப்ரக | 082L |
| கட்புலக்கலை | கட்புல,அரங்கேற்ற | 085Z |
| விருந்தோம்பல்,சுற்றுலா மற்றும் நிகழ்ச்சிகள்முகாமைத்துவம் | ஊவாவெல் | 090U |
| தகவல் முறைமைகள் | கொ.கணினிக் கல் | 096T |
| நிலத்தோற்றக் கட்டடக்கலை | மொறட்டுவ பல் | 097G |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | களனி பல் | 098D |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | இலங்கை சப்ரக | 098E |
| மொழி பெயர்ப்பு கற்கைகள் | யாழ்ப்பாணப் பல் | 098L |
| சினிமா தொலைக்காட்சி பற்றிய கற்கைகள் | களனி பல் | 100D |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதற்கான அறிவுறுத்தல்கள்

கல்வியாண்டு 2014/2015 தொடக்கம் இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களில் பட்டப்பயில் நெறிகளுக்கு அனுமதி கோரும் மாணவர்கள் தங்களுடைய தகவல்கள் முறையாகவும் உச்சப்பாதுகாப்புடனும் பேணப்படுவதால் தங்களுடைய விண்ணப்பத்தினை www.ugc.ac.lk என்ற இணையத்தளத்தினூடாக அனுப்பிவைக்க வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**கல்வியாண்டு 2016/2017 முதல் பல்கலைக்கழக அனுமதிக்கு இணையதளத்தினூடாக விண்ணப்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பதை கருத்தில் கொள்க. ஆதலால், இதன் பின்னர் மாணவர்கள் கட்டாயமாக பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்தல் மற்றும் தெரிவு செய்யப்பட்டுள்ள பல்கலைக்கழகத்தின் கற்கைநெறிக்கு பதிவு செய்தல் போன்றவை இணையதளத்தினுடாகவே மேற்கொள்ளப்படல் வேண்டும்.**

- **இலத்திரனியல் விண்ணப்பத்தைச் சமர்ப்பிப்பதற்குப் பின்வரும் ஆவணங்களை எடுத்துச் செல்லல் வேண்டும்.**

1. தேசிய அடையாள அட்டை (இரு பக்கங்களும் ஸ்கேன் - SCAN செய்யப்பட்டது)
2. கையடக்கத் தொலைபேசி இலக்கம்
3. செல்லுபடியான மின்னஞ்சல் முகவரி
4. க.பொ.த (சா/த), (உ/த) பெறுபேற்றுப் பிரதிகள்
5. அதிபரினால் அத்தாட்சிப்படுத்துப்பட்ட பாடசாலை விடுகைப்பத்திரத்தின் மூலப்பிரதி (தனிப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு மட்டும்)
6. பெயரில் வித்தியாசங்கள் இருப்பின் சத்தியக்கடதாசி

**இணையத்தளத்தினூடாக PDF இல் அனுப்பிய பின் பிரதி எடுக்கப்பட்டு கையொப்பமிடப்பட்ட பின் Bar codes இணைக்கப்பட்டுப் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.**

1. பாடசாலைப் பரீட்சார்த்தியாய் அமர்ந்தோர் சகல கூடுகளும் நிரப்பப்பட்டதை உறுதி செய்தபின் கல்லூரி அதிபரின் கையொப்பம் உத்தியோகபூர்வ முத்திரையிட்டு திகதியிட வேண்டும்.


2. தனிப்பட்ட பரீட்சார்த்தியாய் அமர்ந்தோர் தமது விண்ணப்பத்துடன்

   1. .பாடசாலை விலகற் சான்றிதழின் மூலப்பிரதி (Original of the School Lieaving Certificate) அல்லது மாணவர் பதிவு அறிக்கையின் மூலப்பிரதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் கிடைக்கப்பெறும் தேர்தல் தொகுதி இடாப்பின் பிரித்தெடுப்புகளின் (Extracts of Electrol Register) மூலப்பிரதி (4 வருடம்)
3. பிரதேசசெயலாளரினால் மேலொப்பமிடப்பட்டு உத்தியோகபூர்வ முத்திரையிடப்பட்ட
   கிராம சேவகரின் சான்றிதழின் மூலப்பிரதி.

ஆகிய பத்திரங்களை இணைத்து அனுப்புதல் வேண்டும்.




**முக்கியம்**

2016/2017 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்காக உங்களால் இணையதளத்தினூடாக சமர்ப்பிக்கப்பட்ட இலத்திரனியல் விண்ணப்பப் படிவம் தரவுகளை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகவே ஆகும். நீங்கள் அதன் அச்சுப்பிரதியை உரிய முறையில் கையொப்பமிட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு மூலப்பிரதிகள் மற்றும் ஏனைய ஆவணங்களுடன் பதிவுத் தபாலில் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும்.

அச்சுப்பிரதி செய்து நீங்கள் கையொப்பமிட்ட விண்ணப்பப்படிவத்துடன் வலதுபக்க மேல்மூலையில் பார்கோட்களை ஒட்டிய சகல ஆவணங்களையும் இணைத்து A4 தபால் உறையிலிட்டு உரிய முறையில் **பதிவுத் தபாலில்** பத்திரிகை அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் அனுப்பிவைத்தல் வேண்டும். முடிவுத்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பத்தின் கையொப்பமிடப்பட்ட அச்சுப் பிரதியினை பத்திரிகை அறிவித்தல்கள் மூலம் குறிப்பிட்ட முடிவுத்திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்காவிடின் நீர் கல்வியாண்டு 2016/2017 இல் பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க விரும்பவில்லை என கருதி உமது இணையதள விண்ணப்பம் கருத்தில் கொள்ளப்படாது.

விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட வேண்டிய முகவரி-

சிரேஷ்ட உதவிச் செயலாளர் - பல்கலைக்கழக அனுமதி
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு
இல. 20, வோட் பிளேஸ்,
கொழும்பு - 07.

**நீ இணையதளத்தினூடாக விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் போது பிரச்சினைகள் ஏற்படின், அரச தகவல் நிலையத்துடன் (1919) தொடர்பு கொள்ளவும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**க.பொ.த (உ/த) பரீட்சையில் நீங்கள் பயன்படுத்திய பெயரிலிருந்து உங்களால் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள பெயர் வித்தியாசமாக இருந்தால் உங்களின் பெயர் மாற்றத்திற்கான சத்தியவோலை ஒன்றை சமர்ப்பிக்கவும். (நீங்கள் ரூபா. 50 பெறுமதியான முத்திரையின் மீது சத்தியவோலையில் கையொப்பமிட வேண்டும் என்பதை கவனத்திற் கொள்ளவும்)**

**நீர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாயின் பாடசாலை விடுகைப் பத்திரத்தில் நீங்கள் பயன்படுத்திய பெயரிலிருந்து உங்களால் விண்ணப்பப் படிவத்தில் வழங்கப்பட்டுள்ள பெயர் வித்தியாசமாக இருந்தால் உங்களின் பெயர் மாற்றத்திற்கான சத்தியவோலை ஒன்றை சமர்ப்பிக்கவும். (நீங்கள் ரூபா. 50 பெறுமதியான முத்திரையின் மீது சத்தியக்கடதாசியில் கையொப்பமிட வேண்டும் என்பதை கவனத்திற்கொள்ளவும்)**

- பல்கலைக்கழகத் தெரிவு முறை

1. கலைப்பிரிவு கற்கை நெறிகளுக்கு தீவளாவிய திறமை அடிப்படையில் தெரிவு மேற்கொள்ளப்படும்.

2. வணிகப் பிரிவு, உயிரியல் விஞ்ஞானப்பிரிவு, பௌதிக விஞ்ஞானப்பிரிவு, பொறியியல் தொழில் நுட்பப்பிரிவு, உயிர்முறைமைகள் தொழில் நுட்பப்பிரிவுகள் அனைத்திற்கும்.

   40% தீவளாவிய திறமை

   55% மாவட்ட திறமை

   05% விசேட ஒதுக்கீடு

- **விசேட ஒதுக்கீடு**

5% கல்வியில் பின்தங்கிய 16 மாவட்டங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

| | |
|---|---|
| 1. நுவரெலியா | 9. மட்டக்களப்பு |
| 2. அம்பாந்தோட்டை | 10. அம்பாறை |
| 3. யாழ்ப்பாணம் | 11. புத்தளம் |
| 4. கிளிநொச்சி | 12. அனுராதபுரம் |
| 5. மன்னார் | 13. பொலனறுவை |
| 6. முல்லைத்தீவு | 14. பதுளை |
| 7. வவுனியா | 15. மொனராகலை |
| 8. திருகோணமலை | 16. இரத்தினபுரி |

**விடே ஏற்பாடுகளின் கீழ் மாணவர்களின் அனுமதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கண்பார்வையற்ற, அங்கவீனரான பரீட்சாரத்திகள்

2. இணைப்பாடவிதான செயற்பாடுகளில் திறமை காட்டிய மாணவர்கள்

3. விளையாட்டுக்களில் தனிச்சிறப்பு வாய்ந்த திறமைகளை, திறன்களைக் கொண்ட விண்ணப்பதாரிகள்.

4. ஆயுதப்படைகள், பொலிஸ் சேவை, விசேட அதிரடிப்படை ஆகியவற்றில் சேர்ந்துள்ள ஆளணியினர்.

5. வெளிநாடுகளில் பயின்ற இலங்கையரும், வெளிநாட்டு மாணவர்களும்.

6. ஆசிரியர்களின் அனுமதி

7. மேலதிக அனுமதி

பல்கலைக் கழகங்களில் பட்டப்படிப்பை மேற்கொண்டு முதல் வகுப்பில் சித்தியெய்தியவர்கள் பல்கலைக் கழகங்களில் விரவுரையாளர்களாகவோ, உதவி விரிவுரையாளர்களாவோ நியமனம் பெற்று மேலும் மேலும் உயர் பதவிகளைப் பெற்று வாழ்வைச் சிறப்பாக்கி வாழ்வர். ஏனையோர் தமது திறமைகளுக்கேற்ப வைத்தியர்களாகவோ, பொறியியலாளர்களாகவோ, கணக்காளர்களாகவோ, அதிகாரிகளாகவோ, ஆசிரியர்களாகவோ இன்னும் பல தொழில்களைச் செய்பவர்களாக சமுதாயத்தில் வாழ்ந்திருப்பர். பதவியுயர்வுகளின் போது குறிப்பிட்ட துறைசார் பட்டதாரிகளுக்கு முதன்மை வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே மூன்றாந் நிலைக்கல்வியில் பல்கலைக்கழகக் கல்வி முக்கியத்துமுவம் வாய்ந்த ஒன்றாகத் திழ்கின்றது என்றால் அதில் மிகையில்லை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜி. எஸ். பீ. பிளஸ் (GSP+) வரிச்சலுகையும் இலங்கைப் பொருளாதாரமும் - ஓர் ஆய்வு

GSP, GSP+ ஆகிய இரண்டு சொற்பதங்களும் வேறுபட்டவையாகும். GSP (The Generalized System of Preferences – பொதுமைப்படுத்தப்பட்ட முன்னுரிமை விருப்பத் தேர்வு) என்பது அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் ஐரோப்பிய வர்த்தக சந்தையில் இணைந்துகொள்ள உதவும் வகையில் ஐரோப்பிய ஒன்றியத்தால் (EU) வழங்கப்படும் வரிச்சலுகைத் திட்டமாகும். இவ்வுரிமை வழங்கப்பட்ட ஒரு நாடு இறக்குமதி தீர்வைகளின்றி அல்லது குறைந்த தீர்வையுடன் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தமது பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும்.

GSP+ (மேலதிக பொதுமைப்படுத்தப்பட்ட முன்னுரிமை விருப்பத் தேர்வு) என்பது மேற்குறித்த GSP வரிச்சலுகையால் பயனடைந்த நாடுகளில் இதுவரை பொருளாதார ரீதியில் தன்னிறைவு பெறாத நாடுகளுக்காக வழங்கப்படும் மேலதிக சுங்க வரிச்சலுகையாகும். இதன்மூலம் மேற்குறிப்பிட்ட நாடுகளது 7200 ற்கும் மேற்பட்ட வகையான உற்பத்திப் பொருட்களை சுங்கவரிகள் எதுவும் செலுத்தாது ஐரோப்பிய வர்த்தக சந்தைகளுக்கு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பு கிட்டுகின்றது.

## GSP+ வரிச்சலுகை பெறுவதற்கு ஒரு நாட்டிற்கு இருக்கவேண்டிய தகுதிகள்

- GSP+ வரிச்சலுகையை பெறும் நாடு ஏற்கனவே GSP வரிச்சலுகை பெற்றுவருவதுடன் உலகவங்கியின் வகைப்படுத்தலுக்கு அமைவாக "உயர்வருமானம்" (high-income) பெறும் நாடாகவோ அல்லது "உயர்மட்ட நடுத்தரவருமானம்" (upper-middle income) பெறும் நாடாகவோ இல்லாதிருத்தல் வேண்டும்.

- அத்துடன் GSP+ வரிச்சலுகையை பெற முயலுமொரு நாடு "மனித உரிமைகள்", "தொழிலாளர் உரிமைகள்", "பேண்தகு / நிலைபேறான அபிவிருத்தி (சூழல் பாதுகாப்பு)" மற்றும் "நல்லாட்சி" தொடர்பான 27 அடிப்படை அம்சங்களை உள்ளடக்கிய சர்வதேச உடன்படிக்கையில் கையொப்பமிடல் வேண்டும் என்பதுடன் அந்த உடன்படிக்கையை பாதுகாக்கவும் கடமைப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

➢ இவற்றுக்கு மேலதிகமாக பொருளாதார ரீதியில் தன்னிறைவற்றதொரு நாடெனத் தன்னை நிலை நிறுத்துவதற்காக பின்வரும் இரு நிபந்தனைகளையும் குறித்தநாடு முழுமை செய்தாகவேண்டும்.

1. குறித்த நாடொன்றுக்கு ஐரோப்பிய வர்த்தக சந்தையில் வழங்கப்பட்டுள்ள வீதாசாரம், ஐரோப்பிய ஒன்றியத்தால் GSP திட்டத்தின்கீழ் உதவிபெறும் சகல நிறுவனங்களது முழுத்தொகையின் 6.5 வீதத்துக்கும் அதிகரிக்காதிருத்தல் வேண்டும்.

2. குறித்த நாடொன்றால் ஐரோப்பிய வர்த்தகச் சந்தைக்கு குறித்தொதுக்கப்பட்ட பொருட்கள் பரவலாக்கப்பட்டிருக்காமை. அதாவது மொத்த ஏற்றுமதியின் 75 பொருள்கள் ஏழோ. அல்லது அதற்கு குறைந்த அளவிலோ அமைந்திருத்தல்.

தற்போது GSP+ வரிச்சலுகையுடன் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் மட்டுமே தொடர்புபட்டிருப்பினும் எதிர்காலத்தில் வேறுநாடுகளாலும் குறித்த இந்தச்சலுகை வழங்கப்படக்கூடும்.

## GSP+ வரிச்சலுகையை முதன்முதலில் இலங்கை பெற்றமையும், அதன் இடைநிறுத்தமும்

இலங்கை GSP திட்டம் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து பயனாளியாக இருந்துவந்துள்ளதுடன் 2004ம் ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற சுனாமித் தாக்கத்தை அடுத்து 15ம் திகதி ஆடி மாதம் 2005ம் ஆண்டு முதல் 15ம் திகதி ஆவணி மாதம் 2010ம் ஆண்டு வரை GSP+ வரிச்சலுகையை பெற்று பயன்படுத்தி வந்திருந்தது. எனினும் ஐக்கிய நாடுகள் சபையின் (UN) விசாரணை ஆணைக்குழுவால் குடிசார் மற்றும் அரசியல் தொடர்பான சர்வதேச ஒப்பந்தம் (ICCPR), சித்திரவதைக்கு எதிரான கொள்கை (CAT), மற்றும் சிறுவர் உரிமைகள் (CRC) என்பவை தொடர்பாக இலங்கை போதுமான அளவு கவனம் செலுத்தவில்லை என ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்ததையடுத்து 2010ம் ஆண்டில் இலங்கைக்கான குறித்த GSP+ வரிச்சலுகையை இடைநிறுத்தியது.

வரிச்சலுகை இடைநிறுத்தப்பட்டதையடுத்து இலங்கையின் ஏற்றுமதிகள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டபோது மீண்டும் 9.6 வீத சுங்கவரி செலுத்த நேர்ந்தது. GSP+ வரிச்சலுகை இலங்கைக்கு கிடைத்த காலப்பகுதியில் இலங்கையின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுமதி வீதம் குறிப்பாக தைத்த ஆடைகள் ஏற்றுமதி வீதம் உயர்வடைந்திருந்த போதிலும் குறித்த சலுகை இடைநிறுத்தப்பட்டதையடுத்து ஏற்றுமதி வீதாசாரம் வீழ்ச்சி கண்டது.

## GSP+ வரிச்சலுகையை மீளவும் இலங்கை பெற்றமை

2010ம் ஆண்டில் இடைநிறுத்தப்பட்ட இவ்வரிச்சலுகையை மீளவும் பெறுவதற்காக இலங்கை அரசு மேற்கொண்ட அதீதபிரயத்தனத்தின் விளைவாக 2017ம் ஆண்டு வைகாசி மாதம் 18ம் திகதியிலிருந்து மீண்டும் GSP+ வரிச்சலுகையை இலங்கைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்பட்டுள்ளது.

## GSP+ வரிச்சலுகையை மீளவும் இலங்கை பெற்றமையால் கிடைக்கக்கூடிய நன்மைகள்

இலங்கைக்கு அதன் GSP+ முன்முயற்சியின் கீழ் மேலதிக வர்த்தக வரிச்சலுகைகளை வழங்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்தின் மூலம் அண்மைக்காலமாக துவண்டுகொண்டிருக்கும் இலங்கையின் ஏற்றுமதிகள் அவசியம் தேவைப்பட்ட சில நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டன. இச்சலுகைகளை ஐரோப்பிய ஒன்றியம் வழங்கியதன்மூலம் ஐரோப்பிய வர்த்தகச் சந்தைக்கு இலங்கையிலிருந்து எற்றுமதி செய்யப்படும் ஆடைகள், சிறிய இயந்திரங்கள் மற்றும் மீனுணவுகள் போன்றவற்றுக்கு விதிக்கப்பட்டிருந்த 66% தீர்வை வரிகள் (அண்ணளவாக 1200 இலங்கைப் பொருட்கள்) முழுமையாக நீக்கப்பட்டமையினால் இலங்கை தற்போது நன்மையைப் பெறவுள்ளது.

இலங்கையிலிருந்து ஐரோப்பிய வர்த்தகச் சந்தைக்கு அனுப்பப்படும் ஏற்றுமதிகளின் 58 வீதத்திற்கு இவ்வரிச்சலுகை கிடைப்பதுடன் விசேடமாக அண்மைக்காலமாக மிக மோசமாக பாதிக்கப்பட்டதுடன் பிராந்திய போட்டியாளர்களிடமிருந்து கூடிக்கொண்டிருக்கும் அழுத்தங்களை எதிர்நோக்கிய ஆடைகளின் உற்பத்தி மற்றும் கடற்றொழில் உற்பத்திகளுக்கு ஒரு வரமாக இது இருக்கும். அத்துடன் சிறிய தயாரிப்பு மற்றும் விசேடமாக யுத்தத்திற்கு பின்னரான இலங்கைப் பொருளாதாரத்தில் தோற்றம்பெற்ற ஏனைய ஏற்றுமதித் துறைகளும் ஐரோப்பிய சந்தையினுள் ஊடுருவுவதற்கான சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொள்ளும்.

இதன்மூலம் வேலைவாய்ப்புக்கள் பெருகுவதுடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஊக்குவிப்புக்களாகவும் இருந்து இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு ஓர் உந்துசக்தியாக இவ்வரிச்சலுகை அமையும் என பல பொருளியல் வல்லுனர்களும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## GSP+ வரிச்சலுகையை மீளவும் இலங்கை பெற்றபொழுதும் எதிர்கொள்ளவேண்டிய முக்கிய சவால்கள்

1. GSP+ வரிச்சலுகை நிறுத்தப்பட்டதையடுத்து பல ஆடைக்கைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டன. அவற்றை மீண்டும் இயங்கவைக்கவேண்டுமானால் அவற்றை புனரமைக்கவேண்டும்.

2. வாழ்க்கைச் செலவு அதிகரித்தமையால் பணிபுரியும் தொழிலாளர்கள் அதிக சம்பளம் எதிர்பார்ப்பதனால் அதிக சம்பளத்தை வழங்கி உற்பத்திகளை மேற்கொள்வதில் குறித்த தொழிற்சாலை உரிமையாளர்கள் சிரமங்களை எதிர்கொள்ள நேரிடும்.

3. ஆடை உற்பத்தித் துறைக்கான மூலப்பொருட்கள் கொங்கொங், சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து ஆகிய கீழைத்தேச நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்யப்படுகின்றது. இந்நாடுகளின் நாணயங்களுக்கு எதிராக இலங்கையின் நாணயப்பெறுமதி தொடர்ச்சியாக வீழ்ச்சிகண்டுவருவதால் மூலப்பொருள் இறக்குமதிச் செலவு முன்னரைவிட அதிகரிக்கும். இதனால் குறித்த தொழில்துறையை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுதல் என்பது சிரமமானதாக அமையும்.

4. பிலிப்பைன்ஸ், பங்களாதேஷ், பாகிஸ்தான் போன்ற GSP+ வரிச்சலுகையை பெறாத இலங்கையின் போட்டி நாடுகளின் உற்பத்திகளுக்கு நிகராக இலங்கையின் ஆடைக்கைத்தொழில் உற்பத்தியாளர்கள் போட்டியிடுவது என்பது பெரும் சவாலாக அமையும். குறிப்பாக பங்களாதேஷால் கைப்பற்றப்பட்ட ஐரோப்பிய சந்தையை இலங்கை மீளக்கைப்பற்றுவது என்பது இலேசானதொரு காரியமாகாது.

## இலங்கை எவ்வாறு இச்சவால்களுக்கு முகம்கொடுக்கவேண்டும்

இத்தகைய பின்னணியில் ஆடைகள் உற்பத்தித்துறையில் ஏற்படவுள்ள பின்னடைவினின்றும் இலங்கை தலைதூக்கவேண்டுமானால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. இலங்கை இன்னும் இரண்டு அல்லது மூன்று வருடங்களில் "உயர்மட்ட நடுத்தர வருமானம் பெறும் நாடு" என்ற அந்தஸ்தைப் பெறும் நிலை உருவாகலாம். இது நிரந்தரமாகவே இவ்வரிச்சலுகையை இல்லாமல் செய்துவிடும்.

6. இலங்கையிலிருந்து ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தைத்த ஆடையில் ஏறத்தாழ 45 வீதமான பெறுமதி கொண்ட பொருட்களை பிரிட்டனே கொள்வனவு செய்கின்றது. இது மொத்த ஆடை ஏற்றுமதியில் 14 வீதம்வரையிலாகும். எதிர்வரும் 2019ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் பிரிட்டன் ஐரோப்பிய ஒன்றியத்திலிருந்து விலகி சுயாதீனமாகச்செயற்பட முடிவுசெய்துள்ளமையால் பெறுமதி மிக்க தரப்பிடமிருந்து இலங்கைக்கு கிட்டும் இவ்வரிச்சலுகை இல்லாது போகும்.

1. மூடப்பட்ட ஆடைக்கைத்தொழிற்சாலைகளை புனரமைத்து மீளவும் இயக்குதல் வேண்டும்.

2. GSP+ வரிச்சலுகை கிட்டாத நிலையிலும் உலக சந்தையில் போட்டி போடக்கூடிய அளவுக்கு எமது நாட்டின் ஆடை உற்பத்தியின் தரத்தை உயர்த்தியாகவேண்டும்.

3. உற்பத்திச்செலவை முடிந்தவரையில் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

4. அமெரிக்கச் சந்தைபோன்று வேறு உலகசந்தைகளை பிடிக்க நவடிக்கை எடுத்தல் வேண்டும்.

எனவே இலங்கைக்கு GSP+ வரிச்சலுகை மறுக்கப்படுவது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் இழப்பென்றோ அல்லது அது திரும்பக்கிடைத்திருப்பது பெரும் இலாபகரமானதொன்றென்றோ கொள்ளமுடியாததுடன் சலுகைகளை தொடர்ந்துபெறும் எமது மனப்பாங்குகளிலிருந்து விடுபட்டு நாட்டின் உற்பத்தித்துறையை மேம்படுத்த முயலவேண்டியது இன்றைய காலத்தின் கட்டாயமாகும்.

***

**திருமதி. சுகந்தி சசிகுமார்**
B.A.(Hons) PGDE
ஆசிரியர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் எழுவோம் கைகொடுக்க வாரீர்

திருமதி. பிரேமலதா சண்முகம்
BA,PGDE,MA [Tamil] ஆசிரியர்

விக்கினங்கள் தீர்த்திடும் விக்கினேஸ்வரன் அருளால் - மீசாலை
வித்தியா விருத்திக்கு வித்திட்ட விக்கினேஸ்வர வித்தியாலயம்
பாலர் வகுப்பு முதல் பல்கலை புகுமுக வகுப்பு வரை
பாண்டித்தியம் பெற்றுமே மிளிர்ந்ததுவே ஒரு நாளில்

தென்மராட்சியினர் மட்டுமன்றி ஈழத்தின் பல பாகத்தினரும்
தேடியே கல்வி கற்ற சிறப்பான பாடசாலை
கரும்பி மாவடியான் துணையுடனே கல்வியில் மட்டுமன்றி
கலைகளிலும் கலங்கரை விளக்காய் திகழ்ந்த எம் பாடசாலை

இயற்கை எழில் கொஞ்சும் அழகிய மீசாலையின்
கல்வி அழகை மெருகூட்ட அடித்தளம் இட்ட பாடசாலை
ஆல் போல் தழைத்து அறுகு போல் வேரூன்றி
ஆலமரமாய் நிழல் பரப்பி கல்விப்பணியாற்றியதே

கற்றல் வள நிலையம், கணினி அறையுடன் கலைவாணி மண்டபமும்
கார்த்திகேசு கலையரங்கும் முழுவளமும் கொண்டு
முதுசமாய், முழு நிலவாய் திகழ்ந்த எம் பாடசாலை
முகவரியை மெல்லத் தொலைத்துத் தான் போனதுவோ!

அமுதவிழாக் கண்டு ஐந்தாண்டு சென்ற எம்
அன்னையவள் மீண்டும் புதுப்பொலிவுடன்
சாம்பலில் மீண்டெழும் பீனிக்ஸ் பறவையாய்
சாதனைகள் நாட்டி பொன்னெழுத்தால் பெயர் பதிக்க

மண்ணின் மைந்தர்களே, மாணவ சமூகமே
மகத்தான பணியொன்று தம்முன்னே உள்ளது
முயற்சி செய்தால் முடியாதது ஒன்றுமில்லை
மீண்டும் எழுவோம். கைகொடுக்க வாரீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மன்றம்



# கணித விஞ்ஞான மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நூலகமும் வாசிப்பும்

திருமதி. விஜிதா அருளீசன்
B.A,PGDE
நூலக ஆசிரியர்

புத்தகம் ஒன்றே இறவாத தன்மை கொண்டது என்றார் ரூபஸ் சோட்டோ அறிவாளிகளின் எழுத்துத்தான் எமது சந்ததியின் திருட முடியாத சொத்து. அறிவுக்கடல் போன்றதுதான் நூலகம் கடலில் சிற்பியை விரும்புவோர் சிற்பியை பெறலாம், சங்கை விரும்புவோர் சங்கைப் பெறலாம், குளிப்பவர் குளிக்கலாம், நீந்த விரும்புவோர் நீந்தலாம், மீன் பிடிப்போர் மீன் பிடிக்கலாம், முத்தெடுக்க விரும்புவோர் முத்தெடுக்கலாம், இதேபோன்றுதான் நூலகமும் நாம் வேண்டியதை தேவைக்கேற்ப பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு பாடசாலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் கூடுதலான செல்வாக்கினை பெற்றுக்கொள்வது வாசிப்பே ஆகும். வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான் என்றும் நல்லு நூல்களே நல்ல நண்பன் என்றெல்லாம் கூறப்படுவது வாசிப்பின் முக்கியத்துவம் கருதியே ஆகும்.

வகுப்பறையை எடுத்துக்கொண்டால் வாசிப்புப் பயிற்சியை வழங்கும் போது பாட நூல்களை மட்டும் கவனத்தில் கொள்ளாது இவற்றோடு விளம்பரங்கள், அறிவித்தல்கள், பத்திரிகைத்துணுக்குகள், அழைப்பிதழ்கள், சுவரொட்டிகள் எனப்பல விடயங்களை வாசிக்கச் செய்வதனூடாக வாசிப்புப் பயிற்சியைப் பெறுவதோடு மொழி ஆற்றலையும் வளர்த்துக் கொள்ளலாம்.

வாசிப்பினை இருவகையாக பிரிக்கலாம் ஒன்று மௌன வாசிப்பு மற்றையது உரத்து வாசிப்பு. மௌன வாசிப்பானது ஒருவகைத் தியானமே ஆகும். தியானம் என்பது எமது உடலிற்கும் உளத்திற்கும் இன்றி அமையாதது இவ் மௌன வாசிப்பும் குறிப்பிட்ட நேரத்திற்குள் பல விடயங்களை உள்ளடக்கிவாசிப்பதனால் இங்கு ஐம்புலன்களும் ஒரு முகப்படுத்தப்படுகின்றது. இது ஒருவகைத் தியானமே வாசிப்பின் அடுத்த பிரிவு உரத்து வாசிப்பதாகும். உரத்து வாசிப்பதனால் பேச்சுத்திறன் மொழியாற்றல் வளர்வதோடு உச்சரிப்புத்திறனையும் பெற்றுக்கொள்ளலாம்.

நாம் அறிவுசார்ந்த சிந்தனையை வளர்க்க வேண்டுமாயின் பரந்துபட்ட வாசிப்புத்திறன் முக்கியமானதாகும். ஒருவர் தான் எதிர்கொள்ளும் பிரச்சினையிலிருந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னை விடுவித்துக் கொள்வதற்கு பரந்துபட்டட வாசிப்பு அடித்தளமாய் அமைகின்றது. மாணவர்களுக்கு அவர்களின் கல்வித்திறமையும் கற்பனைத் திறனையும் வளர்க்க வாசிப்பு உதவுகின்றது. நூலகங்களும் ஆசிரியர்களும் ஒருமித்து செயற்படும் போதுதான் மாணவர்களின் பேச்சுத்திறன். எழுத்துத்திறன். வாசிப்புத்திறன். தகவல் மற்றும் தொடர்பாடல் திறன்களாலும் உயர்நிலை அடையலாம்.

ஓவ்வொரு சாதனையாளர்களினது வாழ்க்கை வரலாற்றைப் புரட்டிப் பார்ப்போமானால் அவர்களின் வெற்றிக்கு அடித்தளமாக அமைவது நல்ல நூல்களே. நல்ல புத்தகங்கள் போன்ற நம்பிக்கை இந்த உலகத்தில் இருக்க முடியாது அதனால் தான் “என்மனம் விரும்பும் நூல்களைக் கொடுகள் வாழ்நாள் முழுவதும் சிறையிலிருக்க சம்மதிப்பேன்” என்றார் மாஜினி. இதை விட மாவோசேதுங் கூறும்போது நூல்களை அதிகம் படிப்பவர்களுக்குள்ள மரியாதையே தனியானது. ஆயிரம் நூல்களைப் படித்தவனைக் கூட்டிவாருங்கள் அவனே எனது வழிகாட்டி என்றார்.

ஏன் எமது நாட்டு பண்டைய அரசர்கள் கூட நூல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். பராக்கிரமபாகு மன்னன் 128 வீடுகளில் நூல்களை வைத்து பேணியதாக மகாவம்சம் கூறுகின்றது. 6ம் பராக்கிரமபாகு இலக்கிய அறிவியல் நூல்களை சேகரித்ததோடு அவற்றைப் போதிக்க பௌத்த சமய அறிஞர்களை நியமித்தான் ஏன அறிய முடிகின்றது

13ம் நூற்றாண்டில் நல்லூரில் சிங்கை ஆரியச்சக்கரவர்த்தியினால் சரஸ்வதி மகால் என்ற நூலகம் கட்டப்பட்டு பல்வேறு அறிஞர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதாகவும் இங்கு பல அரிய நூல்கள் இருந்ததாகவும் தமிழ்ப் புலவர்களின் எழுத்துக்களிலிருந்து அறிய முடிகின்றது.

வாசிப்பு ஒருவனை பூரணமாக்குகின்றது என்பது அறிஞர் வாக்கு. வாசிப்பு பழக்கமானது ஒருவனது உடல் நலத்தையும், உள நலத்தையும் மட்டுமன்றி ஆன்ம நலத்தையும் பேண வழிவகுக்கின்றது.

இன்றைய மாணவ சமுதாயத்திடம் வாசிப்பு பழக்கம் அருகியே வருகின்றது. தொலைக்காட்சி, கையடக்கத்தொலைபேசி, இணையத்தள பாவனை என்பவற்றின் வேகமான வளர்ச்சியால் இவற்றுக்கே முக்கியத்துவம் கொடுக்கும் மாணவ சமுதாயம் உருவாகிக் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக நூல்களைத் தேடிச்செல்லுதல் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வாசிப்பு பழக்கத்தை வளர்த்துக்கொள்ள பல உத்திகள் கையாளப்படுகின்றன. புத்தகக் கண்காட்சி, வாசிப்புமாத நிகழ்வு, நூலக தினம் கொண்டாடுதல் போன்றன அவற்றுள் சிலவாகும்.

பிள்ளைகளின் வாசிப்பு பழக்கத்தை வளர்த்தலில் பெற்றோருக்கும் பெரும் பங்கு உண்டு. சிறு வயது தொடக்கம் நல்ல நூல்களைப்படிக்க வழிப்படுத்த வேண்டும். தாமும் ஓய்வு நேரங்களில் வாசிப்பதன் முலம் பிள்ளைகளின் வாசிப்புத் திறனை அதகரிக்கச் செய்யலாம்.

ஒரு நல்ல வாசகனுக்கு புத்தகமொன்று ஓர் உயிருள்ள பொருள் நண்பனைப் போல் உறுதுணையாக அமையவல்லன. ஒருவன் நெறிதவறி செல்லும் போது தடுத்து நிறுத்தி அறிவுபுகட்ட ஒரு நல்ல நண்பன் தேவை அவ்வாறு ஒரு நல்ல நண்பனைப் போல் வழி புகட்ட வல்லது. நல்ல நூல்களே. இதனால தான் "நண்பர்களிற்கெல்லாம் நல்ல நண்பன் ஒரு புத்தகமே" என்று கூறப்படுகின்றது.

"நவில் தொறும் நூல்நயம் போலும் பயில்
தொறும் பண்புடையன் தொடர்பு"
என நூலின் முக்கியத்துவம் பற்றி வள்ளுவர் கூறுகின்றார்.

எனவே மாணவ சமுதாயம் தமது ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக கழிக்க பழகிக் கொள்ள வேண்டும். நாம் உயிர் வாழ்வதற்கு சுவாசம் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றதோ அதை விட அதிகமாக வாசிப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

"வாசிப்போம் வெல்வோம்"

" வாழ்வினில் உயர்வோம்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கணினியும் ஆரோக்கியமும்


திருமதி. சுதாசினி கிசோர்க்குமார்

National Diplima in Teach (ICT)

ஆசிரியர்



இன்றையகாலப்பகுதியில் தொழினுட்பம் மனிதனுக்குஅத்தியாவசியமான ஓர் அங்கமாக காணப்படுகின்றது. தொழினுட்பமும் மனிதனும் பிரிக்க முடியாதளவிற்கு ஒன்றுடனொன்று பின்னிப்பிணைந்துள்ளன. தினமும் தொழினுட்பத்தின் பயன்பாடு அதிகரிக்கும் அதேவேளை அதன் விளைவாக அதே அளவிற்கு உடல் ஆரோக்கியப் பிரச்சினைகளும் அதிகரித்துள்ளன.

பணித்திறனியல் (Ergonomics) என்பது ergon,nomos எனும் இரு கிரேக்கச் சொற்களின் சேர்மானமாகும். ergon என்பது பணியாகும். nomos என்பது சட்டமாகும். இதன் கருத்து **"பணியை உழைப்பாளருக்குப் பொருத்தமானவிதத்தில் அமைக்கவேண்டுமென்பதும் உழைப்பாளரைத் தொழிலுக்காக நிர்ப்பந்திக்கக் கூடாதுஎன்பதும் அதற்குமாறாக அமையின் உழைப்பாளர் பல்வேறு நோய்களுக்கு ஆளாதலைத் தவிர்க்க முடியாது என்பதாகும்."**

கணினியை தொடர்ச்சியாக நான்கு மணித்தியாலயத்திற்கு மேலதிகமாக பயன்படுத்துகின்றமையால் ஏற்படுகின்ற உடற்பிரச்சினைகளை ஆராய்வோம்.

## தசை வன்கூட்டுப் பிரச்சினைகள் Musculoskeletal Problems

கணினியைத் தொடர்ச்சியாக சரியான நிலையிலிருந்து பயன்படுத்தாமையால் உடலின் பல்வேறு தசைகளிலும் என்புகளிலும் நோவு ஏற்படுதல் தசை வன்கூட்டுப் பிரச்சினையாகும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக விஞ்ஞான மன்றம்



# மாணவத் தலைவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப் பிரச்சினையைத் தவிர்த்துக் கொள்வதற்கு

- பயன்படுத்தும் ஆசனம் உரியவிதமாக உயரத்தைமாற்றக் கூடியதாக இருத்தல்.
- சாய்ந்து இருக்கும் வசதி இருத்தல். திசை மாற்றம் செய்யக் கூடியதாக தயாரிக்கப்பட்டிருத்தல்,
- அமர்ந்து கொண்டிருக்கும் போது எப்போதும் நிலத்தில் உள்ளங்கால் லேசாகப் பதியக் கூடியவாறும் கால்களை நிலத்திற்கு செங்குத்தாகவும் வைத்திருத்தல்.
- கதிரையின் முதுகுப் பகுதியில் நாரியை நேராகவும் தோளை லேசாகவும் வைத்திருத்தல் ஆகியவற்றின் மூலம் இப் பிரச்சினையை தவிர்த்துக் கொள்ளலாம்.

மீள்வரும் தகைப்பு **Repetitivestress Injury (RSI)**

ஒரேபணியில் தொடர்ந்து நீண்ட நேரம் ஈடுபடுவதனால் உடலில் ஏற்படும் ஒரு வகைவலி மீள்வரும் தகைப்பு ஆகும். கணினிப் பயன்பாட்டில் தொடர்ச்சியாக பணியாற்றுவதால் தோளிலிருந்து கையின் விரல்கள் வரைக்கும் உண்டாகும் நோவு, வீக்கம், விறைப்பு ஆகியவற்றை மீள்வரும் தகைப்புகாயம் எனலாம். சுட்டியை பயன்படுத்தும் போது கையை அங்கும் இங்கும் அசைக்க முடியாமல் இருப்பது இதன் அறிகுறியாகும். சரியான நிலையிலிருந்து கணினியை பயன்படுத்தாமை இதற்கு காரணமாகும்.



இப் பிரச்சினையைதவிர்த்துக் கொள்வதற்கு


- மணிக்கட்டை தாங்கக் கூடிய விதமாக கணினி மேசையை அமைத்துக் கொள்ளல்.
- உள்ளங்கை மற்றும் மணிக்கட்டு இரண்டையும் ஒரு மகமாக வைத்து தட்டச்சில் ஈடுபடல் மூலம் இப் பிரச்சினையை தவிர்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிக்கட்டுச் சுரங்கசகசம் CTS- Carpel Tunnel Syndrome

கையில் உள்ளவிரல்களில் ஏற்படும் நோவும் விறைப்பும் மணிக்கட்டுச் சுரங்கசகசம் எனப்படும்.சுட்டியையும் விசைப்பலகையையும் சரியானமுறையில் பயன்படுத்தாமை இதற்குக் காரணமாகும்.




### இப் பிரச்சினையைதவிர்த்துக் கொள்வதற்கு

- சுட்டியைசாவிப்பலகைக்குஅண்மையில் வைத்துக் கொள்ளல்
- லேசாகதட்டச்சிடல்,மணிக்கட்டைஓர் இடத்தில் வைத்துஅழுத்தாமல் விடல்
- சாவிப்பலகையைமுழங்கைக்குநேரேஅல்லதுகீழேதானப்படுத்திக் கொள்ளல் போன்றவற்றின் மூலம் இப் பிரச்சினையைதவிர்க்கலாம்.

## கணினிப் பார்வைச் சகசம் CVS Computer Vision Syndrome

தொடர்ச்சியாக ஆறு மணித்தியாலங்களிற்குமேல் கணினியில் பணியாற்றுவதன் விளைவாககண்களில் ஏற்படும் உறுத்தல் கணினிப் பார்வைச் சகசம் எனப்படும்.கண் உலர்தல்,செந்நிறமாதல்,கண்ணீர் வருதல், பார்வைகுறைதல், தலை, கழுத்து, நாரி ஆகியவற்றில் நோவு ஏற்படுதல் போன்றன இதன் அறிகுறிகளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப் பிரச்சினையைதவிர்த்துக் கொள்வதற்கு

- கணினித் திரை ஒருவரின் கண் மட்டத்தில் இருக்கு மாறு கணினிக் கதிரையையும் மேசையையும் தானப்படுத்தல்.
- கணினித் திரைக்கும் கண்ணிற்கும் இடையே உள்ளதூரம் 45cm-70cm ஆக இருத்தல்.
- கண் களைப்படையாதவாறுகணினித்திரையில் ஒளியைச் சீராக்கல்.
- அடிக்கடிகண்களை மூடுதல்.
- அடிக்கடி வித்தியாசமான தூரங்களில் காணப்படும் பொருட்களின் மீது பார்வையைச் செலுத்துதல்.
- சுற்றுப்புறத்தை காற்றேட்டமாக வைத்திருத்தல் போன்றவற்றின் மூலம் இப் பிரச்சினையை தவிர்க்கலாம்.

### தலைவலிHeadache

கழுத்தில் தசைகளின் தகைப்பு, கண்களில் ஏற்படும் களைப்பு ஆகியவற்றின் விளைவாக கணினியை பயன்படுத்துவோரிடம் தலைவலி ஏற்படுகின்றது.



இப் பிரச்சினையைதவிர்த்துக் கொள்வதற்கு

- அடிக்கடி வித்தியாசமான தூரங்களில் காணப்படும் பொருட்களின் மீது பார்வையைச் செலுத்துதல்.
- சுற்றாடலை காற்றோட்டத்துடனும் போதிய வெளிச்சத்துடனும் பேணுதல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கண் களைப்படையாதவாறு கணினித் திரையில் ஒளியைசீராக்கல் ஆகியவற்றின் மூலமும் தலைவலியை தவிர்க்கலாம்.

**தகைப்புstress**

வளர்ந்து வரும் தொழில் நுட்பவியலினால் பணி அதிகரிப்பின் காரணமாக தகைப்பு ஏற்படுகின்றது. நித்திரை கொள்ளாமை, களைப்பு, பசியின்மை ஆகியன இதன் அறிகுறிகளாகும்.




**இப் பிரச்சினையை தவிர்த்துக் கொள்வதற்கு**

- பணியைச் செய்யும் போது குறுகிய ஓய்வெடுத்தலும் குறுகிய தூரத்திற்கு உலாவுதலும்
- பிள்ளைகளுக்குக் கணினி விளையாட்டுகளுக்காக நேரத்தைக் கட்டுப்படுத்தி ஒதுக்குதலும் அவர்களை வெளிவிளையாட்டுக்களுக்கு வழிப்படுத்தலும்.
- கூடுதலான நேரம் கணினியுடன் வேலை செய்பவர்கள் வீட்டில் கணினியைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தலும் மனதை இலேசாகவைத்துக் கொள்ளலும். இது போன்ற செயல்களில் ஈடுபடுவதன் மூலம் கணினி தொடர்பான உடல் ஆரோக்கியப் பிரச்சினைகளைத் தடுக்கலாம்.

**கணினியைபயன்படுத்தும் போதுஅமர்ந்துகொள்ளவேண்டியசரியானவிதம்**




கணினிபபயன்பாட்டில் ஈடுபடுவோர் போதியளவுஓய்வெடுத்தல் அவசியமாகும். அதாவதுநீண்டநேரம் வேலைசெய்துநீண்டஓய்வினைஎடுப்பதைவிடவேலைசெய்யும் சந்தர்பத்தில் இடையிடையே ஓய்வெடுத்தல் ஆரோக்கியமான உடல் நிலையை பேண உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**திரு. க. ரஜனிகாந்தன்,**
முதன்மை விரிவுரையாளர்,
தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக தொலைக்கல்விப் பிரிவு
தமிழ் இணையக் கல்விக்கழகம்,
யாழ்ப்பாணம்.

## தமிழ்ச் சங்கங்கள் இருந்தனவா? கற்பனையா?

சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்களும், குறுநில மன்னர் பலரும், தமிழ்ப் புலவர்களை மதித்துப் போற்றினர். அவர்களுக்குப் பெரும் பொருளைப் பரிசாக அளித்தனர். இச் செய்தி சங்க இலக்கியங்களால் அறியப்படுகிறது. எனினும், தம் தலைநகர்களில் தமிழ் வளர்ச்சிக்கு எனச் சங்கங்களை நிறுவிப் பல நூற்றாண்டுகள் தமிழ்ப்பணி புரிந்தோராகப் பாண்டியர்களே அறியப்படுகின்றனர்.

பிற்கால இலக்கியங்கள் பாண்டிய நாட்டையே சிறப்பாகத் தமிழ்நாடு என்று பாராட்டியுள்ளன. சங்க இலக்கியத்தில்,

**"தமிழ் நிலைபெற்ற தாங்கரு மரபின்**
**மகிழ் நனை மறுகின் மதுரை"**
**"தமிழ் வையைத் தண்ணம்புனல்"**
**"இவனே, தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே"**

என்றுவரும் பகுதிகள் மதுரைக்கும் தமிழுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்கும்.

பாண்டியர் மூன்று சங்கங்களை நிறுவித் தொண்டு செய்த விபரத்தை கி.பி 8ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இறையனார் களவியல் உரையே முதன் முதலில் தருகின்றது.

இறையனார் களவியல் உரை முற்சங்கம் பற்றி இவ்வாறு கூறுகிறது. குமரிக் கண்டத்திலிருந்த தென்மதுரையில் முதற் சங்கம் நடைபெற்று வந்தது. சிவபெருமான், அகத்தியனார், முருகக் கடவுள், முரஞ்சியூர் முடிநாகனார், குபேரன் முதலாய 549 புலவர் அதன்கண் அமர்ந்து தமிழ் வளர்த்தனர். அச் சங்கத்துடன் தொடர்பு கொண்டிருந்த புலவர்களின் எண்ணிக்கை 4449. அவர்கள் பரிபாடல்கள் பலவற்றையும், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை என்ற நூல்களையும் இயற்றினார்கள். இந்தத் தலைச்சங்கம் தொடர்ந்து 4440 ஆண்டுகள் நடைபெற்றது. காய்சினவழுதி முதலாகக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுங்கோன் ஈறாகப் பாண்டியமன்னர் 89 பேர் இச்சங்கத்தைப் பாதுகாத்து வந்தார்கள். அக்காலத்தில் எழுந்த நூல்களுக்கு இலக்கணமாக இருந்த நூல் அகத்தியம்.

பின்னர் தென்மதுரை கடல்கோளுக்குள்ளானபோது கபாடபுரம் பாண்டியநாட்டுக்குத் தலைநகரமாயிற்று. அங்கு இடைச்சங்கம் நிறுவப்பட்டது. தொல்காப்பியர், இருந்தையூர்க் கடுங்கோழியார், மோசியார், வெள்ளூர்க் காப்பியனார், சிறுபாண்டரங்கனார், திரையன்மாறனார், துவரைக்கோன், கீரந்தையார் முதலிய 59பேர் இச்சங்கத்தில் அமர்ந்து தமிழாராய்ந்தார்கள். அவர்களுடன் இச்சங்கத்தில் பாடிய புலவர்களின் எண்ணிக்கை 3700. வெண்டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக 59 பாண்டியமன்னர்கள் இச்சங்கத்தின் புரவலர்களாய்த் திகழ்ந்தனர். அவர்களுள் ஐவர் தாமே புலவர்களாகவும் அச்சங்கத்தில் அமர்ந்திருந்தனர். இச்சங்கம் 3700 ஆண்டுகள் நடைபெற்றது. இச்சங்கத்திற்கு அகத்தியமும், தொல்காப்பியமும் இலக்கண நூல்களாகத் திகழ்ந்தன.

கபாடபுரத்தைக் கடல்கொண்ட பின்னர் கடைச்சங்கம் வடமதுரையில் (இப்போதைய மதுரை) கூடிற்று. இச்சங்கத்தில் அமர்ந்து தமிழ் வளர்த்த புலவர்கள் 49பேர். இவர்களுள் மூவர் பாண்டியமன்னர். சேந்தம்பூதனார், அறிவுடையரனார், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரையாசிரியர் நல்லந்துவனார், மருதனிளநாகனார், கணக்காயனார்மகனார் நக்கீரனார் ஆகிய புலவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் உள்ளிட்ட 449 பேர் பாடினர். இயற்றப்பட்ட நூல்கள் நெடுந்தொகைநானூறு, நற்றிணைநானூறு, குறுந்தொகை, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலிநூற்றைம்பது, பரிபாடல்எழுபது, கூத்து, வரி, சிற்றிசை, பேரிசை முதலியன. கடைச்சங்க காலத்தில் வழங்கிய இலக்கண நூல் தொல்காப்பியம். இச்சங்கம் 1850 ஆண்டுகள் நீடித்தது. இக் கடைச்சங்கத்தை மதுரையில் நிறுவியவன் பாண்டியன் முடத்திருமாறன் என்னும் மன்னன். இதன் இறுதி ஆண்டுகளில் அரசாண்டவன் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி.

இவ்வாறு களவியல் உரை கூறுகிறது.

தென்மதுரையிலும், கபாடபுரத்திலும், இப்பொழுதுள்ள மதுரையிலும் மூன்று சங்கங்கள் நிலவின என்ற இறையனார் களவியல் உரை கூறும் செய்தியை முழுமையாக ஏற்றுக்கொள்வார் உண்டு. முன்னோர் பொய் கூறார் என்ற நல்ல நம்பிக்கையே இதற்குக் காரணம்.

இன்னொரு சாரார் சங்கம் என்ற அமைப்புப் பற்றிக் கூறப்படுவன அனைத்தும் முழுமையான கற்பனையே என்று வாதிடுகின்றனர்.

மூன்றாவதுசாரார், முதல் இரண்டு சங்கங்களும் நிலவியமைக்கு வலுவான சான்றுகள் இல்லாவிடினும் ஒரு சங்கம் இருந்திருக்க வாய்ப்புண்டு என்பர். இவர்களுள் டொக்டர்.எஸ்.கிருட்டினசாமி அய்யங்கார், கே.ஏ. நீலகண்டசாத்திரியார், இரா. இராகவஐயங்கார், தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சங்கங்கள் இருந்தமை உண்மையா?**

இறையனார் களவியல் உரையில் காணப்படும் முற்சங்கங்கள் பற்றிய செய்திகளைப் பார்த்தோம். தமிழ்ச்சங்கம் மதுரையில் நிலவியது ஒரு வரலாற்று உண்மையென்பதற்கு உதவும் சான்றுகளை இங்கு கண்டுகொள்வோம்.

**சங்கநூல் சான்றுகள்**

தமிழிலுள்ள மிகத் தொன்மையான நூலான தொல்காப்பியம் நிலந்தருதிருவின் பாண்டியன் அவையத்தில், அதங்கோட்டாசான் முன்னிலையில் அரங்கேற்றப்பட்ட செய்தியை அந்நூலின் சிறப்புப்பாயிரம் கூறுகின்றது. பேரறிஞர்களான புலவர் பெருமக்கள் கூடித் தமிழ்ச் சுவையை நுகர்ந்த இடமாக மதுரையைப் பாராட்டுகிறது மதுரைக்காஞ்சி,

**"தொல்லாணை நல்லாசிரியர்**
**புணர்கூட்டு உண்ட புகழ்சால் சிறப்பின்**
**நிலந்தரு திருவின் நெடியோன்** "
(மதுரைக்காஞ்சி, வரிகள் 761-3) சிறுபாணாற்றுப்படை,

**"தமிழ்நிலைபெற்ற தாங்கரு மரபின்**
**மகிழ்நனை மறுகின் மதுரை"** (சிறுபாணாற்றுப்படை, வரிகள் 65-66) என்று புகழ்கிறது.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் என்ற புலவர் சோழனைக் காவிரிக்கிழவன் என்று பாராட்டி, பாண்டியனைத் தமிழ்க் கெழுகூடல் தண்கோல் வேந்து (புறநானூறு,58) என்று புகழ்ந்தார்.

**"வஞ்சினம் கூறும் பாண்டிய மன்னன்,**

**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**

**மாங்குடி மருதன் தலைவனாக.**

**உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப்பின்**

**புலவர் பாடாது வரைக என் நிலவரை"** (புறம்,72)

என்றான். மாங்குடி மருதனைத் தலைவனாகக் கொண்டு சங்கம் நிலவியதற்கு இது நல்லசான்றாகும். பாண்டி நாட்டிற் பாயும் வைகையாற்றைப் பாடும் புலவர்.

**"தமிழ்வையைத் தண்ணம்புனல்"** (பரிபாடல், 6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார். நாவினால் புலனை உழுது அறிவுப்பயிர் வளர்ப்போர் என்று புலவர்களைப் பாராட்டும் புலவர் ஒருவர் கூற்றைப் பாருங்கள்!

"செதுமொழி சித்த செவிசெறுவாக
முதுமொழி நீராப் புலன் நாவுழவர்
புதுமொழி கூட்டுண்ணும் புரிசைசூழ் புனலூர்"
(கலித்தொகை, 68)

கூட்டுண்ணலாவது இலக்கியச் சுவை உணர்தலாகும்.

சிலப்பதிகார ஆசிரியர் இளங்கோவடிகள் தென்தமிழ் நாட்டுத் தீது தீர் மதுரை என்றார். மணிமேகலை ஆசிரியர் சாத்தனார் தென்தமிழ் மதுரை என்றார்.

**இடைக்காலச் சான்றுகள்**

இனி இடைக்காலப் புலவர்கள் பலரும் தமிழோடு மதுரையை இணைத்தே பேசுகின்றனர் என்பதற்குச் சான்றுகளைக் காணுங்கள்.

திருமங்கை மன்னர் சங்கமுகத் தமிழ், சங்கமலி தமிழ் எனப்புகழ்வார். சங்கத் தமிழ் மாலை என்று நாச்சியார் தம் திருப்பாவையைப் பெருமையோடு குறிப்பிட்டார். அப்பர் பெருமான் நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி நற்கனகக் கிழி தருமிக்கு அருளினோன் காண் என்று சிவபெருமானைப் புகழ்ந்துள்ளார். மாணிக்கவாசகப் பெருந்தகை தம் திருக்கோவையாரில் சிவபெருமான் மதுரைத் தழிச்சங்கத்தில் இருந்து தமிழ் ஆராய்ந்தார் என்றார்.

**"சிறைவான் புனல் தில்லைச் சிற்றம்பலத்தும் என் சிந்தையுள்ளும்**
**உறைவான், உயர் மதில்க் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்"**

என்பது அவர் திருவாக்கு.

**வேறுசில சான்றுகள்.**

ஆச்சாரியமாலை என்னும் நூல், பாண்டியன் பாடுதமிழ் வளர்த்த கூடல் என்கிறது. "தென்தமிழ்நாட்டு அகன்பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம்" என்றுகம்பர் பாராட்டுவார். பொதிகையும் பாண்டிய நாட்டிலுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. யாப்பருங்கல விருத்தியின் மேற்கோள் ஒன்று, "வீயாத் தமிழ் உடையான் பல்வேல் கடல் தானைப்பாண்டியன்" என்கிறது.

தொல்காப்பிய உரையாசிரியர்களான பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் பிறரும் மூன்று சங்கங்கள் பற்றிப் பேசியுள்ளனர். வால்மீகி இராமாயணம், சுக்கிரீவன் தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்கட்குக் கூறும் அறிவுரையில் இடைச்சங்கம் இருந்த இடமாகக் கூறப்படும் கபாடபுரம் இடம்பெறுகின்றது. கி.பி10ஆம் நூற்றாண்டுக்கு உரிய சின்னமனூர்ச் செப்பேடு,

"மாபாரதம் தமிழ்ப்படுத்தும்

மதுராபுரிச் சங்கம் வைத்தும்"

என்கிறது. இதனால் மதுரையில் தமிழ்ச்சங்கம் நிலவியதும், தமிழ்ப்புலவர் தமிழாய்ந்ததும் வரலாற்றுண்மை என்று தெளியப்படும்.

**சங்கங்கள் கற்பனையா?**

தமிழ் வளர்க்கும் நோக்குடன் சங்கம் என்ற அமைப்பு இருந்திருக்க இடமுண்டு என்பதற்குப் பல சான்றுகள் இருப்பது உண்மை என்றாலும், இக்கருத்தை மறுத்துரைப்பாரும் உண்டு. அவர்களுள் கே.என்.சிவராசபிள்ளையும், பி.தி.சீனிவாசய்யங்காரும் குறிக்கத்தக்கவர்களாவர்.

அவர்கள் கூறும் காரணங்களுள் குறிக்கத்தக்க சில மட்டும் இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றன.

1. சங்க இலக்கியங்கள் என்று அழைக்கப்படும் நூல்களில் கூட சங்கம் என்ற சொல் காணப்படவில்லை. சங்கம் என்ற சொல் வடசொல்லாகும்.
2. புலவர்கள் ஒன்று கூடித் தம்புலமையை நிலைநாட்டுதல் என்பது தற்காலக் கருத்து. போரும் பூசலும் நிலவிய அப்பழங்காலத்தில் பன்நாட்டுப் புலவர்கள் கூடித் தமிழ் வளர்த்திருக்க வாய்ப்பு இல்லை.
3. சிவன், முருகன், குபேரன் முதலான கடவுளரும் சங்கத்தில் இடம்பெற்றனர் என்பது கற்பனையே.
4. 59 அரசர்கள் 3700 ஆண்டுகளும், 89 அரசர்கள் 4400 ஆண்டுகளும், 49 அரசர்கள் 1850 ஆண்டுகளும் வாழ்ந்தனர் என்பது நம்புதற்குரியதன்று. இவ்வாறே புலவர்களின் எண்ணிக்கையும் நம்புதற்குரியதன்று.
5. புத்த, சமண சமயச் சங்கங்கட்குப் போட்டியாகக் கற்பனையில் உருவாக்கியனவே இச்சங்கங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முடிவு

இறையனார்களவியல் உரையில் நம்புவதற்கு கடினமான புராணத் தன்மை கொண்ட விபரங்கள் உள்ளன என்பது உண்மையே. ஆனால் அதுகொண்டு சங்கம் என்ற அமைப்பே இல்லையென்று மறுப்பது முறையாகாது.

சங்கம் என்ற சொல் இல்லை எனினும் அவை மன்றம், புணர்கூட்டு, தமிழ்நிறை என்றவாறு பல சொற்களும் தொடர்களும் காணப்படுகின்றன. இன்று கிடைக்கும் சங்க நூல்கள் தொகுக்கப்பட்டிருக்கும் முறையைக் காண்கையில் ஒரு பெரிய அறிஞர் கூட்டம் இருந்தே இச் சீரிய பணியை முடித்திருக்க முடியும் என்று கருதவேண்டியுள்ளது. “அற்றன்றி அந்தண் மதுரைத்தொகை ஆக்கினானும்” என்ற சம்மந்தப் பெருமான் திருவாக்கு பாண்டிய நாட்டில் சங்கம் நிலவியமைக்கு நல்ல சான்றாகலாம். வழிவழியாகத் தமிழ்ச் சான்றோர் மதுரையைத் தமிழோடு இணைத்துப் பேசுதலை முற்றாக மறுக்க இயலாது. மூன்று சங்கங்கள் இருந்தன என்பதனை உறுதிப்படுத்திட முடியாவிட்டாலும் தொடர்ந்து மதுரையை ஆண்ட பாண்டியர்கள் தமிழ்ச் சங்கத்தைப் பேணி வந்தனர் என்று கொள்வது தவறாகாது.

**சான்றாதாரம்.**

1. பேராசிரியர் ஆ.தட்சணாமூர்த்தி, இலக்கியவரலாறு, தமிழ் இணையப் பல்கலைக்கழகம், சென்னை.

2. இணையதளம் - www.tamilvu.org

3. இறையனார் களவியல் உரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆரம்பக் கல்விக்கு வாசிப்பின் முக்கியத்துவம்

திருமதி. க. சந்திரநாதன்
ஆசிரியர்

தரம் 1-5 வரையுள்ளமாணவர்களின் முக்கியபிரச்சினையாக இருப்பதுவாசிப்புத் தன்மைகுறைவடைந்துசெல்கின்றமையாகும்.

எல்லாஎழுத்துக்களையும் எழுதத் தெரிந்தபின்னர் பரீட்சை வினாவுக்கு விடை எழுதாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகத் தென்படுகின்றது. 50%மான பிள்ளைகள் கொப்பியைப் பார்த்தெழுத விருப்பமேத விரதானாக வாசித்து விடை எழுத விரும்புவதில்லை.

மாணவர்களின் வாசிப்புஆற்றல் குறைவாக இருப்பதே இதற்குகாரணம். வாயால் வினாவைக் கேட்டால் உடனே விடை கூறுகிறார்கள். எழுதவிட்டால் அவர்களால் எழுதமுடியவில்லை, காரணம் மாணவர்களின் வாசிப்பு ஆற்றல் குறைவு என்பது தெட்டத் தெளிவாகின்றது.

“கண்டதுகற்கபண்டிதன் ஆவான்.”என்பது பழமொழியாகும். மாணவர்கள் சிறுவயதில் இருந்துவாசிப்புபழக்கம் உருவாகுவதற்குபெற்றோர் துணையாக இருக்கவேண்டும். சிறுவயதுப் பிள்ளைகள் ஆர்வம் உள்ளவர்கள் படிப்பதில் அக்கறை உள்ளவர்கள் ஆகையால் சிறுசிறு படக்கதை புத்தகங்கள் மூலம் அவர்களை வாசிப்பாற்றலுக்கு தூண்டுதலாக அமைய வேண்டும்.

வாசிப்பு பழக்கத்தை உருவாக்குவதற்கு தரம் 1-5 வரைபெற்றோர் தத்தமது பிள்ளைகளுக்கு கூடிய அளவு வாசிப்பு முறையை தூண்டக் கூடிய முறையில் செயற்பட வேண்டும். உதாரணமாக பெற்றோர் பிள்ளைகளுடன் செல்லும் போது அவர்களது வினாவிற்கு விடையளிக்கவேண்டும். சுவர்ப்பலகை விளம்பரம், சிறுசிறுதுண்டுப் பிரசுரங்கள், பெரிய எழுத்திலான விளம்பரம் போன்றவற்றை கண்ட இடங்களில் வாசித்து காட்டுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்தை இனங்கண்டுவாசிக்கும் பழக்கம் சிறுவயதில் ஏற்படுத்திவிட்டால் பிள்ளைகள் கல்வியில் உச்சநிலையை அடைய வழி வகுக்கும். வாசிப்பாற்றலை ஏற்படுத்தாவிட்டால் பிள்ளைகள் பாடசாலைக்கு ஒழுங்காகவர விரும்பமாட்டார்கள். பாடசாலைக் கல்விவேப்பம் பழம் போல் கசந்துவிடும். வாசிப்பு ஒருமனிதனை பூரணம் அடையச் செய்கின்றது. இதனால் ஒவ்வொரு பெற்றோரும். தமது பிள்ளைகளை வீடுகளில் கதைப் புத்தகங்கள், நீதிக் கதைப்புத்தகங்கள் வாங்கிக் கொடுத்துவாசிக்கும் பழக்கத்தை சிறுவயதிலிருந்தே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

வாசிப்பு ஒரு மாணவனுக்கு சிறப்பாக அமையுமானால் அவன் கற்றலில் தூண்டப்படுவான். அத்துடன் பாடசாலை வாழ்க்கை அவனுக்குத் தேனாக இனிக்கும். கல்வியில் தோல்வியோ பின்னடைவோ அடையமாட்டான் அவனுக்கு இறுதி வரை பாடசாலைக் கல்வி சிறப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.

நாம் பிள்ளைகளை பூரண மனிதனாக்ககை கோர்த்து ஒற்றுமையாகச் செயற்படுவோம்.

| பணிவென்பது தமது பலவீனமல்ல அது நமது பலம் |
| --- |
| அறிவுக்கு வையகம் எப்போதும் தன் வணக்கத்தைச் செலுத்தும் - திறமைக்கு ஆதரவு தரும் தூய உள்ளத்தை வரவேற்கும்.<br>- இங்கர்சால் - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**MISS SUMATHY VINASIYHYHAMBY**

**ENGLISH TRD. SLTS 2-11**

# How we can manage an immediate surroundings to deal with conflicts.

According to advanced learners dictionary conflict means "A situation in which people, groups or countries are involved in a serious disagreement or argument." Conflict exists when one person has a need of another and that need is not being met. Words are powerful. They should be used to build bridges with people, groups and communities. Words should not be used as a weapon of hatred, discrimination or suppression. They are mode of expression that can be used skillfully to make peaceful societies and being able to communicate well with others and have good relationship is one of the most important skills in life. Basic language and communication has the power to influence and instigate conflict and co-existence of an entire nation. In a multi ethnic, multi religious and multi-language society, it can be used to maintain the peace and harmony. When the words are used in improper ways the battle can be occurred. Nonviolent communication is a versatile approach to communication comprising a series of techniques applicable to any setting or population. Nonviolent communication model is effective in real life situations. Nonviolent principles and practices illuminate that there is an alternative to violence so that we can individually and collectively inspire concrete and lasting personal, interpersonal, and social transformation. Nonviolent communication has been described as a language of compassion, as a tool for positive social change and a s spiritual practice. It gives us the tools and consciousness to understand what triggers us to take responsibility for our reactions, and to deepen our connection with ourselves and others.

The language of nonviolent communication includes two parts; honestly expressing ourselves to others, and empathetically hearing others. Both are expressed through four components: **observation, feelings, needs and requests**. When conflict occur in a situation, we practice nonviolent communication to solve it. The self-empathy is connected with practicing of



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

nonviolent communication. Observation refers what we really see, hear, smell, taste, and feel through touch. That is what we see or hear we identify as the stimulus to our reactions where we react concretely specifically and neutrally. Feelings represent our emotional experience and physical sensations associated with our needs that have been met or that remain unmet. The feeling comes from the inner experience rather than words that describe our interpretations of people's actions. We have a wonderful alarm system

that alerts us when our needs are not being met, this may cause to arising conflicts. Therefore the needs of the training to think would be in terms of feelings and in terms of needs and need-fulfilling actions. In order to meet our needs, we make requests to assess how likely we are to get co-operation for particular strategies we have in mind for meeting our needs and training how to bear it. Requests assess how likely we are to get cooperation for particular strategies we have in mind for meeting our needs. When we empathetically listen or observe the conflict situation we have, according to that we can honestly express our feelings.

When we realise the situation which has arisen due to conflicts, everything will be managed according to our mind and also we will be trained to co-operate to the situation we have and also the past experience give a lot to manage the conflicts. Nonviolent communication identifies communication as coming into communion with one another. It aims to build holistic understanding within a person and his surrounding using nonviolent communication tactics. The aim of nonviolent communication transforms the society through the transformation of the inner personality.

## At its last try

Little bird you spray
On me, when you are for your prey
Forgive me here I'm for shelter
There rain comes you may flutter

Poor tiny I'm, save my soul.
The tiny worm made the call
Come another day with more hunger
quite I'll be bigger.

Sorry my poor friend
Save my soul until the days.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய வாண்மையும் கல்வி உளவியலும்

திரு. சி. இளந்திரையன்
ஆசிரியர்
கிளி / பூநகரி மத்திய கல்லூரி

## அறிமுகம்

உலகில் காணப்படுகின்ற தொழில்களாவன ஏதோ ஒரு வகையில் மனிதனை வளப்படுத்தி சுபீட்சமான வாழ்விற்கு வழிதேட உதவுகின்றது. அந்த வகையில் மருத்துவம், பொறியியல், முகாமைத்துவம், சட்டம், ஆசிரியம் போன்றவை குறிப்பிடத்தக்கன. இவ்வாறான தொழில்களுள் மருத்துவம், ஆசிரியத்துவம் போன்றவை சேவைத் தொழில்கள் (Vocational) மட்டுமன்றி வாண்மைத் தொழில்களாகவும் (Professional) காணப்படுகின்றன. இன்று ஆசிரியத்தொழில் சவாலான ஒரு தொழிலாக மாற்றமடைந்துள்ளது. உலகமயமாதலின் விளைவாக ஏற்பட்ட அறிவுப்பொருளாதார விருத்தியின் பயனாக இன்று ஆசிரியர்கள் வாண்மை மிக்கவர்களாகவும் கல்வி உளவியல் அறிவு உடையவர்களாகவும் தம்மைத் தகவமைத்துக் கொள்ளவேண்டி உள்ளது. அந்த வகையில் ஆசிரியவாண்மை பற்றியும் வாண்மை மிக்க ஆசிரியர்களுக்கு கல்வி உளவியலின் அவசியம் பற்றியும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## ஆசிரியவாண்மை

இன்று ஆசிரியத் தொழிலை வாண்மைத்துவத் தொழிலாக முக்கியப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் உலகளாவிய ரீதியில் வலுப்பெறுகின்றன. வாண்மை என்பது உயர் தொழிலைக்குறிக்கும் ஒரு பதமாகும். வாண்மை என்ற பதப்பிரயோகத்துடன் வாண்மைத்துவம், வாண்மைத்துவப் பொறுப்பு, வாண்மைப்பயிற்சி ஆகிய பதங்களும் இன்று புழக்கத்தில் உள்ளன. வாண்மைத்துவம் என்பது இரு அடிப்படை அம்சங்களை உள்ளடக்கியது. அவையாவன,

1. வாடிக்கையாளரை முதன்மைப்படுத்துவது
2. அறிவை அடியாதாரமாகக் கொண்டது.

ஆசிரியம் ஒரு வாண்மை என்ற வகையில் வாண்மைத்துவம் குறித்த இவ்விரு அம்சங்களின் அடிப்படையிலேயே ஆசிரியரின் கடமை, பொறுப்புக்கள் வரையறை செய்யப்பட வேண்டும். அதாவது தனது வாடிக்கையாளர்களான மாணவர் நலன்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதன்மைப்படுத்துவதாகவும் அறிவார்ந்த நிலையில் தனது செயல் ஆற்றுகையை முன்னெடுப்பதாகவும் ஆசிரியத்துவம் அமைய வேண்டும்.

"பிறப்பால் ஆசிரியர்" என்ற நிலைப்பாடு தளர்வுற்று ஆசிரியர்கள் உருவாக்கப்பட வேண்டியவர்கள், பயிற்றுவிக்கப்படுபவர்கள் என்ற கருத்து நவீன கல்விமுறையில் வலுப்பெறத் தொடங்கியுள்ளது. ஆசிரியம் ஒரு வாண்மையாக கருதப்படும் நிலையில் இன்று ஆசிரியர்களுக்குப் புலமை சார்ந்த அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனால் ஆசிரியர்கள் தமது செயலாற்றுகைக்கு பொறுப்புக் கூறவேண்டியவர்கள் ஆகின்றனர். இப்பொறுப்பானது வாண்மைத்துவப்பொறுப்பு எனப்படும். இது ஒவ்வொரு மாணவனும் தனது முழு வலுவை அடையச்செய்யும் வகையில் அம்மாணவர்களிற்கு உதவிசெய்தலைக் குறிக்கும்.

ஆசிரியத்துவக் கல்வியில் ஆசிரியர்களிற்கு அளிக்கப்படும் பயிற்சியானது; இன்றைய சூழலுக்கு தேவையான பல பயிற்சி முறைகளின் கூறுகளை ஒருங்கிணைத்து வழங்கப்படுகின்றது. இதற்கமைய ஆசிரியர் தொழில் வாண்மை விருத்தி, பாடம் சம்பந்தமான விருத்தி, கற்பித்தல் செயன்முறை என்பவற்றிற்கு மேலதிகமான வழிகாட்டலும் ஆலோசனை கூறுதலும், வகுப்பறை முகாமைத்துவம் விசேட உதவி தேவைப்படுவோரிற்கு கற்பித்தல், பாடசாலையும் சமுதாயத் தொடர்பும் போன்ற வேறு பல கூறுகள் ஒன்று சேர் முறையில் வழங்கப்படுகின்றன. அத்தோடு நவீன தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சியும் வழங்கப்படுகின்றது. கணனிக் கருவியும் ஆங்கிலக் கல்வியும் எல்லா ஆசிரியர்களிற்கும் தேவையே என்பதும் வலியுறுத்தப்படுகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக மிக முக்கியமாக கல்விசார் உளவியற் கல்வி மிக அவசியமானதாகின்றது. அத்துடன் ஆய்வுப் பணிகளிலும் ஆசிரியர்கள் ஈடுபட வேண்டும் என்பதும் தற்காலத்தில் மிகவும் வலியுறுத்தப்படுகின்றது.

**கல்வி உளவியல்**

இன்றைய அறிகைச் சூழலில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படும் ஆய்வுத் துறைகளில் ஒன்றாக கல்வி உளவியல் மேலெழுந்து வருகின்றது. கல்வி உளவியல் என்பது கல்வியோடு தொடர்புடைய எண்ணக்கருத்துக்கள், பிரச்சினைகள் என்பவற்றிற்கு உளவியலை பயன்படுத்துவதாகும். கல்வி உளவியலில் கற்றல் சூழ்நிலையில் கற்போரின் நடத்தைகள் ஆய்விற்கு உட்படுத்தப்படுகின்றன. கற்றல் - கற்பித்தல் என்பவற்றை உளவியல் நோக்கில் ஆராயும் அறிகைப்புலமாக கல்வி உளவியல் விளங்குகின்றது. கல்வியியல் தொடர்பாக எழும் பிரச்சினைகளை அணுகுவதற்கும், தீர்வுகளை வளப்படுத்துவதற்கும் கல்வி உளவியல் பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதன் அடிப்படையில் அது ஆசிரியம் சார் உளவியல் என்ற பரிணாமத்தைப் பெற்றுக்கொள்கின்றது. இவ்வகையில் ஆசியத்துவம் சார் கற்கை நெறிகளிற்கு கல்வி உளவியல் சார் கற்கை முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைகின்றது.

ஆசிரியத்துவ வாண்மை விருத்திச் செயற்பாட்டில் மிக முக்கியமான அம்சமாக விளங்குவது சிறந்த அர்ப்பணமுள்ள மனப்பான்மை கொண்ட ஆசிரியர்களை உருவாக்குவதாகும். இச்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள எல்லா நிறுவனங்களும் ஒன்றோடொன்று வேறுபாடான கால எல்லைகள், பாடநெறிகள், பாடக்கட்டமைப்புகள், உள்ளடக்கங்கள், மற்றும் உறுதிப்படுத்தப்படும் மட்டங்கள் கொண்ட பல வகையான பாடநெறிகளுடன் முடிவடைகின்ற தமது வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்திக் கொண்டு செல்கின்றனர். ஆசிரியத்துவப் பயிற்சிகளை வழங்கும் நிறுவனங்களாக கல்வியியற்கல்லூரிகள், ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள், தேசிய கல்வி நிறுவகம், திறந்த பல்கலைக்கழகம், பல்கலைக்கழகங்கள், பதிவு செய்யப்பட்ட தனியார் மற்றும் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள், வெளிநாட்டு அமைப்புக்கள் போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூறலாம்.

மேற்படி கற்கை நெறிகளில் கல்வி உளவியலை அதன் பயன் கருதி ஆசிரியவாண்மை விருத்தியில் உட்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாண்மை விருத்திச் செயற்பாட்டில் பின்வரும் அம்சங்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியதாக உள்ளது.

- கல்வி முறைமைக்கும் சமூகத்தில் உலகளாவிய தகவல் தொழில்நுட்பம் போன்ற புதிய வளர்ச்சியினால் ஏற்படும் அழுத்தங்கங்கள் மற்றும் அதன் மூலம் ஆசிரியர் கல்விக்கு ஏற்படும் பலாபலன்கள்

- கல்வியின் புத்தாளர்களாக ஆசிரியர்கள் காணப்படல்.

- சமூக மாற்றங்களின் போது ஆசிரியர்கள் மாற்று முகவர்களாகச் செயற்படல்.

- கல்விமுறைமையின் சீரமைப்புச் சட்டத்திற்குள் ஆசிரியர் பங்களிப்பை மீண்டும் தீர்மானித்தல்.

- பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களதும் மாணவர்களதும் சனநாயக நடைமுறையை மேம்படுத்தல். இந்த வகையில் சேவை முன்பயிற்சி, தொடருறு ஆசிரியர் பயிற்சி இரண்டும் ஆசிரிய வாண்மை விருத்தியினுள் அடங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சிறந்த ஆசிரியராகச் செயற்பட உளவியல் அறிவு மிகவும் அவசியமானதாகும். சாதாரண நடத்தையுள்ள பிள்ளைகளின் இயல்புகளை அறிந்து கொள்ளவும், மனவெழுச்சிசார் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளவும், கல்விக் கொள்கைகள், முறைகள் தொடர்பான அறிவைப் பெறல், கற்பதற்கான ஊக்கத்தை வழங்குதல், கற்றல் இடமாற்றம் நிகழக் கூடியவாறு கற்பித்தல், மதிப்பீடு தொடர்பான செயல்களில் ஈடுபடவும், ஆலோசனைச் செயற்பாட்டில் ஈடுபடவும், சிறந்த முகாமைத்துவத்தினைப் பேணவும், தன்னைப்பற்றிய தெளிவு பெறவும், தனியாள்களிடையே தொடர்பினை ஏற்படுத்தவும், நேரசூசி தொடர்பான வேலைத்திட்டங்களிற்கும், சமூகத்தலைவராகச் செயற்படவும், ஆசிரியர் பெற்றோருடன் அன்னியோன்னியத் தொடர்புகளைப் பேணவும், கலைத்திட்ட அபிவிருத்தி, பாடநூல்கள் தயாரித்தல் போன்ற செயற்பாடுகளிற்கும் கல்வி உளவியலானது மிகவும் பயன்படுவதால் கல்வி உளவியல் ஆசிரியவாண்மைக்கு மிக அவசியமாகும். இவற்றை பின்வரும் தலைப்புகளில் நோக்கலாம்.

### 1. தனியாள் வேறுபாடுகளைஅறிதல்.

பல்வேறுபட்ட சமூகங்களைச்சார்ந்த வெவ்வேறுபட்ட தன்மையுடைய பிள்ளைகள், பெற்றோர், தனியன்களுடனும் அவர்களது விருத்திக்காக பாடுபடுகின்ற ஆசிரியர்கள் ஒவ்வொருவருடைய தனியாள் வேறுபாடு, தனித்துவம், இயலுமை, இயலாமை போன்றவற்றை சரியான முறையில் இனங்கண்டு அணுகி வழிப்படுத்த வேண்டியுள்ளமையினால், ஆசிரியர்களிற்கு அது தொடர்பான வாண்மைத்துவத்தை வழங்க வேண்டிய தேவை அனைத்து கல்விப்புலம் சார் அமைப்புக்களதும் பாரிய பொறுப்பாகும்.

### 2. கற்றல் சூழலை உருவாக்குதல்.

ஆசிரியர்கள் தமது வகுப்பு மாணவர்களிற்குக் கற்பிக்கும் போது அவ்வகுப்பில் உள்ள ஒரு சில மாணவர்களே அதனை முழுமையாக விளங்கிக் கொள்கின்றனர். ஏனையோர் முழுமையாக விளங்குவதில்லை. கவலையீனம், நடத்தையில் பிரச்சினைகள், ஞாபகக் குறைவு, பலவீனம், விளங்கும் ஆற்றலின்மை, புலக்குறைபாடுகள், மனவெழுச்சிசார் பிரச்சினைகள் போன்றன இதற்கு காரணமாக அமைய முடியும். அவர்களுக்குப் பொறுமையாக உதவி செய்வதற்கும், கற்கக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்குவதும் ஆசிரியரின் முக்கிய பொறுப்பகாவும் இருக்கின்றது. இவ்வகையான சிக்கலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய அறிவு, திறன், மனப்பாங்கினை பெறவும் வலுப்படுத்தவும் கல்விஉளவியல் உதவுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. கற்போனின் உளநலத்தை மதிப்பிடுதல்

ஒரு ஆசிரியன் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களிற்கான கற்பித்தலை வெற்றி கொள்ள வேண்டுமாயின் மாணவர்களதும், ஏனைய சமூகம் சார் தனியன்களதும் உடல் உள மனவெழுச்சி மற்றும் சமூகத்திற்குரிய பிரச்சினைகளை விளங்கிக்கொள்ளல் வேண்டும். கற்போனின் உளநலம் சிறப்பாக இருப்பின் மாத்திரம் கற்றல் சாத்தியமாகும். கற்றலின் மூலமே சிறந்த குடிமகனை உருவாக்க முடியும். ஆசிரியர் மாணவனின் உளநலத்தில் அதிக அக்கறை காட்டவேண்டியது அவசியமாதலால் ஆசிரியருக்கு கல்வி உளவியல் மிக முக்கியமானது.

### 4. சுயவிளக்கம் அடைதல்

சிறந்த ஆளுமை உருவாக்கம், சமூகப்பொருத்தப்பாடு, ஒழுக்க வளர்ச்சி என்பவற்றில் ஒருவனது மனவெழுச்சி சரியாக வெளிக்காட்டப்படாத போது அமைதியற்ற ஒரு மனநிலை தோன்றுகின்றது. இதனால் பிள்ளைகள் மட்டுமன்றி ஆசிரியர்களும் சுயவிளக்கம் பெறுதல் அவசியமாகும். சூழலுக்கு ஏற்ப மனநிலையில் ஏற்படும் மாற்றங்களை அறிவதிலும் நடத்தைகளை முகாமை செய்வதிலும் வாண்மைமிக்க ஆசிரியர் தமது மாணவர்களையும் வழிப்படுத்த வல்லவராவார்.

### 5. ஊக்கப்படுத்தல்

ஆசிரியர்கள் மாணவர்களினைக் கற்றலின் பால் அக்கறையுடன் ஈடுபடுத்த வேண்டும். இதற்கு பல வகையான "ஊக்கல்" களை வழங்க வேண்டிய தேவை உள்ளது. இதற்கு கல்வி உளவியலில் புகுத்தப்பட்டுள்ள ஊக்கல் சார் எண்ணக்கரு முக்கியமானதாக பயன்படுகின்றது. மேலும் ஏதாவது ஒரு விடயத்தை கற்பதனால் ஏற்படும் பயிற்சி அல்லது அனுபவம் வேறு கருமத்தைச் செய்வதற்கு உதவுவது கற்றல் இடமாற்றம் ஆகும். அதாவது பாடங்களை ஒருங்கிணைத்துச் செயற்படுத்தல் என்ற எண்ணக்கரு சார் அம்சம் தீர்மானிக்கப்படுகின்றது. இவ்வாறான செயற்பாட்டிற்கும் கல்வி உளவியல் சார்ந்த பல எண்ணக்கருக்களும் கோட்பாடுகளும் துணைபுரிகின்றன.

### 6. வினைத்திறனான வகுப்பறை முகாமைத்துவம்

ஒரு ஆசிரியர் தனது பாடசாலையிலும், வகுப்பறையிலும் தமது முகாமைத்துவப் பணிகளினை சிறப்பாகச் செய்ய கல்வி உளவியல சார் அறிவு மிக முக்கியமாகக் காணப்படுகின்றது. பொருத்தமான ஒழுங்கமைப்பும் முகாமைத்துவமும் கல்விச் செயன்முறையின் ஜீவ நாடியாகும். ஒழுங்கமைப்பு தொடர்பான பிரச்சினைகள், தனியாட்களிற்கிடையில் ஏற்படும் பிரச்சினைகள், கல்வி முகாமையாளர் நாளாந்தம் எதிர் நோக்கும் பிரச்சினைகளாகும். அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முடிவுகளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எடுக்க வேண்டியதாகின்றது. மேலும் ஒரு மாணவன் தவறு செய்தால் சில இடங்களில் மிகவும் கடினமான உடல் தண்டனைகள் வழங்கப்படுவதனையும் காணமுடிகின்றது. இருப்பினும் கல்வி சார் உளவியல் அறிவைப் பெற்ற ஒருவரின் தண்டனை தொர்பான எண்ணக்கருவில் மாற்றத்தை ஏற்படுத்துவதனை அறிய முடிகின்றது. அதாவது தவறு செய்தவரிற்கு உடல் தண்டனையை வழங்காது தவறு செய்வதற்குரிய காரணங்களைக் கண்டறிந்து அதனைத் தவிர்ப்பதற்கான வழிகளைத் தேடும் ஆசிரியவாண்மைக்கு கல்வி உளவியல் அவசியமாகும்.

### 7. இடம் மாறும் பெற்றோராகச்செயற்படுதல்

பிள்ளைகள், வீட்டில் தாய் தந்தை அன்பை எவ்வாறு தேடுகின்றார்களோ அவ்வாறே பாடசாலையில் ஆசிரியர்களிடமும் எதிர்பார்க்கின்றார்கள். குழந்தைகள் சடுதியாக விழுதல், உரத்த ஒலி கேட்டல், அந்நியர் மத்தியில் இருத்தல், நோய்வாய்ப்படல் போன்ற சந்தர்ப்பங்களில் தாயின் அன்பு மற்றும் பாதுகாப்பைத் தேடுவார்கள். இவ்வாறாகப் பாடசாலையில் பிள்ளைகள் பாதுகாப்பை இழக்கும் சந்தர்ப்பங்களில் ஆசிரியர்கள் பிள்ளைகளின் பெற்றோர் போன்று அன்பு காட்டினால் அவர்கள் காப்புணர்வு பெறுவர். அது மட்டுமன்றி ஆசிரியர்கள் பிள்ளைகளுடன் உறுதியுடன் பாரபட்சமின்றி ஒழுங்குகளை வரையறை செய்து வகுத்தல் வேண்டும். இத்தகைய அம்சங்கள் வெற்றி பெற கல்வி உளவியல் ஆசிரியர்களிற்கு மிக அவசியமாகும்.

### 8. பயனுறுதி உள்ள தொடர்பாடல்

பிறரின் நல்லுறவைப் பெறாத பிள்ளைகள் கல்வியிலும் பின்வாங்குவார்கள். எனவே ஆசிரியராலும் சக மாணவர்களாலும் அன்பு கிடைக்கக் கூடியவாறு பாடசாலைக்கல்வி அமைய வேண்டும். இங்கு ஏசுதல், தண்டனைகள் வழங்குதல் என்பன தவிர்க்கப்படல் வேண்டியதாகும். மேலும் பிள்ளைகள் உயர்ந்த இலக்கை அடைய அல்லது ஒரு சாதனையைச் செய்ய தம்மால் முடியும் என்ற தன்னம்பிக்கை கொண்டவர்களாகவும், உலகில் தாமும் பயனுள்ளவர்கள் என்ற உணர்வு கொண்டவர்களாகவும், தம்மைப்பற்றிய பெறுமானமும் அறிவும் பெற்றுக் கொள்ள விரும்புவார்கள். இப்பருவப் படிநிலைகளிற்கு ஏற்ப பிள்ளைகளை வழிப்படுத்துவதற்கு ஆசிரியர்களிற்கு 'புரொயிட்' போன்றவர்களது கோட்பாட்டு அறிவு மிகவும் வேண்டப்பட்டதாக அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 9. உள்ளடக்கல் கல்வியை வழங்குதல்

வகுப்பறையில் ஆசிரியர்கள் யாவரும் சமப்படுத்தப்பட்ட அதாவது பாரபட்சமற்ற நோக்கில் மாணவர்களை அணுகுதல் வேண்டும். இது உள்ளடக்கல் கல்வியினூடாக வழங்கப்படுகின்றது. அதாவது, விசேடதேவையுள்ள மாணவர்கள், மீத்திறனுள்ள மாணவர்கள், சாதாரண மாணவர்கள் அனைவரும் தத்தமது தேவைகளை நிறைவு செய்யும் நோக்கிலான கல்வி வழங்கப்பட வேண்டும். இத்தேவைகள் அனைத்தும் நிறைவு செய்ய எடுக்கும் முயற்சிகளில் தடைகள் ஏற்படுமானால் பிள்ளைகள் உளநெருக்கடிக்குட்பட்டு மன முறிவுகள் ஏற்படும். எனவே ஆசிரியர்கள் அவற்றை இனங்கண்டு ஒவ்வொரு பிள்ளைகளது தேர்ச்சி அடைவிற்கும் பாடுபட வேண்டியுள்ளதால் ஆசிரியர்களுக்கு அவற்றிற்கு முகம் கொடுக்கக் கூடியதான அறிவை வழங்குதல் அவசியமானது. எனவே இவற்றைக் கருத்தில் கொண்டு ஆசிரியவாண்மைக் கற்கைகளில் கல்விசார் உளவியல் அம்சங்கள் புகுத்தப்பட்டுள்ளன.

## 10. மாணவர்களை வழிப்படுத்தல்

எல்.வி.விகொட்சி என்பவர் “மாணவர்கள் தாமாகக் கற்பதிலும் பார்க்க ஆற்றலுள்ளவர்களின் வழிப்படுத்தலில் கற்கும் போதுதான் வேகமாகவும் வினைத்திறனுடனும் கற்றுக் கொள்ள முடிகின்றது” என்கின்றார். சிந்தனைகளை வளர்ப்பதற்கு; சிந்தனைகளைத் தூண்டக் கூடிய செயற்பாடுகள், கண்டறியும் முறை போன்றவற்றை கற்பித்தலில் ஆசிரியர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் மாணவர்களது உணர்வுகளைப் புரிந்து கொண்டு அவர்களிற்கேற்ற துலங்கல்களை வழங்க வேண்டிய தேவை ஆசிரியர்களிற்கு முக்கியமானதாகக் காணப்படுகின்றது. சிறந்த மனநலம், புலக்காட்சி கொண்ட வாண்மைமிக்க ஆசிரியர்களால் மட்டுமே சிறந்த மனநலம் கொண்ட மாணவர் சமுதாயத்தை உருவாக்க முடியும். எனவே இதற்குரிய வாண்மைசார் பயிற்சிகளை ஆசிரியர்களிற்கு வழங்குவதன் பொருட்டு ஆசிரியத்துவக் கற்கைகளில் கல்விசார் உளவியல் அம்சங்கள் புகுத்தப்படுகின்றது.

எனவே இன்றைய சமகாலச் சூழலில் ஆசிரியத்தொழில் சிக்கலடைந்துள்ளது. இந்நிலையில் ஆசிரியர்கள் தம்முன்னுள்ள சவால்களை வெற்றி கொள்வதற்கு தமது வாண்மையை விருத்தி செய்யவேண்டி உள்ளது. அதேவேளை வாண்மை மிக்க ஆசிரியர் ஒருவருக்கு கல்வி உளவியல் பற்றிய அறிவும் மிக அவசியமானதாகும். இதனாலேயே ஆசிரிய வாண்மைச்செயற்பாடுகளில் கல்வி உளவியலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. இதனை புரிந்துகொண்டு செயற்படுவது இன்றைய ஆசிரியர் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உசாத்துணை நூல்கள்


1. முத்துலிங்கம்.ச (2002) கல்வியும் உளவியலும் கொழும்பு: சேமமடுபதிப்பகம்.

2. ஜெயராசா.சபா (2002) கற்றல் உளவியல் கொழும்பு: சேமமடுபதிப்பகம்.

3. சின்னத்தம்பி.க (2011) கற்போனின் பல்வகைமையும் ஆசிரியரும் சாகரம், பட்டப்பின் கல்வித்தகைமைநெறி, மாணவர் மன்றம், வவுனியா நிலையம்.

4. ராஜேஸ்வரி..ஆ (2012) ஆசிரியப்பணியில் கல்வி உளவியல் பற்றிய அறிவின் முக்கியத்துவம், சாகரம், பட்டப்பின் கல்வித்தகைமைநெறி, மாணவர் மன்றம், வவுனியா நிலையம்.

5. நளினி.வ. (2011) கல்வி உளவியலும் ஆசிரியரும், சாகரம், பட்டப்பின் கல்வித்தகைமைநெறி, மாணவர் மன்றம் வவுனியா நிலையம்.

6. அனுஸ்யா.ச (2008) ஆசிரியத்துவம் ஒரு பார்வை, அகவிழி.

7. தனபாலன்.பா.ஆசிரியத்துவ வாண்மைத்துவத் தேர்ச்சிகள்,கொழும்பு 12,லங்கா பதிப்பகம்.

8. நவரத்தினம்.உ.வகுப்பறையில் ஆசிரியர் வாண்மை,யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் ஆசிரியர் தின வெளியீடு,படி-1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஆசிரியர் கல்வி ஒரு நோக்கு

ஆசிரியர் என்பவர் மாணவர்களின் அறியாமைஎன்கின்ற இருளை அகற்றி அறிவு என்ற ஒளியை ஏற்றுபவர்களாக கருதப்படுகின்றார்கள். இதனாலேயே'' ஆசிரியர்கள் ஞானவிளக்குகள்'' எனசோக்கிரட்டீஸ் குறிப்பிடுகின்றார். அந்தவகையில் மாணவர்களின் அறியாமையை போக்கவிளைகின்ற ஆசிரியர்கள் அறிவில் தேர்ச்சி பெற்றவர்களாகவும் எப்போதும் கற்றுக்கொண்டிருப்பவர்களாகவும் இருக்கவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதனாலேயே''எவன் ஒருவன் கற்கமறுக்கின்றானோ அவன் கற்பிக்க மறுக்கிறான்'' என்று கூறப்படுகின்றது. நாளுக்குநாள் உலகில் ஏற்பட்டுவரும் மாற்றங்களையும் அவற்றினால் ஏற்படும் சவால்களையும் மாணவர்கள் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு ஆசிரியர்கள் மேலான அறிவுள்ளவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகின்றது.

ஆசிரியர்கள் தொடர்ச்சியாகக் கற்றுக்கொண்டிருக்கவேண்டியதேவை இன்று உலகளாவியரீதியில் வலியுறுத்தப்பட்டுவருகின்றது. கல்விமீதானஎதிர்பார்க்கைகள் நாளாந்தம் பூகோளமயமாதலுடன்அதிகரித்துவருகின்றது. இலங்கைஉட்படபல்வேறுநாடுகளில் ஆசிரியர் கல்விக்குநீண்டவரலாறுகாணப்படுகின்றது. கல்வியின் தரம் பற்றி விவாதிக்கின்றஒவ்வொருசந்தர்ப்பத்திலும் ஆசிரியர் கல்விபற்றிவிவாதிக்கப்படுகிறது. கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளினதும் ஆசிரியர் கல்வியினதும் மேம்பாட்டிற்கும் தர முன்னேற்றத்திற்கும் ஆசிரியர்களேமுக்கியதிறவுகோல்களாகஉள்ளனர். ஐக்கியஅமெரிக்காவின் கல்வி முன்னேற்றதிதிற்கான தேசிய நிறுவனம் ஒன்று (1996) பின்வருமாறுமேற்கோள் காட்டுகின்றது. ''ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பாடசாலைகள் கற்றல் முயற்சியாண்மையாகமாற வேண்டும். இன்றையஆசிரியர்கள் பாடசாலைகளில் ஒருபுதியவகிபங்கைஏற்கவேண்டும். அத்துடன் வேறுபட்ட பின்னணியிலிருந்துவரும் இள மாணவர்களுக்கு கற்பிக்கக்கூடிய அளவுவிடய அறிவும் திறனும் கொண்டதாக இருக்கவேண்டும்''. இவற்றின் மூலம் ஆசிரியர்கள் தமதுபாடங்கள் தொடர்பாகபுதியவிடயங்களுக்காகவும் திறன்களுக்காகவும் ஆசிரியர்கள் தமது வாண்மையை தொடர்ந்து விருத்தி செய்யவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இலங்கைதவிர்ந்த ஏனைய நாடுகளில் ஆசிரியகல்வியைப் பூர்த்தி செய்த பின்னரே அவர்கள் ஆசிரியர்களாகக் கணிக்கப்படுகினன்றனர். பின்லாந்துநாட்டைப் பொறுத்தளவில் ஒருவர் ஆசிரியராகநியமனம் பெறுவதற்குஅவர் ஆசிரியகல்வி தொடர்பாக முதுமாணிப்பட்டம் பெற்றிருக்கவேண்டியது கட்டாயமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகையஎண்ணக்கருக்கள் இலங்கையிலும் வலுப்பட்டதன் காரணமாக ஆசிரிய நியமனங்களில் தற்போது விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

ஆசிரியர் கல்விவிருத்தியும்ஆசிரியர் வாண்மைவிருத்தியும் உலகளாவியரீதியில் முன்வைக்கப்படுகின்றது. இவ்வாறாகஉலகரீதியானபோக்கு இலங்கையில் காணப்படுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகும். இலங்கையில் அண்மைக்காலமாக பொதுக்கல்வி தொடர்பான கல்விச் சீர்திருத்தத்திலும் ஆசிரியர் கல்விபற்றி முக்கியமாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி ஆசிரியர் கல்வி பற்றியும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தி பற்றியும் அதிகளவில் கவனம் செலுத்தப்படுகின்றது. உலகில் ஏற்படும் மாற்றங்களுக்காகவும் கல்வியின் பயன்பேறுகளுக்காகவும் கல்வியின் தர முன்னேற்றத்திற்காகவும் ஆசிரியர்களின் வாண்மை விருத்தி செய்யப்பட வேண்டும் என எதிர் பார்க்கப்படுகின்றது. இதற்காக ஆசிரியர்கள் தமதுஅறிவையும் திறனையும் விருத்தி செய்து கொண்டு பாடசாலைகளிலும் சமூகத்திலும் காணப்படுகின்ற மாணவர்களது வேறுபட்ட தேவைகளை நிறைவேற்றுவதற்கு உதவவேண்டும். இதற்காக இலங்கையில் பல்வேறுமுறைகளில் வாண்மை விருத்திக் கல்வியை வழங்குவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கையில் ஆசிரியர்களுக்கானபயிற்சியானது இரண்டுபிரதானமுறைகளில் வழங்கப்படுகின்றது.

1.சேவைமுன்பயிற்சி

க.பொ.தஉயர்தரத்துடன் தேசியகல்வியியற் கல்லூரிக்குதெரிவுசெய்யப்பட்டவர்களுக்குஅக்கல்லூரியினால் சேவைமுன்பயிற்சிவழங்கப்படுகிறது. அத்துடன் பல்கலைக்கழகங்களில் கல்வியியலைஒருபாடமாகக் கற்கின்றபட்டதாரிகளுக்கும் பல்கலைக்கழகத்தினால் கல்விமானிப் பட்டத்தினைவழங்குவதன்மூலம் சேவைமுன்பயிற்சியினைவழங்குகின்றது.

கல்வியியலைஒருபாடமாகக் கற்காதவேறுதுறைப் பட்டதாரிகளுக்கும் ஆசிரியநியமனம் பெறும் பட்சத்தில் அவர்களுக்கும் குறுங்காலசேவைமுன்பயிற்சிகல்வியமைச்சினால் வழங்கப்படுகின்றது.

2.சேவைக்காலப்பயிற்சி

ஆசிரியநியமனம் பெற்றபின்னர் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபட்டிருக்கும்போதுவழங்கப்படும் பயிற்சிசேவைக்காலப் பயிற்சியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது
தேவைக்கேற்பகுறுங்காலப்பயிற்சியாகவோநீண்டகாலப்பயிற்சியாகவோவழங்கப்படும். இப்பயிற்சியைவழங்கும் நிறுவனங்களாக பல்கலைக்கழகங்கள், தேசியகல்விநிறுவகம், கல்வியமைச்சு, ஆசிரிய மத்திய நிலையங்கள் மற்றும் ஆசிரியபயிற்சிக்கலாசாலைகள் என்பனவிளங்குகின்றன.

தற்போதுஆசிரியர்களின் வாண்மைவிருத்திக்காககல்வியமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமுக்கியமானஒருநிகழ்ச்சித்திட்டம் பாடசாலைமட்டஆசிரியஅபிவிருத்திஆகும்.எனினும் இதன் தேவைப்பாடும் முக்கியத்துவமும் உணரப்படாமையினால் பாடசாலைகளில் இது வினைத்திறன் அற்றதாகக் காணப்படுகின்றது.

மேற்காட்டப்பட்டவகைப்பாடுகளில் ஆசிரியவாண்மைக் கல்விமுறைகள் காணப்படுகின்றது.எனினும் ஆசிரியர்களின் வாண்மைத்துவக் கல்வியானதுமேலும் விரிவுபடுத்தல் மற்றும் தரவிருத்திசெய்யப்படவேண்டியிருப்பதோடுமீள்பயிற்சிக்கும் புத்தாக்கத்திற்கும் உட்படுத்தவேண்டியதேவை இன்றுபொரிதும் வலியுறுத்தப்படுகின்றது.

உசாத்துணை:

1.சந்திரசேகரன்.சோ.(2004) கல்விஒருபன்முகநோக்கு,உமாபதிப்பகம்,கொழும்பு

2.சின்னத்தம்பி.மா.(2004),ஆசிரியமுகாமைத்துவம்,விஸ்டம் பப்பிளிக்கேசன்,கொக்குவில்

3.பேர்ணாட்.க.(2015).இலங்கையில் கல்வி.அகரம் அச்சகம்,வவுனியா.

4.Study on the professional development of teachers and teacher educators in Srilanka, National Education Commission: Research series(2014)- No.02

**திரு. க. ஸ்ரீகணேசன்,**
ஆசிரிய ஆலோசகர் (கணிதம்)
தென்மராட்சிக் கல்வி வலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுகமான வாழ்விற்கு சுத்தமான சூழல்

**திருமதி. ஜெயசிறி கவிதா** (B.A.PGDE)
ஆசிரியர்
யா/மீசாலை விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம்

சூழல் என்பது அங்கிகள் வாழ்வதற்குத் தேவையான அடிப்படையில்அமைந்த இயற்கைஅன்னை எமக்குத் தந்த ஒரு கொடையாகும். எம்மைச் சூழவுள்ள அனைத்து உயிருள்ள , உயிரற்ற பகுதிகள் இணைந்ததாகச் சூழல் இயங்கிக் கொண்டிருக்கின்றது. எனவே சூழலின் கூறுகளான உயிருள்ள , உயிரற்றவற்றின் பங்கு அளப்பரியது. ஆயினும் அதனை ஆளும் பொறுப்பு அறிவார்ந்த மனிதர்களாகிய எம்மிடம் விடப்பட்டுள்ளது. அந்தவகையில் எம்மாலேயே சூழலின் இயற்கைத் தன்மைகளை மாற்றியமைத்துப் பயன்படுத்த முடிகிறது. நிலம் , நீர், வளிமண்டலம் ஆகிய விடயங்களில் நிலமும் , அதுசார்ந்த எமது பங்களிப்பினையும் என்ன என்பதை உணர்த்த இக்கட்டுரை முனைகிறது.

எமது யாழ் பிரதேசத்தைப் பொறுத்தவரை பயன்பாட்டில் உள்ள நிலப்பகுதியை விட பயன்படுத்தப்படாத நிலப்பகுதியே அதிகமாகக் காணப்படுகிறது. அதாவது பொதுக் கூட்டங்கள் , குடியிருப்புக்கள் , அதனோடு இணைந்த தோட்டங்கள் , வயல்கள் தவிர , கடற்கரை அதனை அண்டிய பிரதேசங்கள் , கண்டல்கள் , ஏனைய தரிசு நிலங்கள் என்பனவே அதிகமாகக் காணப்படுகின்றன.

அதிகரித்து வரும் மனிதர்களின் அடிப்படைத் தேவைகளை ஈடுசெய்வதற்காக பிரதேச அபிவிருத்தியின் வளர்ச்சிப் போக்கில் நிலம் துண்டாடப்படுவதும் குறித்த நிலத்தில் தொடர்ச்சியான பயிர்ச்செய்கையும் நிலப்பாவனையை அதிகரித்துள்ளன. இந் நிலப் பாவனையில் நன்மைகள் நிறைய உள்ள போதிலும் தீமைகளும் நிறையவே உள்ளன. அவற்றில் சில கூறுகளை இங்கு நோக்குவோம்.

**அ) தாவரப் போர்வையின் அழிவு**

தற்போதய காலநிலை மாற்றங்கள் , இயற்கை அழிவுகள் காரணமாக சூழலின் வெப்பநிலை அதிகரித்து இருப்பது அனைவராலும் உணரப்படுகின்ற ஒன்று. தாவரப் போர்வையானது இயற்கையாக அல்லாது மனித தலையீட்டினால் உருவானவையாக உள்ளன. அபிவிருத்திச் செயற்பாடுகள் காரணமாக இவற்றின் அழிவு தவிர்க்க முடியாதவைதான். உதாரணமாக வீதி அகலிப்புக் காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்துமாமன்றம்



# ஆங்கில மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தசாப்தம் கண்ட பல மரங்கள் நொடிப் பொழுதில் மாண்டதை நாம் யாருமே மறக்க முடியாது. இதற்காக உடனடித் தீர்வை எம்மால் காண முடியாது விடினும் இவற்றினைச் செப்பனிட முயற்சிக்க முடியும் தானே.

அந்தவகையில் சரிந்த ஒரு மரம் பத்தாக உயர எம்மால் பங்களிப்புச் செய்ய முடியுமல்லவா. இதற்குத் தாவரப் போர்வையின் அவசியத்தை உணர்ந்து நாம் அனைவரும் ஒன்றிணைந்து மரநடுகைத் திட்டத்தை முன்னெடுக்க வேண்டும். இம் மரநடுகைத் திட்டமானது தூர நோக்குடையதாக அமையவேண்டும். ஞாபகச் சின்னமாகக் கூட மரநடுகைத் திட்டத்தை முன்னெடுக்கலாம்.

இதற்குப் பொறுப்புள்ள அரச நிறுவனங்கள் , பொது அமைப்புக்கள், தொண்டு நிறுவனங்கள் என்பன முனைப்பாகச் செயற்பட்டு எமது பிரதேச தாவரப் போர்வையை வளமாக்க முன்வர வேண்டும். இதன் மூலம் நிறைவான குளிர்மையை நாம் அனுபவிப்பதோடு நிறைந்த மழைவீழ்ச்சியையும் பெறமுடியும். அது மட்டுமா? எமது வேளாண்மை தற்போது பொய்த்துக் கொண்டு செல்கின்றது. பருவத்திலே உரிய மழைவீழ்ச்சி இன்மையே காரணம். இதனை நாம் நினைத்தால் ஒன்றிணைந்து மரநடுகைத் திட்டம் மூலம் பூரண வெற்றியைப் பெறமுடியும்.

## ஆ) நிலத்தின் பயன்பாட்டில் விவசாய இரசாயனங்களின் பங்கு

மக்களின் பயன்பாட்டில் நிலங்கள் குறைந்து செல்வது என்பது தேவையான ஒன்றே. ஆனாலும் அந்நிலத்திற்கு வினைத்திறனாகப் பயன்படுவது என்பது முக்கியமானதாகும். அதிகரித்த உற்பத்தி வருமானத்தைக் கருதித் தற்போது எமது பிரதேசங்களில் தாவர உற்பத்திப் பொருட்களில் அதிக விவசாய இரசாயனங்களின் பாவனையே காணப்படுகிறது. அவற்றினாலான பாதிப்புக்களை நாம் அனுபவிப்பதும் தெரிந்ததே. ஆனால் அதற்கான தீர்வுதான் என்ன?

சுற்றுச் சூழலுக்கு , எமக்கு தீங்கற்ற வகையில் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டியது ஒவ்வொரு உற்பத்தியாளரதும் கடமையாக அமைதல் வேண்டும். இதற்காகப் பல்வேறு திட்டங்கள் ஏற்கனவே வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றைப் பொருத்தமான முறையில் நடைமுறைப்படுத்தத் திட்டம் தீட்டியவரகள் பொறுப்புக்களை சரியாகச் செய்ய முன்வர வேண்டும்.

இயற்கைக்குச் சார்பான பொருடகளுக்கு விலை நிர்ணயமோ , மானியமோ முறையாக வழங்கப்படின் உற்பத்தியினை மேற்கொள்ள ஊக்குவிக்க முடியும். இதற்காக அவர்களை மாற்றவும் முடியும். படித்தவர்கள் முதல் பாமரர்கள் வரை சூழலை மதிக்கவும் , விழிப்படையவும் செய்யமுடியும். மக்கள் அனைவரும் சூழலை புரிந்து கொண்ட "சூழல் நேயர்" களாக மாற வேண்டும். இதன் மூலம் இயற்கைக்குச் சார்பான செயன்முறைகளைச் செய்ய முன் வருவதன் ஊடாக மனித செயற்பாடுகளின் போதான சூழல் மாசுக்களைக் குறித்த பேண்தகு நிலையில் பேண முடியும் என்பதில் ஐயமில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இ) அன்றாட மனித வாழ்வில் ஒவ்வொருவரும் கழிவுகளை என்ன செய்ய முடியும்.**

மனித வாழ்வும் கழிவும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணைந்தவை என்பதில் சந்தேகம் இல்லை. ஆயினும் மக்களின் தேவையும் தொழில்நுட்ப வளர்ச்சியும் பழையன கழிதலும் புதியன புகுதலும் என்பதற்கு அமைய வளர்ந்து செல்வது யதார்த்தம் உண்மையாகவே கழிவுகளைக் கட்டுப்படுத்தமுடியா விட்டாலும் பொருத்தமான முறைகளினூடாக முகாமை செய்வதன் மூலம் கழிவு வெளியீட்டை குறைக்கமுடியும்.

இதற்காகத் தனிமனிதனும் பொது நிறுவனங்களும் ஒருங்கிணைவதன் மூலம் பொருத்தப்பாடுள்ள , ஏதுவான தாவரப் போர்வையினை விருத்தி செய்வதனூடாக இயற்கையின் கொடையான நீர் , வளி என்பவற்றைச் சுத்தமாகப் பேண முடியும்.

இவ்வாறே நாம் ஒவ்வொருவருக்கும் பெறுமதி வாய்ந்த வாழ்க்கையில் பொறுப்பு மிக்க அதிகாரிகளாக மட்டுமன்றி அனைவரும் இயற்கையை மதிக்கும் "சூழல் நேயர்களாக" இருப்போமாயின் சுத்தமா சூழலும் எமக்கே சுகமான சூழலும் எமக்கே. நோயற்ற வாழ்வும் எமக்கே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியத் தொழிலின் மகத்துவம்

**திருமதி. ச. கோணேஸ்வரன்** (B.A.PGDE)
ஆசிரியர்

எழுத்தறிவித்தவன் இறைவனாவான் எனவும் "மாதா பிதா குரு தெய்வம் " எனவும் போற்றப்படும் சிறப்புடையவன் ஒரு ஆசிரியனாவான். இறைவனின் நிலைக்கு ஆசிரியன் உயர்த்தப்படுவதிலிருந்து ஆசிரியத் தொழிலின் மகத்துவம் இனிதே வெளிப்படுகின்றது. ஒரு உயிர்த்துடிப்புள்ள சமுதாயத்தை உருவாக்குபவன் ஆசிரியன் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் ஒரு ஆசிரியன் தனது சேவையைச் செய்யும் போது உலகைப் படைக்கும் முதன் நூலாகத் திகழ்வான். நல்லதோர் ஆசான் உலகின் ஞான விளக்காகவும் சமுதாய சிற்பியாகவும் விளங்குவான். சமூக சேவைகளில் எல்லாம் சிறந்தது என இன்றும் உலகங் கூறுவது ஆசிரியத் தொழிலையே.விஞ்ஞானம் வளர்ந்து விட்ட மேற்கத்தைய நாடுகளில் கூட ஆசிரியர்கள் தினம் கொண்டாடப்படுகின்றது என்றால் சமூகம் ஆசிரியனை எந்தளவு எடை போடுகின்றது என்பது வெள்ளிடை மலை.

மனிதன் தோன்றி அவனது பண்பாடுகள் வளர்ச்சியடையத் தொடங்கியது முதல் ஆசிரியன் உலகின் முதுகெலும்பாக விளங்கினான்.ஆரம்பத்தில் திண்ணைகளில் தொடங்கிய குரு சிஷ்யைப் பரம்பரை இன்று பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரை பொலிவுற்று திகழ்கின்றது. ஆசிரியர் எனப் போற்றப்படுவோர் யாவரும் சிறந்த ஆசிரியராக மாட்டார்கள், சிறந்த ஆசிரியன் சமூகத்தில் உலாவி வருகின்ற முக்கிய முனையாகத் திகழ்வான். ஆசிரியன் சொல் அடிப்படையிலும் மன அடிப்படையிலும் இளையவனாகவே புலப்படுகின்றான்.ஆசிரியத் தொழிலின் நோக்கு சரியான சமூக விழுமியங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இளஞ்சந்ததியினரை ஆற்றுப்படுத்துவதாகும்.அவ் ஆற்றுப்படத்தலானது ஆசிரியரின் திறமையிலேயே தங்கியுள்ளது.

ஒரு ஆசிரியனாக வரும் மனிதன் தூய இலட்சியங்களை உடையவனாக இருக்க வேண்டும்.மாசற்ற நெஞ்சினனாக திகழ வேண்டும். நல்லாசான் எப்போதும் அறிவுப் பசி உடையவனாகவே விளங்குவான்." கல்வியே வாழ்க்கை வாழ்க்கையே கல்வி" என்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு மாணவர்களின் உள்ளார்ந்த கல்வியை வெளிக்கொணர்தல் அவர்களின் வாழ்வு அவர்களிற்கும் பிறருக்கும் பயனுடையதாக துலங்கச் செய்தல் என்பன ஆசிரியரின் பணியாகும். " நல்லதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளும் போற்றிநற்கலை பேணிக் காத்து அல்லதை அகற்றி நாளும் அறிவினை வளரச் செய்பவர்களும்: ஆசிரியர்களே.

ஆசிரியர் தமது தொழிலில் பற்றுருதி உடையவர்களாக திகழ வேண்டும். “நான் ஓர் சமூகப் பணியாளன்” என்ற உணர்வு ஆசிரியரின் இதயத்திலிருந்து உதயமாகுதல் வேண்டும்.புன்னகை பூத்த முகத்தினனாகவும் நகைச்சுவையாளனாகவும் கடமை வீரனாகவும் மாணவர் மேல் அன்பு பரிவு கொண்டவனாகவும் நல்ல வழிகாட்டியாகவும் திகழும் ஆசிரியனே சிறந்த ஆளுமை உடையவன் எனலாம்.ஆசிரியனின் சேவையிலேயே ஆசிரியத் தொழிலின் மகத்துவம் வெளிப்படும்.

நாட்டிற்குத் தேவையான வைத்தியர்கள், பொறியிலாளர்கள், நல்லாசிரியர்கள், சமயப் பெரியோர்கள், தத்துவ ஞானிகள் சிற்பிகள், இலக்கிய விற்பன்னர்கள், கவிஞர்கள், தொழில்நுட்பவியலாளர்கள் விவசாயிகள் என பலரையும் படைப்பவர்கள் ஆசிரியர்களே. நல்லாசானால் வழிநடத்தப்பட்ட வைத்தியன் காருண்ணியம் படைத்தவனாகவும் நோயாளியின் உளமறிந்து சேவை புரியும் மனப்பக்குவம் உடையவனாகவும் விளங்குவான். பண்பாடற்ற ஒருவன் வைத்தியனால் மக்களின் பூரணமாக அதாவது உளவியல் அடிப்படையில் குணப்படுத்தமாட்டேன். எனவே வைத்தியனோ பிறத் தொழிலாளியோ திறமையுடையவர்களாக விளங்கச் செய்யும் சிறப்புப் படைத்தவர்கள் ஆசிரியர்களே.

ஒரு ஆசிரியனிடம் ஆசிரியத் தொழிலுக்குரிய மகத்துவங்கள் இல்லாவிட்டால் அவனால் வழிநடத்தப்பட்ட மாணவர்களும் அந்த நாட்டில் நோய்க்கிருமிகளாகவே விளங்குவர். குழந்தைகள் பிறரைப் பார்த்து தாமும் அவ்வண்ணமாகும் பக்குவம் படைத்தவர்கள். இத்தகைய பிஞ்சு உள்ளங்களின் மத்தியில் ஒழுக்கம் குன்றிய கல்வித்திறனற்ற ஒரு ஆசிரியன் வேரூன்றுவானேயானால் அந்தச் சமுதாயமே அழிந்துவிடும். எலியட் என்பவர் “ ஒரு ஆசிரியனின் உயர் தகைமையானது சிரமமான பணிகளை ஒழுங்காகச் செய்வதில் மாத்திரம் தங்கியிருக்கவில்லை.தனது உள ஒழுக்க ஆளுமையினாலம் முன்மாதிரியான நடத்தைகளாலும் மாணவர்களை ஊக்குவித்தலில் தங்கியுள்ளது.” என்றார்.சமுதாயத்தின் முன்னேற்றம் கற்றல், கற்பித்தல், செயற்பாட்டில் தங்கியுள்ளது. ஆகவே பாடசாலையிலுள்ள வளங்கள் பௌதிக வளம், மனிதவளம் என்பவற்றை திட்டமிட்டுச் செயற்படுத்துவது. ஆசிரியரின் திறமையில் தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களின் நலனில் அக்கறை கொண்டு அர்ப்பணிப்புச் செயலுடையவராகவும் சமுகத்திற்கு பொறுப்புக் கூறுபவராகவும் விளங்க வேண்டும். இளம் சமுகத்தினருக்கு உயிரூட்டமுள்ள கல்வியைச் சிறப்பாக அர்ப்பணிப்பதற்கு ஆசிரியர்கள் கல்வி என்னும் பயிரை வளர்க்கும் தோட்டக்கரராக தங்களை அர்ப்பணிக்க வேண்டும் இதனையே "பெஸ்ரலோஜி" செயற்படுத்தினார். அவரின் வாழ்க்கை வரலாறே கல்வி வரலாறு 'நான் ஆசிரியராகவே வாழ்வேன் :என்றும் ஆசிரியத் தொழிலினால் கவரப்படுவேன்"என்றார் பெஸ்டலோஜி

மனித சமுதாயத்தின் திசை செலுத்திகளாகத் திகழும் ஆசிரியர்கள் சமுதாயத்தை அதன் இலட்சியத்தை விருப்பு வெறுப்பை கனவை ஒளியை பண்பாட்டை கோட்பாட்டை நாளாந்தம் இளம் சிறார்களுக்கு கற்றுக் கொடுத்தல் அவசியம் ஆசிரியனுக்கும் மாணவனுக்கும் இடையிலான தொடர்பில் ஆசிரியன் மாணவனுக்கு நீதிபதியாக பொலிஸ் அதிகாரியாக நண்பனாக பெற்றோராக ஒழுக்க வழிகாட்டியாகவும் இருத்தல் அவசியமாகும் இதனாற்றான் ஆசிரியத் தொழிலின் மகத்துவம் ஓங்கும்.

**தோன்றுக உலகம் போற்றும் ஆசிரியர்கள்**

**ஓங்குக ஆசிரியத் தொழிலின் மகத்துவம்**

**வளர்க மாணவர் சமுதாயம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேர் வகுப்பறை முகாமைத்துவத்தில் ஆசிரியரின் வகிபாகம்

திருமதி. நாகநந்தினி நந்தகுமார்
(B.A.PGDE)
ஆசிரியர்

## அறிமுகம்

பாடசாலைகள் பிள்ளைகளை சமூகமயப்படுத்தவதற்கு அவசியமான பண்புநலன்களையும் ஆற்றல்களையும் அவர்களுக்குவழங்கும் குறிக்கோள்களுடன் இயங்குகின்றன.இவைசார்ந்தபணிகளும்அவற்றை மேற்கொள்ளும் பணியாளர்களான அதிபர்களும் ஆசிரியர்களும் முக்கியமானவர்கள். இத்தகைய பணியாளர்கள் தமது நடத்தையில் கட்டுப்பாட்டினைக் கொண்டிருப்பதும், கவனமாக முடிவுகளை மேற்கொள்வதும்,முரண்பாடுகளைஇணக்கமாகத்தீர்த்து வைப்பதும் அவசியமாகிறது. இத்தகைய தொழில்சார் மற்றும் கடமைகள் மற்றும் பொறுப்புக்களை திறமையாக மேற்கொள்வதற்கு அவர்கள் தம்மைத் தாமே சிறப்பாக முகாமை செய்வதுடன் தமது நேரம்,தமது ஆற்றல்கள் ,தமது மனப்பாங்குகள் என்பவற்றை எவ்வளவிற்கு நேர்முறையிலும் கவனமாகவும் முன்னேற்றுகின்றனர் என்பது மிகவும் முக்கியமானதாகும். இத்தகைய ஓர் ஆசிரியர் உயிர்த்துடிப்புள்ள மாணவர்களால் ஆனதே வகுப்பறை என்ற அடிப்படை எண்ணக்கருவைக் கொண்டிருப்பதுடன் அவர்கள் மீது அக்கறை கொண்டு சிந்திப்பர்.நல்ல மாணவர் நடத்தைகளை இனங்கண்டு உறுதிப்படுத்த அவரால் முடியும். அவர் விளைதிறன்மிக்க வகுப்பறைச் செயற்பாடுகளை ,வேலை செய்யும் பழக்கத்தை ,நல்ல நடத்தையை உருவாக்கி நிலைபேறாக்குவதுடன் வகுப்பறையின் ஒட்டுமொத்த நிலைவரங்களை மதித்து நடப்பவர்களாக அனைத்து மாணவர்களையும் உருவாக்குவர்.

## வகுப்பறையில் ஆசிரியர் வகிபாகம்

வகுப்பறை முகாமைத்துவத் திறன்களை ஆசிரியர்கள் கற்றிருப்பனும் மாணவரின் நடத்தை ஆசிரியர்களுக்கு சவாலாக அமையும் நிலைமைகளும் வந்து கொண்டே இருக்கும்.இத்தகைய நிலைமைகளைச் சமாளிப்பதற்கு ஆசிரியர் பல்வேறு முகாமைத்துவத் திறன்களை தன்னுள் வளர்ப்பதோடு மாணவர்களுடன் நேரான தொடர்பாடலை வைத்திருப்பதும் எதிர்பார்க்கப்படுகிறது. இவ் வகையில் ஓர் ஆசிரியர் தனது வகுப்பறைச் செயற்பாடுகளைப் பின்வரும் நுட்பங்களைக் கையாள்வதன் மூலம் தனது வெற்றிகரமான நேரான வகுப்பறைக் கற்பித்தலை நிறைவு செய்ய முடியும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1)மனதை அமைதிப்படுத்தல்

ஓர் ஆசிரியர் வகுப்பறையில் கற்றல்-கற்பித்தல் செயற்பாட்டை ஆரம்பிக்கவுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அமைதியான மனதுடன் அதனை ஆரம்பிக்கும்போதுஅது சிறப்பாக நடைபெறும். அதற்கு முன்னர் எமது உள்ளத்தில் இருந்த துன்பம்,பயம்,பதற்றம்,கோபம்,வெறுப்பு போன்ற மறை உணர்வுகளிலிருந்து விடுபட்டு சாந்தம் நிறைந்த மனத்துடன் எம்மைத் தயார்படுத்தும்போது சிறந்த நேரான வகுப்பறைச் செயற்பாட்டை ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் செயற்படுத்த முடியும்.

உதாரணம்-தியானப்பயிற்சி,தளர்வுப் பயிற்சி, மந்திர உச்சாடனம், அக அமைதிப் பயிற்சி .

2)வகுப்பறையில் ஆசிரியர் வகிபாகம்

வகுப்பறையில் ஆசிரியர் வகிபாகம் பின்வருமாறு இருக்கும்போது அவ் வகுப்பறையானது எப்போதும் துடிப்பானதாகவும் நேரான முகாமையாகவும் இருக்கும்.

1. ஆசிரியருடைய அறிவுறுத்தல் எப்போதும் நேராக இருத்தல்.
   உதாரணம்- அமைதியாக இருப்போம்.
   ஒதுக்கப்பட்ட வேலைகளை நேரத்திற்கு நிறைவு செய்வோம்
2. ஆசிரியர் கொள்கை மாறாதவராக இருத்தல்.
3. எப்போதும் அமைதியாகவும் உறுதியாகவும் கதைப்பவராக இருத்தல்.
4. பிள்ளைகள் திருந்தி நடப்பதற்கு சந்தர்ப்பம் கொடுத்தல்.
5. தற்செயலாக நடைபெறும் தவறுக்கு தண்டனை வழங்காதிருத்தல்.
6. சரீர தண்டனை ஒருபோதும் வழங்காதிருத்தல்.
7. முயற்சியைப் பாராட்டுதல் வேண்டும்.
8. மாணவரின் தனிப்பட்ட விருப்பங்கள்,பிரச்சினைகள் பற்றிக் கதைப்பதற்கு நேரம் ஒதுக்குதல் .
9. முன்மாதிரியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.
10. சிறப்பான நடத்தைக்கு உடன் பரிசு வழங்குவதுடன் அது ஏன் வழங்கப்பட்டுள்ளது என்பதைக் கூறுதல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. வகுப்பறையில் மாணவர் இருக்கைகளை ஓர் ஒழுங்கு முறையில் அமர்த்துதல் போன்ற நுட்பங்களைக் கையாளும்போது கற்றல்-கற்பித்தல் செயற்பாடு வினைத்திறனுடையதாக இருக்கும்.

### 3)வகுப்பறையில் விரும்பத்தகாத நடத்தைகளைக் கையாளும் முறைகள்.

வகுப்பறையில் உள்ள ஒவ்வொரு மாணவர்களும்தனித்துவமானவர்கள். எனவேஅவர்களது நடத்தைகள் ஆளுக்காள் வேறுபடும்.இதனால் வகுப்பறைச் செயற்பாடுகள் குழப்பமடையும்.இத்தகைய சூழலில் மாணவர்களிடம் காணப்படும் விரும்பத்தகாத நடத்தைகளை ஓர் ஆசிரியர் எவ்வாறு கையாண்டு தனது கற்பித்தலை மேற்கொள்ளலாம் என்பதை நோக்கும்போது,

#### A))நேர் மீளவலியுறுத்தல்.

மாணவர்களின் நடத்தைகளை மிகச் சிறந்த முறையில் வடிவமைப்பதற்கான மிகச் சிறந்த வழிமுறை நேர் மீளவலியுறுத்தல் ஆகும்.இதனைச் செய்வதற்கு ஆசிரியர் பின்வரும் உத்திகளைக் கையாளலாம்.

1. சந்தோசமாகப் பிள்ளையை ஒருமுறை பார்க்கலாம்.
2. ஒரு முறை கை தட்டலாம்.
3. பிள்ளைக்குக் கை கொடுக்கலாம்.
4. கையின் பெருவிரலை உயர்த்திக் கொடுக்கலாம்.
5. தோளில் அன்புடன் தட்டலாம்
6. சொற்களால் பாராட்டலாம்.

#### B)மறை மீளவலியுறுத்தல்.

நேர்மீளவலியுறுத்தலில் விளைவு ஒன்று வழங்கப்படுகிறது அல்லது சேர்க்கப்படுகிறது. அதனால் அவ் நடத்தை வலியுறுத்தப்படுகிறது. மறை மீளவலியுறுத்தலில் விளைவு ஒன்று அகற்றப்படலாம் அல்லது குறைக்கப்படலாம்.சிறியதோர் விரும்பத்தகாத நடத்தை மாணவரிடம் காணப்படும்போது,

1. குறித்த மாணவனின் அருகில் செல்லல்.
2. எனக்குப் பிடிக்கவில்லை என்று கண்பார்வை தருதல்.
3. சிறிய வசனங்களைப் பாவித்தல்.
4. அவருடைய பெயரை ஒருமுறை அழைத்தல்.
5. அவரைச் சிறிதுநேரம் கவனிக்காது விடல்.
6. எச்சரிக்கைக்கான அட்டையைக் காண்பித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. எச்சரிக்கை தொடர்பாகச் சொற்களால் கூறல்.

8. சலுகைகளைக் குறைத்தல்..

9. வகுப்பிற்கு வெளியே உள்ள அமைதிக் கதிரைக்கு அனுப்பல்.

10. அவருக்கு விருப்பமான எதையும் செய்யச் சந்தர்ப்பம் வழங்காது விடல்.

11. அதிபரிடம் அனுப்புதல்.

12. இனியும் இவ்வாறு செய்தால் நான் கற்பிக்கப்போவதில்லை எனக்கூறுதல்.

**C) வடிவமைத்தல்.**

குறிப்பிட்ட இலக்கை நோக்கி மாணவரை இழுத்துச் செல்வதற்கு இம்முறை உபயோகிக்கப்படும்.

உதாரணம்.-வகுப்பில் எதுவுமே செய்யாது இருக்கும் ஒரு பிள்ளை ஒரு நாள் ஒரு கணக்கினைச் செய்து காட்டும்போது அதைப் பாராட்டலாம். ஆயினும் அந்த நடத்தை உறுதியான பின் இரண்டுகணக்குச் செய்து காட்டும்போதே பாராட்ட வேண்டும்.

**D)ஸ்ரிக்கர் அட்டவணையை வகுப்பில் காட்சிப்படுத்தல்**

வகுப்பறையில் நேரான நடத்தைகளை ஊக்குவிப்பதற்காக ஸ்ரிக்கர் அட்டவணை பயன்படுத்தும் நுட்பமுறையை கையாளலாம்.இதனைப் பயன்படுத்தி தவணை இறுதியில் அல்லது வருட இறுதியில் அதிக ஸ்ரிக்கர்களைப் பெறும் மாணவர்களை அனைத்து மாணவர்களின் முன்னாலும் பாராட்டும்போது ஏனைய மாணவர்களது நடத்தையிலும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

**4)வகுப்பறையில் தண்டனை-**

கோபம் ஓர் உணர்வு.அது எல்லோருக்கும் வரும்.வரலாம். வரவேண்டும்.இந் நிலையில் சில ஆசிரியர்கள் கோபத்தின் வெளிப்பாட்டை மாணவர்களிடம் காட்டுகின்றனர். அதாவது மாணவர்களுக்குத் தண்டனை வழங்கும் உரிமை தனக்கு இருப்பதாக நம்பி அளவுகடந்து மாணவர்களுடன் நடந்து கொள்கின்றனர்.மாணவர்களைத் தவறான நடத்தையிலிருந்து மீளச் செய்வதற்கு உடல், உள ரீதியான தண்டனைகள் வழங்கப்படுகின்றன.இவற்றைத் தவிர்த்து மாணவர்களை அரவணைத்து அன்பால் செயற்படும்போது ஆசிரியர்களது எதிர்பார்ப்பு வெற்றிபெறும்.வகுப்பறையில் தண்டனை வழங்குவதைத் தவிர்க்கும் வழிகளாக,

1. தவறைக் கண்டிப்பதைத் தாமதப்படுத்தல்.

2. தவறு செய்வதற்கான காரணத்தை சரியாகப்புரிதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. தவறின் பின்னணியாகப் புறக் காரணிகளும் உண்டு என்பதை அறிதல்.
4. பிள்ளையின் தேவையைப் பூர்த்தி செய்தல்.
5. தவறான செயற்பாடுகளின் விளைவுகளை முன்வைத்தல்.
6. நல்ல செயற்பாடுகளின் நேரான விளைவுகளை முன்வைத்தல்.
7. மாணவர்களுக்கு இலக்கினை ஏற்படுத்த முயலுதல்.
8. நல்ல செயற்பாடுகளை பாராட்டுதலும் விரும்பத்தகாத நடத்தைகளைக் காணாதது போல் உதாசீனம் செய்தலும்.
9. முன்மாதிரியாக நடந்து கொள்ளல்.
10. சுமுகமாக கலந்துரையாடி முடிவுகளை எடுத்தல்.
11. மாணவர் ஆசிரியர் ஒழுக்கக் கோவையை முன்வைத்தல் போன்றவற்றைக் கடைப்பிடிக்கலாம்.

**நிறைவுரை**

ஆசிரியர்கள் தமது நடத்தையில் கட்டப்பாடு , பொருத்தமான மாற்றங்கள் என்பவற்றை ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்களின் நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.இதற்கான ஆரம்ப ஏற்பாடாகவே வடக்கு மாகாண கல்வி அமைச்சானது UNICEF அனுசரணையுடன் வடமாகாணத்திலுள்ள பன்னிரு வலயங்களிலும் இதனை நடைமுறைப்படுத்தவதற்காக பயிற்றுனர்களுக்கான செயலமர்வுகளை நடாத்தி வருகின்றன. இம்முறையானது பாரம்பரிய ஆசிரியர் - மாணவர் உறவு முறையிலிருந்து நழுவி புதியதொரு உறவுச் சூழலைக் கட்டியெழுப்ப வேண்டிய நிர்ப்பந்த நிலையில் ஆசிரியர் சமூகம் உள்ளது என்பதை தெளிவுபடுத்துகின்றது.தற்போதைய நிலைமையில் அதிகாரமுறையிலிருந்து சனநாயக தலைமைத்துவத்திற்கு மாறுவதற்குத் தேவையான ஆற்றல் ஆசிரியர்களையும் வேண்டி நிற்பது கண்கூடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திக்குழு



# கல்விசாரா ஊழியர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்பப் பிரிவு



# இடைநிலைப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செல்வி. சி.அஜிந்தா
## தரம் 08

### இலங்கையின் முதனிலைத் தகவல்கள்

- முதலாவது பிரதமர் - D.S.சேனநாயக்கா
- முதலாவது ஜனாதிபதி – வில்லியம் கோபல்லாவ
- முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி – J.R. ஜெயவர்த்தனா
- முதலாவது பெண் பிரதமர் - ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா
- முதலாவது பெண் ஜனாதிபதி – சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க
- தேர்தல் மூலம் தெரிவான முதலாவது ஜனாதிபதி - J.R. ஜெயவர்த்தனா
- முதலாவது சபாநாயகர் - சேர் பிரான்ஸிஸ் மொலமுரே
- முதலாவது தமிழ் மொழிப்பத்திரிகை – உதயதாரகை
- முதலாவது சிங்கள மொழிப்பத்திரிகை – சிங்களஹ
- முதலாவது ஆங்கில மொழிப்பத்திரிகை – த கொழும்பு ஜேணால்
- முதலாவது தமிழ்ப்பேராசிரியர் - சுவாமி விபுலானந்தர்
- முதலாவது புகையிரதப் பாதை – கொழும்பு – கண்டி
- முதலாவது அரசியல் கட்சி – லங்கா சமசமாசக்கட்சி
- முதலாவது பிக்கு - மகா அரிட்டன
- முதலாவது பிக்குனி – அனுலாதேவி
- முதலாவது பௌத்த மன்னன் - தேவநம்பியதீசன்
- முதலாவது பௌத்த தூபி - தூபாராம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## செல்வன். அ. அகஸ்ரீன்
## தரம் 07

**மனிதா! நீ சிந்திப்பாய்.**

சிறு மரமாய் நின்ற நாம்
பெரு மரமாய் உயர்ந்து நின்றோம்.
என்றென்றும் பிரியாமல்
உலகிற்கே நிழல் கொடுத்தோம்.
நிழல் கொடுத்த எமை இங்கு
நிர்க்கதியாய் ஆக்கி விட்டார்
ஆறறிவு என்று சொல்லும் அறிவு
கெட்ட மனிதர்கள்
பூமிக்கு நிழல் கொடுத்தோம்
மழை பொழியக் காரணமானோம்
புரியாமல் எமை இங்கு
அழிப்பதற்குத் துணிந்தார்கள்
பூமியில் மழை இல்லை
பயிர் பச்சை தானுமில்லை
புலம்புகின்றான் எந்நாளும்
புரியாமல் தானிங்கு
வணங்குகின்றோம் இயற்கை தன்னை
என்றிங்கு கூறுகின்றான்
வாயில்லா ஜீவனுக்கு வயிறார
உணவளித்தோம்
எம் இனத்தை அழித்து விட்டால்
ஏதுனக்கு எதிர்காலம்
பணத்துக்காய் எமை அழித்தாய்
எம் சந்ததியை அழிக்கின்றாய்
திங்கள் தன்னில் ஒரு மரம்
நட்டு நீ வைத்து விடு
மனிதா நீ சிந்திப்பாய்
எமை இங்கு வாழ வைப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## Mas. I. Aniton

# Science and technology

Science and technology give convenient and comfortable worth living lives to man by the invention, discoveries, exploration, researches and studies. Science and technology has helped people to control over nature. Large varieties of equipment and appliances have been invented; They have completely changed the trend of human life. Modern equipment at hospitals save hundreds of lives from sure death. Therefore the mortality is reduced when we compare with past years. Science goes deep into the causes of life nature, evolution, interaction, and experiments. Science is a true living force in a society. The proved facts and evidences help to make the secure lives by the invention of the scientists. There are factories run with more production than the previous time. Therefore the development of many countries depends on the faster easier use of the technology. The increase of people's need result the creation of the world of modern science and technology

---

## வசந்தத்தின் வித்துக்கள்

வசந்தத்தின் வித்துக்களே....
சமுதாயத்தின் பலம்மிக்க தூண்களே...
உணர்ச்சித் துடிப்பும்
கற்பனைக்கு செயல்வடிவம் கொடுப்பதும்
உன் வசந்த காலப்பருவம்
ஓடிக் கொண்டிருக்கும் நதியும்
உலாவிக் கொண்டிருக்கும் காற்றும்
போன்றதே. உன் இளமைப் பருவம்
இளைஞனே நீ....
கோடைகாலம் போல வந்திடாதே
உன் முதுகெலும்பு முறிந்து
முடமாகிப் போகாமல்
சாதிக்கப் பிறந்தவன் நான் என்று
உன் சந்ததி பறைசாற்றட்டும்
புதிய விடியலைத் தேடிப் புறப்படாதே
புதிய விடியல் நீயாக இரு.



**செல்வன் மு. அபிஷன்**
**தரம் 05**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**Miss. T. Apisha**

**Grade 9**

## Collective nouns

| | |
|---|---|
| A heard of cattle | A litter of puppies |
| A bunch of ducks | A flock of pigeons |
| A brood of chicken | A herd of cows |
| A drove of pigs | A bunch of flowers |
| A herd of goats | A pack of wolves |
| A chain of island | A swarm of bees |
| A galaxy of stars | A kit of pigeons |
| A panel of experts | A shelf of books |
| A fleet of ships | A heap of stones |
| A group of work men | A bunch of bananas |



**Miss K.Ashwini**

**Grade 05**

# My home

My home is a pleasant place. The name of my home is Gurustan. It is located at Meesalai. There are three bed rooms, a living room, a shrine room, a dining room and a kitchen in my home. There is an attached bathroom too.

There is a beautiful flower garden in front of my home. There is a vegetable garden at the back. I sweep the rooms every morning and keep my home neat and tidy. There are four members in my home father, mother, myself, and my little sister We are a happy family. I love my home, sweet home.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Miss I. Jaseena

Grade 7

**Animals and their young**

cow- calf
giraffe- calf
camel- calf
alligator- hatchling
bee- larva
cat- kitten
pig- piglet
lion/fox- cub
deer-fawn
horse- foal
duck-ducklings
dog –puppy
tiger- cub
fox- pup
bat-pup
butterfly- caterpillar
sheep- lamb
hen-chick
bird- nestling
elephant- calf
goat-kid
goose –gosling



Miss K.Kanitha
Grade 03

## My School

The name of my school is J/Meesalai vigneswara Maha vidyalaya. It is at Meesalai west, Meesalai. My school is big and mixed school. There are classes from grade one to thirteen. It has library laboratory, computer unit, music and dance rooms and a staffroom. It has an assembly hall and a playground. There are nearly hundred and ten students and twenty six teachers in my school. I love my school very much.



**MISS M. KETHUSA**

**GRADE - 8**

## The time I spend in my garden

I enjoy gardening. I sow the seeds in my garden; they come with sprouts that make me happy. After some days they come with long green arms and strong stems. Whenever I'm free I spend my time in my garden. That gives me cold fresh breeze. Mowing, trimming, raking, planting seedlings, weeding, digging, spading and tilling give me good exercise to my whole body. I feel physically and mentally healthy when work in my garden.

The fresh vegetables give the pleasure to all in my family. I could harvest fresh vegetables by using the manure to grow my plants healthily and natural way to eradicate pests from my garden. A little income, I could earn from my garden with an excess amount of vegetables. The friendship of my neighbors also grows well by sharing the vegetables from my garden.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## MISS M. KIRUSANTHY

### GRADE - 07

**Prevention is better than cure.**

